
www.padippakam.com

பிப்ரவரி
2004
ரூ.15

# புதிய கோடாங்கி



www.padippakam.com


புதிய கோடாங்கி

பிப்ரவரி 2004
மலர் 3 - இதழ் 8

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு - உள் ஓவியம்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம்
ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்
ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2
ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204

Kodangi@hotmail.com
kodangi@hotmailgroups.com


## தலையங்கம்

பாராளுமன்றத் தேர்தலையொட்டி விதம் விதமான கூட்டணிகளும் அறிக்கைகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தலித் இயக்கங்கள் தனித்துப் போட்டியிட முடிவெடுத்தது பாராட்டுக்குரியது. எனினும் அதிமுக-பாஜக கூட்டணியில் சேரத் தயார் என்றும், பாஜக நீங்கிய அதிமுகவில் சேரத் தயார் என்றும் மாறி மாறி அறிக்கைகள் வந்து கொண்டிருப்பது கொள்கையற்ற பதவிசார்ந்த சந்தர்ப்பவாதத்தில் இயக்கங்கள் ஊசலாடுவதைத் தெரிவிக்கின்றது.

தனித்துப் போட்டியிடத் தயார் என்று அறிக்கை விட்டிருக்கிறார்களே தவிர அதற்காக மக்களிடம் வேலை செய்தார்களா? நாளது தேதிவரை தமிழ் ஈழம், தமிழ்த் தேசியம், தமிழ்ப் பெயர் மாற்றம் என்று நடந்த பல்வேறு மெகா கூட்டங்களில் தோளோடு தோள் நின்றவர்கள், பொடா எதிர்ப்பில் ஒன்றாக நின்றவர்கள் தனித்துப் போட்டியிடும் தலித் இயக்கங்களுக்கு எந்த வகையில் ஆதரவு தருவார்கள்?!

மாவட்டவாரியாக வன்கொடுமை எதிர்ப்பு மாநாடுகள், தலித் மக்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டங்கள், கிராம அளவில் அவர்கள் பிரச்சனைகளை முன்னெடுத்தல், தலித்துகளுக்கு நிதி ஒதுக்கீடு குறித்த தொடர் போராட்டங்கள், எஸ்ஸி, எஸ்டி ஊழியர்களின் நலன்களை முன்னெடுத்தல், தலித் பெண்களுக்கு ஒதுக்கீடு கேட்டுப் போராடுதல், தனியார் துறையில் ஒதுக்கீடு குறித்த தொடர் போராட்டங்கள், அரசின் தலித் விரோதப் போக்கை அவ்வப்போது சுட்டிக்காட்டி ஆர்ப்பாட்டங்கள், ஊர் வலங்கள், அமைப்பில் உள்ளவர்களுக்கு முறையாகப் பயிற்சி அளித்தல் என்ற பல வேலைகளைத் தொடர்ந்து செய்திருந்தால் மட்டுமே தனித்துப் போட்டியிடத் தயாராயிருக்க முடியும். அப்படியில்லாவிட்டால் இப்படி ஊசலாடிக் கொண்டே இருக்க வேண்டும். இனியாவது இயக்கங்கள் இதை உணர்வார்களா?

பாராளுமன்றத் தேர்தலுக்கான தலித் அஜெண்டா தயாராகிக் கொண்டிருக்கிறது. பல்வேறு தரப்பிலிருந்து கருத்துக்கள் வந்த வண்ணமுள்ளன. அடுத்த இதழில் இவை தொகுத்து முன்வைக்கப்படும். அடுத்த இதழில் சென்னை கிறித்துவக் கல்லூரி பேராசிரியர் பு. ஜார்ஜ் எழுதியுள்ள 'பாரதியின் பௌத்த வெறுப்பும், இந்துத்துவப் பற்றும் - ஒரு தலித் பார்வை' என்ற ஆய்வுக் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது.

●

www.padippakam.com

# உள்ளே...

சோழி - தகவல்.................................................சந்ரு 2

நிலம் - வரி - சாதி.................................................சாக்கியன் 7

வலிமையும் வறுமையும்.................................................நிகழ் அய்க்கண் 10

உடல் மொழி.................................................சிவகாமி 12

பொதுச் சொத்துக்களும் தலித்துகளின் உரிமைப் போராட்டமும்..........மா. வேலுசாமி 18

கருவிலிருந்து கல்லறை வரை.................................................அ. இருதயராஜ் 23

கறுப்பு அறிக்கை - கவிதை................................................. 25

கேள்வி-பதில்.................................................முனிமா 26

கழுவுதல் - சிறுகதை................................................. கலாமோகன் 29

வல்லினம் - ஒரு பார்வை.................................................சாக்கியன் 34

சிவ-சக்தி-அணு-காஷ்மீர் பற்றி சில குறிப்புகள்.................................................எச். பீர் முஹம்மது 37

தேவதேவன் கவிதைகள்................................................. 38

நிகழ்ந்தனவெல்லாம் வரலாறல்ல - எதிர்வினை.................................................இரா. பழனிச்சாமி 39

சந்தேகங்களின் தொகுப்புகள் பெருகட்டும்.................................................அ. ராமசாமி 42

நமக்கான விருட்சம் - கவிதை.................................................பாரதி நிவேதன் 44

செய்தி விமர்சனம்.................................................நிகழ் அய்க்கண் 45

இன்றில் வழிந்த நேற்று - கவிதை................................................. ப்ரதிபா ஜெயச்சந்திரன் 46

தலித் தேசியம்.................................................கௌதம சன்னா 47

தலித் குடிகளின் மறுக்கப்பட்ட வரலாறு.................................................அ. பெ. சா 49

எதுக்கு பொய் சொல்லனும் - சிறுகதை.................................................நீலவன் 51

குணபலன் ஆருடம் - கவிதை................................................. வெ. வெங்கடாசலம் 53

நிகழ்வுப் பதிவு................................................. 54

உலகமயமாக்கம் - வகுப்புவாதம் - தலித்துகள்.................................................அசோக் பார்தி 56

சுயம் - கவிதை.................................................விழி. பா. இதயவேந்தன் 63

முகத்தில் முகம்................................................. 64

படிப்பகம்

www.padippakam.com

■ சந்ரு

# சோழி - தகவல் 1



தோன்றலுக்கு வார்த்தைகளையும், வடிவங் களையும் தேடிக்கொள்ளும் புத்தி சோழி ஒன்றை உருட்டியது.

**கருப்பாயி கிழவி**
**வெங்கடாசலபுரம்**

பல வருடங்களாக மழை பொய்த்து விவசாயம் கெட்டது. தெரு நாய்களின் பசிக்கு சிறுவர்களின் மலம் கூட கிடைக்காத அளவு கிராமங்களில் பஞ்சம். பஞ்சம் பிழைக்க மருமகன் நாய், மாமன் நாயைத் தேடி நகரத்திற்கு வந்து சேர்ந்தது. தன்னைத் தேடி வந்த மருமகனுக்கு முழுங்கை நீலம் நெய்மீன் கருவாட்டை விருந்து படைத்து மாமன். காலையும் மாலையும் அருசியான கருவாட்டு விருந்தில் இரு நாட்கள் கழிந்தன.

அன்று இரவு "மாமா உங்கள் கொழுத்த உடலின் ஆரோக்கியத்திற்கும் காரணம் புரிந்து விட்டது. நீங்கள் எனக்கு வைத்தது போல் நானும் உங்களுக்கு விருந்து படைக்க விரும்புகிறேன். எனவே தங்களுக்கு கருவாடு கிடைக்கும் ரகசியத்தை எனக்கும் சொல்லுங் கள்" என்று கேட்டது மருமகன் நாய்.

"மருமகனே, விருந்துக்கு வந்த நீ இன்னும் இரண்டு நாட்கள் தங்கி சாப்பிட்டு ஓய் வெடுத்து உன் கிராமத்திற்கு நல்ல முறையில் திரும்பிப்போ" என்றது மாமன் நாய்

அன்று இரவு முழுவதும் மருமகனின் கஷ்ட நஷ்டங்களை கேட்ட மாமன் சற்று இரக்கம் கொண்டது.


"கவனமாய் கேளும் மருமகனே, ஊர் கடைவீதியில் கடைசியாய் இருக்கிறது கருவாட்டுப் பேட்டை. அதை சுற்றிலும் கம்பி வேலி போடப்பட்டிருக்கும். அவற்றில் வடக்கு ஓரமாக ஒரு கம்பி விலகி இருக்கும். அதன் வழியாக பேட் டைக்குள் செல்ல வேண்டும். கடை, கடையாக பலவகை கரு வாடுகள் குவிக்கப்பட்டிருக்கும். அவை களுக்கு காவல்காரர்கள் நிற்பார்கள். கரு வாட்டை நாம் எடுக்கும் முன் காவல்காரர்கள் நம்மை அடிக்கமாட்டார்கள். நாம் கரு வாட்டை கவ்வியதும் கைத்தடியால் நம்மை அடிப்பார்கள். நம்மீது அடிவிழுவதைத் தவிர்த்து பேட்டைக்குள் நுழைந்த வழி மற வாமல் தப்பித்து ஓடி வர வேண்டும். அடி நம்மீது விழுந்தாலும் வாய் திறந்து கத்தக் கூடாது. வாயில் கவ்விய கருவாடு கீழே விழா மல் காவல் காரர்களை எதிர்த்து தாக்குவது போல் உரும வேண்டும். கர், புர் என்று உறுமிக்கொண்டே பாதை மறவாமல் தப்பித்து ஓடி வர வேண்டும்" என்று கருவாடு கிடைக்கும் ரகசியத்தை மருமகனுக்குச் சொன்னது மாமன்.

"நன்றி மாமா, ஊர் ஜனம் விழித்திருக்க கலிப்பானைகளை திருடுவதில் நான் தேர்ச்சி பெற்றவன்" என்று சொன்ன மருமகன் மறுநாள் காலையில் கடைவீதிக்கு சென்றது. கருவாட்டுப் பேட்டையின் வடக்குப் புறமுள்ள திருட்டு வழியாக பேட்டைக்குள் நுழைந்தது. பெரிய கருவாடு ஒன்றை தன் வாயில் கவ்வியது. ஓடிவந்த காவல்காரர்கள் மருமகன் நாய்மீது கைத்தடி களை வீசினார்கள். ஒன்று இரண்டு அடிகளுக்கு தப்பியது. தொடர்ந்து வந்து அதன் மீது விழுந்த அடிகளால் வலி பொறுக்காமல் வாய் பிளந்து கால், கால் என்று கத்தியது. கருவாடு கீழே விழுந்தது. திருட்டு வழி மறந்து போனது. பேட்டைக்குள் சுற்றி சுற்றி ஓடி அடிவாங்கி, மோண்டு, பேண்டு இடுப்பு ஒடிந்து கீழே விழுந்தது மருமகன் நாய். அதை காவல்காரர்கள் இழுத்துவந்து குப்பைத் தொட்டியில் போட் டார்கள். இந்த செய்தியை கேள்விப்பட்டு, வந்து, தன் மருமகனை கைத்தாங்கலாக தன் தெருவிற்கு கூட்டி வந்து மருத்துவம் பார்த்து, உடல் சற்று குணமானதும் கிராமத்தை நோக்கி ஓடிவிடும் படி மருமகன் நாயை விரட்டி அடித்தது மாமன் நாய் ●



படிப்பகம்

www.padippakam.com



**வீரய்யா**
**ராஜபாளையம்**

சோழிகளை ஆறு, முப்பத்தி ஆறு, நாற்பத்தி எட்டு, ஐம்பத்து ஏழு, முன்னூறு என்று பல எண்ணிக்கையில் சோதிடர்கள் பயன்படுத்துகிறார்கள். பிடித்த கைக்குள் கிடைத்த. சோழி களின் எண்ணிக்கை என்றும், மலர்ந்த சோழி, குவிந்த சோழிகளின் எண்ணிக் கைகள் என்றும் பல்வேறு விதமாய் கணக்கிடுகிறார்கள். சோழி எண்ணிக்கை களோடு கிரகங்களையும், நட்சத்திரங் களையும் எண்ணிக்கை சேர்க்கிறார்கள். அதன் தீர்வுகளால் சோதிடர்கள் நம் வாழ்க் கைக் கான வழிமுறைகளை சொல்கிறார்கள்.

உலகில் நமக்கு புரிபடாத சக்தி ஒன்று இருக்கிறது. அதை தன் அனுபவத்தால் அறிந்த சோதிடர் நமக்கு நல்வழி காட்டு கிறார் ●

**துரைமுருகன்**
**திருநெல்வேலி**

சோழிபோட்டு கறி சொல்லுபவர்கள் கேரளாவில் அதிகம் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சோழி போட்டு குறிசொல்வதை நான் இதுநாள் வரை பார்த்ததில்லை. எனது நண்பர் ஒரு பெரியவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். நமக்கு என்ன நோய் வந்தாலும் அந்த இடத்தில் பெரியவர் தன் இடது கை விரல்களால் தொடுவார், தன் வலது கையில் பிடித்திருக்கும் சிறு கண்ணாடியில் அவர் தன் முகத்தை பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் நோய் நம்மை விட்டுப் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி ஒரு அபூர்வ சக்தி வாய்ந்தவர் அந்த பெரியவர். ஆனால் அவர் கண்ணாடியில் தன் முகம் பார்த்து, யாருக்கும் நோய் குணமானதை நான் இதுவரை நேரில் பார்த்ததில்லை ●

**பிரதீவி**
**சென்னை**

மக்களிடையே பல ஆயிரம் ஆண்டுகளா கவே குறிகேட்பதும், குறிசொல்லுவதுமான பழக்கம் இருந்து வந்ததற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கிறது. ஒவ்வொரு நாட்டு மக்களும் வெவ் வேறு காலங்களில் பலவகையான வழிமுறை களைக் கையாண்டு குறி சொல்லி வந்திருக்கி றார்கள். குறி சொல்வதைப் பற்றி ஆய்வுப் புத்த கங்கள் நிறைய உண்டு. முகராசி, கைராசி, பிறந்த நேரம், (சாதகர் தன்னை வந்து) சந்தித்த நேரத்தை கணித்துச் சொல்லி சாமி ஆடி அருள்வாக்குச் சொல்வது மற்றும் மை, யந்திரம், பூ, சோழி போட்டுப் பார்ப்பது. பிரம்பு, வேப்பிலை, திருநீர், தண்ணீர் அடித்துப் பார்ப்பது. ஓலை சுவடு, கிளி, எலி எடுக்கும் அட்டைகளில் ராசி பலன் பார்த்துச் சொல்வது என்று பலவகை. இதில் சிக்கலான கணித முறைக்காரர்கள், ஆசீர்வாதம் மட்டும் வழங்குபவர்கள், சாதகரிடம் காசு பறிப் பதையே குறியாகக் கொண்ட வர்கள் என்று சோதிடர்கள் பல பல தரத்தினர் குணத்தினர். "மழை வரும் குடை எடுத்துக் கொண்டு போ" என்ற அளவில்தான் எந்த சோதிடராலும் சொல்லமுடியும். குறிப்பாக பிரசன்ன சோதிடத்தைப் பற்றிய கதை ஒன்று உண்டு.

கேரளத்தில் புகழ்பெற்ற பிரசன்ன சோதிடர் குருமேடையில் அமர்ந்திருக்கிறார். அவரின் சீடர்களும், பிரசன்னம் கேட்க வந்திருப்ப வர்களும் அவரைச் சுற்றி அமர்ந்திருக்கிறார்கள். ஒருவர் பிரசன்னம் கேட்டார் "ஓடிப் போன என் மனைவி திரும்பி வந்து என்னுடன் குடும்பம் நடத்து வாளா?" என்று.

அப்போது அங்கு வந்த சோதிடரின் மனைவி சொன்னார் "நீர் இறைக்கும் போது வாளி அறுந்து கிணற்றில் விழுந்துவிட்டது. இங்கிருந்து யாரேனும் வந்து கிணற்றில்



படிப்பகம்

www.padippakam.com

இறங்கி வாளியை எடுத்து எனக்கு கொடுத்து உதவுங்கள்'' என்று.

சோதிடர் தன் சீடர்களைப் பார்த்து "நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்து சம்பவங்களும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கொண்டவை. அவற்றில் நம் மனதில் பட்ட ஒரு சம்பவத்தையும், சாதகர் நம்மிடம் கேட்ட கேள்வியையும் பொருத்திப்பார்த்து பிரசன்னம் சொல்வது சிறப்பான அணுகுமுறை'' என்றார்.

"வாளிக்கயிறு, தாலிக்கு ஒப்பானது, அது அறுந்து போனதால் அவரது மனைவி இவரிடம் திரும்பி வரமாட்டார்'' என்று சீடர்கள் பிரசன்னம் சொன்னார்கள்.

"கிணற்று நீர் குடும்பத்திற்கு ஒப்பானது. வாளியால் பிரிக்கப்பட்ட கிணற்று நீர் கயிறு அறுத்ததால் திரும்பவும் கிணற்றுக்கு வந்து சேர்ந்தது. ஆகையால் ஓடிப்போன இவரது மனைவி திரும்ப வந்து இவரோடு குடும்பம் நடத்துவார்'' என்று ஒரு சீடர் மட்டும் பிரசன்னம் சொன்னார்.

சாதகரைப் பார்த்து "உங்கள் மனைவி திரும்பவந்து உங்களோடு குடும்பம் நடத்துவார்''என்று சோதிடரும் சொல்லி, சாதகரை வழி அனுப்பி வைத்தார். நோய்க்கு மருத்துவர், பேய்க்கு பூசாரி என்பது நமது பழக்கத்தில்இருக்கிறது. நாம்எதையும்அதன்இயல்பில் யோசித்து அணுகுவதில்லை. ஆகவே மருத்துவரும், சோதிடரும் தங்களுக்கு ஏற்றவாறு நம்மை ஏற்றியும், இறக்கியும் வழி நடத்துகிறார்கள் ●

## பாவா சாமி
**திண்டுக்கல்**

அன்று எங்கள் முன்னோர் சேர்த்து வைத்த கோடிக்கணக்கான சொத்துகளை இன்று எங்களால் காப்பாற்றி வைக்க முடியவில்லை. குடும்பச் சொத்து அனைத் தையும் இழந்து தலைமுடி, தாடி வளர்த்து சாமியாராக போய்விடலாம் என்று பலவருடங்கள் அலைந்து கொண்டிருந்தேன். இறுதியாக கலியுக அகத்திய சாமி அவர்களைக் கண்டு அவர் ஆசியால் மன அமைதி அடைந்தேன். தாடி, சடைமுடி எல்லாம் நீக்கிவிட்டேன். குடும்பம் நடத்துகிற அளவிற்கு என் வியாபாரத்தில் வருமானம் வருகிறது. இப்போது நிம்மதியாக வாழ்ந்து வருகிறேன்.

கலியுக அகத்திய சாமி அவர்கள் இந்த மாவட்டத்திலுள்ள சாமிகளுக்கு எல்லாம் சாமி. இந்த ஊரில் பூட்டுச் சாமி என்பவர் அருள் வாக்கு சொல்லி வந்தார். ஒருநாள் தன்னிடம் அருள் வாக்கு கேட்டுவந்தவர்களில் ஒரு பெண் மணியைப் பார்த்து "நீ ஒரு பில்லி சூனியக்காரி'' என்று சொல்ல, அந்த பெண்மணியும் மௌனமாய் அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றுவிட்டார். அந்த நேரத்திலேயே பூட்டுச் சாமியின் நாக்கு செயல் இழந்துபோனது. வாய் பேச முடியாமல் பல மருத்துவர்களையும், பல சாமியார்களையும் சந்தித்து பயன் இல்லா மல், நமது கலியுக அகத்திய சாமியின் அருள் பெற்று பூட்டுச்சாமி தன் பழைய நிலைக்கு வந்தார். இன்றும் பூட்டுச்சாமி நல்ல முறையில் அருள் வாக்கு சொல்லி வருகிறார்.

தலைமேல் இருக்கும் அகத்திய சாமியாரின் சக்தியை தன்னிடம் வருபவர் களுக்கெல்லாம் பூட்டுச்சாமி சொல்லி வந்தார். இதை ஞானசம்பந்தர் என்ற குருக்கள் அகத்தியரும், பூட்டுச்சாமியும் கூட்டுச் சேர்ந்து விளம்பரம் தேடிக்கொள்வதாகவும், அனைத்தும் பொய் என்றும் தன்னைத் தேடிவரும் சாதகர்களிடம் சொல்லி வந்தார். இச்செய்தியை நமது கலியுக அகத்திய சாமியிடம் சீடர் ஒருவர் சொன்னார். சீடரிடம் "இன்று தேதி இரண்டு. வரும் பத்தாம் தேதி மாலையில் ஞான சம்பந்த குருக்களிடம் சென்று நான் நலம் விசாரித்ததாக சொல்'' என்று அகத்திய சாமி கட்டளை இட்டார்.

அந்த ஆணைப்படி சீடரும் ஞான சம்பந்த குருக்களை தேடி சென்றார். கை கால்களில் விலங்கிடப்பட்டு குருக்கள் பைத்தியம் பிடித்து கிடப்பதை கண்டார். பல மாதங்கள் குருக்கள் பைத்தியமாகவே அலைந்து திரிந்தார். அவரின் குடும்பத்தார்கள் மலை மேல் கலியுக அகத்திய சாமியை தரிசித்து மன்னிப்பு பெற்றார்கள். அகத்திய சாமி அவர்கள் கொடுத்த திருநீரை ஞான சம்பந்த குருக்களின் நெற்றியில் பூசியதும் பைத்தியம் தெளிந்தது. அகத்திய சாமி அவர்களின் உண்மையான சக்தியை இன்றும் ஞான சம்பந்த குருக்கள் அனைவருக்கும் சொல்லிக் கொண்டு தன் குடும்பத்துடன் சுகமாக வாழ்ந்து வருகிறார் ●



படிப்பகம்

www.padippakam.com

### அரிவாள் சாமி
### தேனி

மனிதர்களின் வாழ்க்கை நடைமுறைகளையும், அவர்களின் ஆசாபாசங்களையும், இன்ப துன்பங்களையும் நாம் கவனிக்கும் வழிமுறையில் நாம் நம்மிடத்தில் ஒரு சக்தியை காண்கிறோம். அதை நமக்குள் முறைப்படுத்தி நமது சுயவிருப்பு வெறுப்பு இல்லாமல் கேட்பவருக்கு தெளிவாக பதில் சொல்வதே அருள் வாக்கு.

நம் மனதை நாமே சுத்தம் செய்வதற்கும் நமக்குள் இருக்கும் சக்தியை நாம் நம்புவதற்கும் நாம் சில பூஜை முறைகளை கைக் கொள்ள வேண்டும். அப்போது மக்களுக்கு நம்மீது நம் பிக்கை வளரும். நாம் சொல்கிற அருள்வாக்கு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். அதுதான் மக்களுக்கும் நமக்கும் நல்லது. அனைவருக்கும் அனைத்து சுகமும் கிடைக்கும். வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் கிழக்கு வாசல் முனீஸ் வரனை வேண்டி பூஜை செய்ய ஆரம்பித்ததும் எனக்குள் அருள் உண்டாகும். அப்போது என்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. எப்போது அருள் என்னை விட்டு விலகும் என்றும் எனக்குத் தெரியாது.

ஆனால், இருவர் கூர்மையான பெரிய அரி வாளை பிடித்து நிற்க, நான் அதன் மீது நின்று அருள்வாக்கு சொல்வதாக அங்கு கூடி நின்ற மக்கள் சொல்வார்கள்.

இறைவன் படைப்பில் அனைவரும் சாதா ரண மனிதர்கள்தான். கடந்த இரண்டு மாதங்களாக எனக்கும் நேரம் சரியில்லை. ஆகவே நானும் என் சீடர் ஒருவரும் பல ஊர்களை சுற்றி வருகிறோம் ●

### அரிவாள் சாமி சீடர்
### உசிலம்பட்டி.

ஒருவர் நல்லா இருப்பதைக் கண்டு பொறாமை கொள்கிறவர்கள் இருக்கும் வரை நாடு முன்னேறாது. எங்கள் மாவட்டம் மட்டு மல்ல, வெளியே பல மாவட்டங் களிலும் எங்கள் அரிவாள் சாமி மகிமை பரவி இருந்தது. வெள்ளி, செவ்வாய் பூஜைக்கு கூட்டம் கூட்டமாக வந்து சாமியிடம் அருள் வாக்கு கேட்பதும், காணிக்கை செலுத்து வதும் கண்டு பொறாமை கொண்ட சிலர் நமது அரிவாள் சாமிக்கு சூன்யம் வைத்து விட்டார்கள். இப்படி கிழக்குவாசல் முனீஸ் வரனை கட்டிப் போடும் சக்தி அந்த பத்திர காளியம்மனுக்குத்தான் உண்டு. அந்த அம்மன் அருள் பெறுவதற்காக சில பூஜைப் பொருட் களைத் தேடி ஊர் ஊராக கோவில், குளம், காடு, மலை என்று இருவரும் சுற்றி வருகிறோம். சில சக்திவாய்ந்த மூலிகைகளும், மந்திரங்களும் இப்போது கிடைத்திருக்கிறது. கிடைக்க வேண்டியது இன்னம் கொஞ்சம் தான். நமது அரிவாள் சாமியை பிடித்த சூனியம் விலகி ஓடிவிடும், சொந்த ஊர் திரும்பிச் சென்று பழையபடி அரிவாள்சாமி அருள் வாக்கு சொல்லும் மக்கள் நலம் அடைவார்கள் ●

### கல்கிச்சாமி
### கும்மனா சோலை

கல்கிச்சாமி தன் முன் அமர்ந்திருப் பவரைப் பார்த்து சிரித்தபடி "நீரே சாமியாடி. உன் மகளை இங்கு எதற்கு கூட்டிவந்தாய்" என்றார். தட்டிலிருந்த சோழிகளை கையில் அள்ளி தரையில் குவியல், குவியலாக வைத் தார். பூஜையில் வைக்கப்பட்டிருந்த வெற் றிலை ஒன்றை எடுத்து தன் மடி வேட்டியில் துடைத்து, சூரிய வெளிச்சத்தில் காட்டி, பார்த்துக்கொண்டே சிரித்தார். "எல்லாம் சரியாய்ப் போகும், உன் உடல் முழுவதும் எரிச்சல். தீக்காயம் பட்டதுபோல் வேதனை இருக்கும்... இருக்கா தாயி...? வீட்டைப் பூட்டிக் கொண்டு நெருப்பு வைத்துக் கொண்டவள் உன்னை ஆட்டிப் படைக்கிறாள். அந்தப் பாவி மகள் வேறு என்ன நல்லதை உனக்கு செய்துவிடப் போகிறாள்?. இது பற்றி சோழி சொல் வதும் வெற்றிலை சொல்வதும் ஒன்று தான். தெற்கு திசையில் உள்ள அம்மன் கோவி லுக்குச் சென்று பொங்கலிடு. விரும்பினால் உனக்கும் உன் மகனுக்கும் முடி இறக்கி அம்மனுக்கு செலுத்துவதாக இன்றே வேண்டிக் கொள். இதோ இந்த மஞ்சள் துணியில் காசும், விபூதியும், யந்திரமும் கட்டி வைத் திருக்கிறேன். இதைக் கொண்டுபோய் உன் வீட்டுக்குள் வடக்கு திசை கூரை முகட்டில் கட்டி தொங்கவிடு. உனக்கு நல்ல சுகம் கிடைக்கும் தாயே. சந்தோசமாக வீடு திரும்பிப் போ" என்று சொல்லி வந்திருந்த பெண்ணின் கணவரை அழைத்தார்.

"வா... இப்படி அருகில் வா... சொல்வதை நன்றாகக் கவனி. உன் மனைவி இதுநாள் வரை படாத கஸ்டம் பட்டு விட்டாள். அனைத்தும்



படிப்பகம்

www.padippakam.com

கெட்ட ஆவிகளின் சதிவேலை. இனி எல்லாம் நல்லதே நடக்கும். உனக்கு நல்ல வேலையும் வருமானமும் கிடைக்கும். மனைவி மக்களோடு சந்தோசமாய் இரு... போ" என்றார். தனது நீண்ட சடை முடியை வாரி, உச்சித் தலைமேல் கொண்டை போட்டு, தாடியை வருடிக் கொண்டே கூட்டத்தையும் கூடாரத்தையும் சுற்றி நோட்டம் இட்டார். அருகில் இருந்த அகல் விளக்கின் திரியை ஏற்றி எரியவிட்டார்.

"எல்லோருக்கும் சாப்பாடு ரெடியா" என்று அரக்க குரல் கொடுத்தார். தூரத்தில் அமர்ந்திருந்தவர்களில் ஒருவரை குறிப்பிட்டு "என்ன, வெளிநாட்டுப் பயணம் நன்றாக இருந்ததா?" என்றார். சாமியின் விழிகள் நிலை கொள்ளாது வனப்பகுதியை சுற்றி வந்ததும் அங்கு நின்ற இருவரைக் குறிப்பிட்டு, "ஏய்... அங்கு என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள். தீட்டு, கழிப்பு என்று நகரத்திலிருக்கும் கருமாந்திரங்களைக் கொண்டு வந்து இங்கு சோலைக்குள் புதைத்து வைக்கிறீர்களா?" என்று சொல்லி சிரித்தார். தட்டில் குவித்திருந்த மாதுளம் பற்களை எடுத்து வாயில் போட்டு சுவைத்தபடி "சோலைக்குள் அமைந்த இந்த ஆசிரமத்திற்கு மன நிம்மதி தேடி நல்லவர்கள் மட்டும் வருவார்கள் என்று நினைக்க வேண்டாம். மனிதர்கள் பல ரகம். நேரத்துக்கு நேரம் மனித புத்தி வினோதமான காரியங்களை செய்யத் தூண்டும். என்மீது பில்லி சூன்யம், காத்து, கருப்பு என்று எதை ஏவல் விட்டாலும் எனக்கு ஒன்றும் நேராது. ஆனால் யாரையாவது கொலைசெய்து கொண்டுவந்து இந்த சோலைக்குள் புதைத்து விட்டு போக்கிரி கள் போய் விடுவார்கள். இந்த போலீஸ்காரர்களுக்கு நம்மால் பதில் சொல்ல முடியாது. அசந்தால் நம்மையே வெட்டி இங்கு புதைத்து விடுவார்கள்" என்று கல்கிச்சாமி சொல்லி முடித்தார். வரிசையாக அனைவரும் பந்தியில் அமர மதிய உணவு முடிந்தது.

இடைவேளையில் சோலைக்குள் சென்று திரும்பிவந்து அமர்ந்தவர்களிடம் "அங்கு இரண்டு பேர் நின்றார்களே போய் விட்டார் களா?" என்ற கேள்வியோடு "நான் கோடிக் கணக்கில் காணிக்கை வாங்கி ஆசிரமத்தில் குவித்து வைத்திருப்பதாக இந்த ஊர்க்காரர்கள் சொல்லித்திரிகிறார்கள். இதோ இந்த சமாதி தான் எனக்காக நான் சேர்த்து வைத்திருப்பது. பதிமூன்று வயதில் வீட்டை விட்டு ஓடிவந்தேன். இருபத்தியோரு வயது வரையிலும் ஒரு பலசரக்குக் கடையில் வேலைசெய்தேன். எதிலும் நிலை கொள்ளாமல் ஊரு நாடு சுற்றி முப்பத்தி ஏழு வயதில் இந்த சோலைக்கு வந்து சேர்ந்தேன். இப்போது வயது அறுபதைத் தாண்டிச் செல்கிறது. இதுநாள்வரை இதைச் சுற்றியுள்ள கிராமத்து மக்கள் எனக்கு சாப்பாடு போட்டு வருகிறார்கள். பல நகரங்களிலும் நாடுகளிலும் நமக்கு பக்தர்கள் இருக்கிறார்கள்." என்றவர், நிமிர்ந்து அமர்ந்து இருகைகளையும் தலைக்கு மேல் தூக்கி நெட்டி முறித்து மூச்சுக் காற்றை உள் வாங்கி தன் தொப்பையை நிரப்பினார். வேகமாய் மூச்சுக் காற்றை வெளியேற்றி "எல்லாம் மூச்சு நின்னா போச்சி" என்று சொல்லி சிரித்தார்.

இந்த ஊர்க்காரர்களும் சாமான்யர்கள் அல்ல. ஆசிரமத்துக்கு ரோடு வருது காரு வருது, கள்ளக் கடத்தல் நடக்கு என்றெல்லாம் போலீசில் புகார் கொடுத்துள்ளவர்கள்தான். இந்த உடலைத் தவிர என்னிடம் என்ன இருக்கிறது என்று சொல்லி அனைவரையும் நோட்டம் இட்டார். தட்டில் குறையாது இருந்த மாதுளம் பற்களை அள்ளி முன்வரிசையில் அமர்ந்தவர்களுக்கு கொடுத்தார்.

"இப்போது என் கையில் இருக்கிறது இதுதான். சாப்பிடுங்க... பழம் உடம்பிற்கு நல்லது. என் உடம்பைப் பாருங்கள்... உக்காந்த இடத்தில் சாப்பிடுகிற என் உடம்பை விடவும் குடும்பத் திற்காக கடினமாக உழைக்கும் உங்கள் உடம்பை நீங்கள் நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும்." என்றார்.

கூடி இருந்தவர்கள் பக்திப் பாடல்களைப் பாடினார்கள். கல்கிச்சாமியும் சேர்ந்து பாடினார்.

பலர் விடைபெற்று திரும்பினார்கள். இருக்கையில் இருந்தபடியே தன் புட்டத்தைத் தூக்கி அமர்த்தி "நீங்கள்தான் காலையில் வந்தவர்களில் கடைசி. உங்களுக்குச் சொல்லி விட்டு போய் தூங்குகிறேன், சம்மதம்தானே?" என்று கல்கிச்சாமி அவர்கள் தனது அருள் உலகில் புகுந்தார் ●

*சிறுகதை ஆசிரியருக்கு ஏற்பட்ட வினா - மருமகன் நாய் பஞ்சம் பிழைக்க நகரத்திற்கு நாயைத் தேடிப் போனதும், பிரச்சினைகள் என்று மனிதர்கள் குறி கேட்பவரிடம் செல்வதும் ஒன்றுதானா?*



படிப்பகம்

www.padippakam.com

■ சாக்கியன்

மக்கள் அறியாத அம்பேத்கர் - 6

# நிலம் . வரி . சாதி

நிலத்தின் உரிமையை காகிதத்தாளில் பெற்றிருப்பது போல தங்களின் நிலங்களில் உழைக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வியல் உரிமைகளை தொடர்ந்து சிதைக்கும் நிலச்சுவான்தார்கள் இந்துதுவ நாட்டின் நிலைபெற்ற சட்டமாக தர்பார் நடத்திக் கொண்டுள்ளனர்

"நல்ல நிர்வாகம் என்பது சிறந்த நிதி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. நிர்வாக இயந்திரத்தின் எரிபொருள் அங்கு காணப்படும் நிதி ஆதாரமேயாகும். எனவே நிதி சீர்திருத்தம் மிகுந்த கவனமும், முன்னுரிமையும் பெறவேண்டிய முதன்மைப் பொருளாகிறது. நிதி ஆதாரத்தை உயர்த்துவதற்கு முன்னெடுக்கப் படும் செயல்பாடுகள் நிர்வாக ரீதியாக செயல்படத்தக்கதாக (Administratively Workable) உள்ளதா என்பதே முதலாவதாக கவனத்தில் கொள்ள வேண்டிய கேள்வியாகும்." இது அம்பேத்கர் தான் எழுதிய நாணத்தின் சிக்கல் உள்ளிட்ட கட்டுரைகளில் தெரிவித்துள்ள கருத்து. நிதி ஆதாரம் என்பதன் வாய்ப்புகளாக 'வரி' கணக்கிடப்படுகிறது. வரியின் வகைகளாக பல்வேறு தளங்கள் தொகுக்கப்பட்டாலும், வரியானது தனக்கென எல்லைகளை தேர்ந் தெடுக்கக் கொள்ளவேண்டியது இன்றியமை யாததாகிறது. அவ்வாறான எல்லைகளை அமைத்துக் கொள்ளாத வரியை நடைமுறைப் படுத்துவ திலும், வசூலிப்பதிலும் தேவையற்ற சிக்கல்கள் ஏற்படும். இந்த நடைமுறைச் சிக்கலை எதிர் கொள்வது எங்ஙனம் என்பதை கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சிக்கல் களின் தேர்வாக

- வரிகளை பல்வேறு உட்பிரிவுகளாக தன்மைப் படுத்துதல் மற்றும் அவற்றின் எண்ணிக்கையை ஒழுங்கு செய்தல்.
- பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட வரிகளை, அவை எவ்விடத்தில் ஒருமுகப்படுத்தப் படுகின்றன? என்பதை வரையரை செய்தல்.

இவ்வாறு உட்பிரிவுகளாக தன்மைப் படுத்தி நிர்வகித்தல் என்பது நமது நாட்டிற்கு ஒன்றும் புதுமையான வழியல்ல. இத்தகைய வழிகளில் அல்லது இதுபோன்ற வழிகளில் பிறநாடுகளில் செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டுள் ளது. குறிப்பாக இங்கிலாந்தில் வம்சாவழி வரியை மைய அரசும், அவ்வரியின் ஒரு பகுதியை உள்ளூர் அரசும் (local Government) தங்களின் வாய்ப்புகளாக மாற்றிக் கொண்டுள் ளன.

ஜெர்மனியில் கூட்டாட்சி முறைமையில் அமைந்த அரசுகளின் உச்ச அரசும் மாநில அரசுகளும் "மறைமுக வரிகளைப் பிரித்து நுகர்ந்து கொள்வதில்" எல்லைகளை வரை யறுத்து நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்த முறை ஒட்டுமொத்த ஆட்சிமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. கனடாவில் மிகப் பெரும்பான்மையான வரிசார் வருமானம் கூட்டாட்சி முறைமையில் அமைந்த அரசுகளின் உச்ச அரசு வசூலிப்பதன் மூலமே கிடைக்கப் பெறுகின்றன.

ஆக உலக நாடுகளின் ஒப்பீட்டு வகைப் படுத்துதலில், வரியானது பல்வேறு பகுதி களாகப் பிரிக்கப்பட்டு பின்னர் அவைகளை உட் பிரிவுகளின் உச்ச அமைப்புகள் நிர்வகிக்கும் முறை அமைந்துள்ளது. ஆனால் இந்திய நாட் டில் ஏற்கனவே உட்புரிவுகள் தேவைக்கதிகமாக அமைந்துள்ளது.

பிரிவுகளின் அடிப்படையில் வரி வசூலிப் பதில் இந்திய நாட்டின் அடிப்படை அமைப்பு எதிராக உள்ளது. பிரிவுகள் பலவாக நிர்வாக வசதிக்காக பிரிக்கப்படாமல், தங்களின் சுய தேவைகளுக்கும், பிற சமூகங்களை ஒடுக்கு வதற்குமே பிரிக்கப்பட்டுள்ளன. இது மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

அபாயகரமானதும் உடனடி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டுவதாகவும் உள்ளது. உட்பிரிவுகள் தங்கியிருக்கும் அதிக அளவிலான நெகிழ்ச்சியையும் பிற பிரிவுகளிடையே அதிக பட்ச வேற்றுமையையும் கடைப்பிடிக்கின்றன. இந்த உட்பிரிவுகள் இடைமட்டத்திலான பரவலாக இல்லாமல் செங்குத்தாக இருப்பது, கடைசி உட்பிரிவானது ஒருபோதும் நேரடியாக அதிகார மையத்தை எட்டவியலாததாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பிரிக்கப்பட்டுள்ள உட்பிரிவுகள் மனிதகுல ஓர்மைக்கு எதிரான பிரிவுகளாகும். இந்த பிரிவுகள் சாதி மற்றும் சாதியின் வீச்சுகளால் நிர்வகிக்கப்படுவதால், இந்தப் பிரிவுகளின் அடிப்படையில் வருமானம், வரி போன்றவை வரையறை செய்வது இயலாத ஒன்றாகிறது. ஆனால் இந்த பிரிவுகள் நியாயப் படுத்தும் வகையிலேயே

- வரி வசூலிப்பதற்கான நியாயம்
- வரி செலுத்துவதற்கான அடிப்படைத் தகுதி
- வரி செலுத்தாமல் இருப்பதற்கான விலக்கு

ஆகியன அமைந்துள்ளன. இந்தப் பிரிவுகள் மனித சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை பாதுகாப்பதாகவும், சமூகங்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதை தடை செய்வதாகவும் அமைந்துள்ளன. எனவே சமூகத்தில் ஆரோக்கியமான போட்டியை உற்சாகப் படுத்தும் வகையில், இந்திய சமூகத்தில் அமைந்துள்ள சாதி மற்றும் சாதிசார் பிரிவுகளை சீர்குலைக்க வேண்டும்.

லாபம் என்பது உபரி வருமானம் (surplus income) என அம்பேத்கர் வரையறுக்கிறார். அதாவது தன்னுடைய உற்பத்தி செலவிற்கான அனைத்து கூறுகளையும் செலுத்திய பின்னர் அங்கு மீதம் தோன்றும் உபரி வருமானமே லாபம் என அம்பேத்கர் வரையறுக்கிறார். இந்த வரையறையை நாம் அளவுகோலாக எடுத்துக் கொள்ளும்போது, தொழில்துவங்கி அதில் லாபம் ஈட்டுபவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களாகவே உள்ளனர். இது

- தொழிற்சாலை
- விவசாயம்
- தரகு வியாபாரம் மற்றும்
- இரண்டாம் நிலை வியாபாரம் வரை

உண்மையாக உள்ளது. தொழிற்சாலை வைத்துள்ள முதலாளி தன்னுடைய வசதி வாய்புகளை தொடர்ந்து விரிவுபடுத்திக் கொண்டு மேலோங்குகிறார். அவர் சொந்தமாக வீடு, வண்டி, வாகன வசதி, கேளிக்கை நிகழ்வுகளை அன்றாடத் தேவைகளாக - நிகழ்வுகளாக அமைத்துக் கொண்டு வாழ்கின்றார். ஆனால் உழைப்பாளி தன்னுடைய மூலதனமான உடல் மற்றும் மனம் சோர்வடையும்வரை உழைக்கின்றான். அவனுக்கு அதற்கு ஈடாகத் தரப்படும் தொகை தன்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே பற்றாக் குறையாக உள்ளது. காலம் கடக்க, அவன் தன்னுடைய மூலதனத்தின் மையமான உடல், மனம் வலிமையை இழக்கிறான். அதாவது உற்பத்தி செலவின் அடிப்படையான தொகையைக்கூட அவனால் அந்த வியாபாரத்தில் ஈட்ட இயலுவதில்லை. இது அவனை மூலதனத்தில் இருந்து செலவு செய்து தன்னுடைய உயிர் வாழ்க்கையை நகர்த்துவதாகிறது. அதாவது லாபம் என்பதை தன்னுடைய இந் நிலையில் கூட ஒரு தாழ்த்தப்பட்டவன் சிந்திக்க இயலாதவனாகிறான். வணிகத்தில் ஒருவரின் லாபம் மற்றவரின் நட்டமாகக் கணக்கிடப்படுவதில்லை. மாறாக ஒருவரின் லாபம் என்பது அந்த தனி மனிதரின் அல்லது அவர் சார்ந்த வர்க்கத்தின் புத்திசாலித் தனமாகக் கணக்கிடப்படுகிறது. இது சமூகத்திற்கு சமூகம் மாறுபடும் தன்மையானதாக இல்லாமல், செங்குத்து அடுக்கின் மேன்மைச் சமூகம் வளம் பெறவும், இந்த அடுக்கின் இறுதியில் சிக்கித் தவிக்கும் சமூகமாக தாழ்த்தப்பட்ட சமூகமும் உள்ளது. இதனால் தாழ்த்தப்பட்ட சமூகமானது பிற சமூகங்கள் போல சுதந்திர தளத்தில் பொருள் ஈட்ட இயலுவதில்லை. அவர்களால் சொந்தமாக எந்தவித வேலையையும் முன்னெடுக்க இயலுவதில்லை. எந்த வேலையிலும் லாபம் ஈட்ட முடிவதில்லை.

மாறாக அவர்கள் மேம்படுத்தப்பட்ட சமூகங்களின் தொழிற்சாலைகளில், விவசாய நிலங்களில் உடல் உழைப்பையும் மன உழைப்பையும் தருகின்றவர்களாக உள்ளனர். அந்த உழைப்பில் விளையும் பயன்பாடுகள் மேம்படுத்தப்பட்ட சமூகங்களின் லாபமாக, உபரி வருவாயாக நிலைக்கிறது. இந்த உபரி வருமானத்திற்கான வரியை அரசு இதுவரை வசூலிக்கிறது. அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வருவாயாக, ஏதும் நிலையாகவும் உறுதியாகவும் அரசு நிர்ணயிக்கவில்லை. இந்த மக்களும் நிர்ணயிக்கும் அளவிற்கான மனவலிமை பெற்றவர்களாக இல்லை. தாழ்த்தப்பட்ட சமூகத்தின் உழைப்பிற்கான கூலியை, மேம்படுத்தப்பட்ட சமூகம் "தன்னுடைய உற்பத்திச் செலவிற்கான கூறு" என்று கொள்வதில்லை. தரமான விதை, தரமான மண், தரமான பூச்சி மருந்து, உரம் என்று தரம் பார்த்து அதிக பொருட்செலவு செய்யும் விவசாய முதலாளிகள், தரம்மிக்க



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களை வேலைசெய்யச் செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கான கூலியை ஈட்டுத் தொகையாக அணுக மறுக்கின்றனர். விவசாயம் தரமாக நடைபெறுவதால், விவசாயப் பொருட்களை வியாபாரம் செய்யும் தொழி லாளர்கள் சரியான கூலியை ஈட்டுத் தொகையாகப் பெருகின்றனர். ஆனால் இந்த விவசாயத்தை நடத்துபவர்களான ஏர் உழுதல், விதை நடுதல், நாத்து நடுதல், களர் பறித்தல், நீர் பாசனம் செய்தல், பூச்சி மருந்து தெளித்தல், உரம் இடுதல், அறுவடை செய்தல், தானியங்களை பிரித்தெடுத்தல், மூட்டை கட்டுதல், கிடங்கிற்கு கொண்டு செல்லுதல், சந்தையில் விற்றல் போன்ற பணிகளைச் செய்யும் தாழ்த்தப்பட்டவர்கள் அதற்கான சரியான கூலியைப் பெற இயலுவதில்லை. நிலை இவ்வாறிருக்க, உழைப்பு என்பது உழைப்பின் தன்மையை வைத்து கௌரவப்படுத்தப்படுவதில்லை. மாறாக, ஏற்கனவே கௌரவப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளவர்கள் வம்சா வழியாக பின்வரும் சந்ததியினர் உடன் சேர்ந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேன்மையை சீர்குலைக்கும் எல்லா பணிகளையும் ஆற்றுகின்றனர்.

இது உழைப்பின் மேன்மையை வலுயுறுத்துவதற்குப் பதிலாக நிறுவனப்படுத்தப்பட்ட இந்து முறைமையை பாதுகாக்கும் வகையாக அமைகின்றது. ஆக விவசாயம் என்பது உழைப்பை மையப்படுத்தாமல், நில உடைமையைக் குறிப்பதாக இந்த நாட்டில் உள்ளது. தனக்குச் சொந்தமான நிலத்தில் நடந்து கூடப் பார்த்திராத நிலச்சுவான்தார்கள் இந்த நாட்டில் உண்டு. அந்த நிலத்தில் விளையும் பயன்படு பொருள்களை தங்கள் சொத்துகளாகக் கொண்டு இவர்கள் சுகிக்கின்றனர். நிலத்தின் உரிமையை காகிதத் தாளில் பெற்றிருப்பது போல, தங்களின் நிலங்களில் உழைக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வியல் உரிமைகளை தொடர்ந்து சிதைக்கும் உரிமைகளை இவர்கள் இந்துதுவ நாட்டின் நிலை பெற்ற சட்டமாக தர்பார் நடத்திக் கொண்டுள்ளனர்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்பது நாம் அடையவேண்டிய ஒற்றைத் தத்துவமாக இருக்கும்போது, இத்தகைய முரணான அமைப்பு மற்றும் வாய்புகளை சிதைக்காமல் பொதுமையை எப்படி எட்டவியலும்?

வரி என்பது நாட்டிற்குப் பொதுவாக இருக்கும் போது, நேரடியான வரியை செலுத்த வேண்டிய அவசியமில்லாமல் தாழ்த்தப்பட்ட சமூகம் இருப்பது எப்படிச் சரியாகும்? சொத்து சுகங்களுக்கு சொந்தக்காரர்களாக நிலச்சுவான்தார்கள் அரசிடம் வரி செலுத்துவது போல தாழ்த்தப்பட்ட சமூகத்தை தங்களின் உடைமைகளாக இந்த நிலச்சுவான்தார்கள் பெற்றிருப்பது- அதற்கான வரியைச் செலுத்துவது நடைமுறையில் உள்ளது. இங்கு நில உடைமையாளர்களாக மேம்படுத்தப்பட்ட சாதியினர் உள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்படுத்தப்பட்ட சாதியினரின் "அசையும் சொத்தாக" உள்ளனர். சம உரிமை பெற தகுதியுள்ள மனிதர்களாக அவர்கள் மதிக்கப்படுவதில்லை - வாய்ப்புகள் பெறுவதுமில்லை. இந்த நிலை தகர்க்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வியல் உரிமைக்காக நில உரிமையை கைக்கொள்ளுத் தருணத்தில், அவர்களின் மீது ஆதிக்க சாதியினரின் வன்முறை தீவிர மடைகிறது. இந்த வன்முறையை எதிர்கொண்டு போராடும் அளவிற்கான வலிமையை இம்மக்கள் பெறவேண்டியது முன்தேவையாகிறது.

ஏவப்படும் வன்முறை, சாதி இந்துக்களின் எல்லா தளங்களிலும், எல்லா தரப்பு மக்களிடமும் இருந்து வெளிப்படுகின்றது. இந்த வன்முறையை சாதி இந்துக்களின் மதமாகிய "இந்து மதம்" புனிதப் போர்வை போர்த்தி பாதுகாக்கிறது. தாங்கள் ஒழுகும் மதமான இந்து மதம் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதற்கு அங்கீகாரம் தருவதால், மன உளைச்சல் இன்றி சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வன்முறையை ஏவுகின்றனர்.

சாதி இந்துக்களின் நலன்களை "இந்துமதம்" புனிதப் போர்வை போற்றி பாதுகாக்கின்றதோ, அவ்வாறே தாழ்த்தப்பட்ட மக்களின் இழிநிலையையும் இந்து மதம் வற்புறுத்துகிறது. இந்து மதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வன்முறையையும், சாதி இந்துக்களுக்கு அவர்களின் செயல்களுக்கு உவப்பையும் அளிக்கிறது. எனவே இந்து மதம் தகர்க்கப்பட்டால் தவிர தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நல்வாழ்வு இல்லை. இந்து மதத்தை தகர்க்கும் வாய்ப்பின் முதல்படியாக, இந்து மதத்தை பலவீனப்படுத்தும் செயல்கள் மேற்கொள்ளப்படலாம். இதன் பொருட்டு,

- இந்து மதத்தை விட்டு வெளியேறி மதம் மாறுதல்;
- இந்து மதத்தை விட்டு வெளியேறி மதமற்று வாழ்தல்;
- இத்து மதத்தை விட்டு வெளியேறி பௌத்தம் தழுவுதல்

மேற்கொள்ளலாம். இது இந்து மதத்தை பெருமளவு பலவீனப்படுத்தும். இதைத் தவிர இந்து மதக் கொடுமைகளை முடிவுக்குக்கொண்டு வர வேறு வழிகள் இதுவரை காணப்படவில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

**செல்போன் - கணினிகளுக்கு தீர்வை குறைப்பும் சரி, முதலாளி கள் செய்யும் வரி ஏய்ப்பும், முதலாளிகளுக்கு அரசு அறிவிக்கும் வரிச் சலுகைகளும் சரி, இவைகள் அனைத்தும் அடித்தள மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதியை இனி குறைப்பதற்கே.**

■ நிகழ் அய்க்கண்

# வலிமையும் வறுமையும்

“பளபளவென பிரகாசிக்க இது போல மேலான காலம் உங்களுக்கு இருந்ததில்லை” - என அதர்வண வேதகாலத்து வசிய வாக்கிய ஜாலங்களுடன் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியினைக் குறிக்கும் விதமாக “இந்தியா ஒளிர்கிறது” எனச் சுட்டி வெகுஜன பத்திரிக்கைகளிலும், தொலைக் காட்சிகளிலும் , வானொலிகளிலும் மக்களவைத் தேர்தலை முன்வைத்து விளம்பரங்கள் வெளிவந்த வண்ணம் இருக்கிறது.

ஐ.நா. அமைப்பு, ஐ.எம்.எப், பொருளாதார வல்லுநர்கள், ஆளுங்கட்சியினர், முதலாளிகள் ஆகிய அனைவர்களும் பொருளாதார வளர்ச்சியானது இந்தியாவில் வேளாண்மை, சேவைத் துறை, தொழில் உற்பத்தித் துறைகளில் சிறப்புற்று வளருவதாகவும் கூறி பாராட்டிய வண்ணம் இருக்கிறார்கள்.

பயங்கரவாத அரசியலுக்கு பாகிஸ்தான் என்பதுபோல், பொருளாதார வளர்ச்சி குறித்த அரசியலுக்கு சீனாவினை மாதிரியாக்குவது இந்துத்துவவாதிகளுக்கு வாடிக்கை. சீனாவுக்குச் சமமான வளர்ச்சியை எட்டுவதில் தீவிர விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியாவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 26 கோடி; எழுத்தற்றவர்களின் எண்ணிக்கை 34 கோடி; பாதுகாப்பான குடிநீர் வசதியற்றவர்களின் எண்ணிக்கை 25 கோடி; வேலை வாய்ப்பு முற்றிலும் பாதிக்கப்பட்டு வேலையில்லா நபர்களின் எண்ணிக்கை 1993-94-ல் 2.13 கோடியிலிருந்து 2002-2003-ல் 3.96 கோடியாக உயர்ந்திருக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் ஐந்து ஆண்டில் ஐந்து கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக சூளுரைத்தார்கள். ஆனால் தற்போதோ 2012-ல் அனைவருக்கும் வேலைவாய்ப்பு தருவதாகக் கூறுகிறார்கள். அரசு சார்ந்த, பொதுத்துறை, தனியார் துறை, அமைப்புசாரா-தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கையோ குறைந்து கொண்டே வருவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இதுபற்றிய எந்தவித பேச்சு மூச்சுமற்று ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கான வளர்ச்சியையே தேசத்தின் பொருளாதார வளர்ச்சியாக உயர்த்திப் படிப்பதை (தினமணி: 26.12.2003) பத்திரிக்கையில் வெளிவந்துள்ள செய்திகளிலிருந்து அறியலாம்.

- அந்நியச் செலாவணி கையிருப்புகள் ஒரு போதும் இருந்திராத அளவுக்கு 95 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.
- பங்குச் சந்தையில் 3 ஆண்டுகளாக உயர்நிலை.
- அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 3 ஆண்டுகளில் மிக உயர்வு.
- வலுவான கிராமப் பொருளாதாரம்.

அந்நியச் செலாவணி இருப்பு முன் எப்போதும் இருந்திராத உயர் அளவில் இருப்பதாகவும், பங்குச்சந்தை முதலீடுகள் மூன்று ஆண்டுகளாக உயர்நிலையில் இருப்பதாகவும் விளம்பரப்படுத்துகின்றனர். அந்நிய முதலீட்டாளர்கள் இழுத்துப் பிடித்தாலோ, இதைவிட அதிக லாபந்தரக்கூடிய வேறு நாட்டிற்கு திருப்பிவிட்டாலா, அரசியல் சூழல்கள் சாதகமற்ற நிலை நிலவும் போதோ தேசத்தின் பொருளாதாரம் கவலையளிக்கக் கூடியதாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. மேலும் பொதுத்துறை வங்கிகளில் அரசின் அந்நிய நேரடி முதலீட்டை 74 சதவீதமாக உயர்த்துவது, பெட்ரோலியத் துறையில் (HPCL) நூறு சதவீத அந்நிய முதலீட்டை முழுவதுமாக அனுமதிப்பது, லாபம் தரும் பல பொதுத்துறைகளை தனியாருக்கு



படிப்பகம்

www.padippakam.com

தாரை வார்ப்பது, நஷ்டத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களை சீர் செய்வதற்குப் பதில் நிதிப்பற்றாக்குறையினைக் காரணம் காட்டி பன்னாட்டு - இந்நாட்டு முதலாளிகளிடம் குறைந்த விலைக்கு ஒப்படைத்துவிடுவது, இப்படி படிப் படியாக சமூகநீதி காக்கும் பொதுத்துறைகளை தாரை வார்ப்பது நடந்து கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் மறைத்துவிட்டு, 22,500 கோடி பழைய கடனை அடைத்ததாகவும், 22,500 கோடி பத்திரக் கடனை திருப்பித் தந்துள்ள தாகவும், ஐ.எம்.எப்-க்கு 2241 கோடியினை திருப்பித் தந்துள்ளதாகவும் கூறிக்கொண்டு நாடு பொருளாதார வளர்ச்சியடைந்துள்ளதாக கட்டமைக்கிறது. (தினமணி: 6.1.2004)

இதே போன்று, தொலைக்காட்சியில் வரும் பிறிதொரு விளம்பரமானது, 'இந்தியா ஒளிர் கிறது' எனுந்தலைப்பிட்டு,

விலைவாசி நிரந்தரமாக உள்ளது - தினமும் 5 கி.மீ. நெடுஞ்சாலை உருவாக்கப்படுகிறது - எல்.ஐ.சி. முதியோர்க்கான ஓய்வூதியத் திட்டம் - குழந்தைகளுக்கான இலவசக் கல்வி - கோரிக்கை செய்தால் போன் - காபிடல் மார்க்கெட் திட்டங்கள் சுலபமானது - வீடுகட்டும் கடன் வட்டி வீதம் குறைந்துள்ளது - ஜீ.ஐ.சி. காப்பீட்டுத் திட்டம் - விவசாயிகளுக்கு கிரடிட் கார்டு வசதி - வேளாண் கடன்களுக்கு குறைந்த வட்டி... என வருகிறது.

இவ்விளம்பரமும் பொருளாதார வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு, மத்திய மேல்தட்டு வர்க்கத்தினருக்காகவே உருவாக்கி இருக்கிறார்கள். அரசாங்கம் பல வழிகளில் முனைந்து சேமிப்பை ஊக்குவித்து, நிதிச்சுமைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முனைவதை இவ்விளம்பரம் மூலம் உணர முடிகிறது.

நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள் - அமைப்பு சாராத எண்ணற்ற அடித்தள மக்களின் மேம்பாடு குறித்த அக்கறைகளை இவ்விளம்பரங்களில் காண முடியவில்லை. மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, சமீபத்தில் மினி பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட செல்போன் - கணினிகளுக்கு தீர்வை குறைப்பும் சரி, முதலாளிகள் செய்யும் வரி ஏய்ப்பும், முதலாளிகளுக்கு அரசு அறிவிக்கும் வரிச் சலுகைகளும் சரி, இவைகள் அனைத்தும் அடித்தள மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதியை இனி குறைப்பதற்கே. வெளிநாட்டினரை கவருவதற்கு அளிக்கப்படும் வரிவிலக்கும், குறைந்த வரி விதிப்புங்கூட மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி அளவு குறையவே செய்யும்.

மேற்குறிப்பிட்ட இரண்டு விளம்பரச் செய்திகளும் அடித்தள மக்களின் பொருளாதார சூழலை மாற்றி அமைப்பதில் அக்கறை காட்டுவதாக இல்லை. பொருளாதார வளர்ச்சி பெற்ற வர்க்கமானது அரசியல் தளத்திலும் - சமூகத் தளத்திலும் தங்களது மேலாண்மையை நிறுவவே செய்யும். அரசியல் - பொருளாதார - சமூக தளத்தில் மிகவும் கீழ்நிலையில் வாழும் மக்களின் நிலை இத்தாராளமயச் சூழலில் மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

பொருளாதார சீர்திருத்தத்தின் மூலம், அயல் நாட்டுக் கடனை குறைக்கலாம், உள்நாட்டுக் கடனையும் அடைக்கலாம், பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கலாம், தொழில் நுட்பத் துறையில் உயர்ந்து விளங்கலாம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம், விலைவாசியைக் கட்டுப்படுத்தலாம், பற்றாக்குறையைக் குறைக்கலாம். ஆனால் அடித்தள மக்களின் மேம்பாட்டில் பின்னடைவு காணப்பட்டால் 'இந்தியா ஒளிர்கிறது' என்பது ஒருசாராருக்கானதே என கருதலாம்.

பொருளாதார வளர்ச்சியும், வளர்ச்சித் திட்டங்களும் அனைத்து வகை மக்களுக்கும் பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசதிகாரத்தில் காலங்காலமாக ஆளுகிறவர்கள் ஆதிக்கச் சாதியினராகவும், ஆளப்படுகிறவர்கள் தலித் மக்களாகவும் இருக்கிறார்கள்.

ஏற்கனவே தாரளமயமாக்கல் கொள்கைகளை இந்தியாவைத் தவிர்த்த பிற நாடுகளில் அமுல் படுத்தியதின் மூலம் செல்வந்தர்களுக்கும் - ஏழைகளுக்குமான இடைவெளி அதிகரித்தது. இந்தியாவில் அமுல்படுத்தியதின் மூலம் சாதி-தீண்டாமையின் இடைவெளி மிகவும் அபாய நிலைக்கு அதிகரித்திருக்கிறது.

பன்னாட்டு நிதி மூலதனங்கள், பன்னாட்டுக் கம்பெனிகள் நுழைவு; இந்தியாவின் மூல வளங்கள் கொள்ளை போவது; இந்தியாவில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் லாபமாக வெளியேறுவது; ஏற்றுமதியை ஊக்குவிக்க, அடித்தள மக்களை வறுமையில் வாட வைப்பது, இதைத்தான் தேசத்தின் "வளர்ச்சி" என்கிறோமா?

●



படிப்பகம்

www.padippakam.com

# உடல் மொழி


■ சிவகாமி

உடல்மொழி பற்றிய இத்தொடரில் திருமணம், காதல், கற்பு, பாலுறவு இவற்றைத் தொடர்ந்து உழைப்பு பற்றிய கருத்தாக்கத்தை ஆராய்வோம்.

உழைப்பு சிருஷ்டியின் மூலம், ஒன்றைப் பிறிதொன்றாக்கும் ரஸவாதம், கைகளை உபயோகித்திருக்காவிடில் பரிணாம வளர்ச்சியும், இனவிருத்தியும் கட்டுக்குள் உள்ள ஒரு இனக்குழுவாக மட்டுமே மனித விலங்கு இருந்திருக்க முடியும், ஆகாயத்துப் பட்சிகளைப் போல.

கிறிஸ்துவின் ‘ ஆகாயத்துப் பட்சிகளைப் பாருங்கள். அது விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை’ என்ற வாசகம் மனித வாழ்க்கையின் இன்னல்களிலிருந்து விடுபட அடிக்கடி உபயோகிக்கப்படும் பழைய (நாள்கடந்த) மருந்தாக இருந்து வருகிறது. இயற்கையையும், விலங்கினங்களையும் தொடர்ந்து அழித்து வரும் மனித இனம் ஆகாயத்துப் பட்சிகளைப் போலிருக்க ஆசைப்படுவது, வேலையிலிருந்து விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் வீடு திரும்பும் உழைப்பாளியைப் பார்த்து, பஞ்சணையில் அஜீரணத்தால் உருண்டு கொண்டிருக்கும் வசதிப் படைத்தவன் அவனைப் போல் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையே எனக்கூறுவதைப் போலிருக்கிறது. இக்கவித்துவமான உதாரணங்களும் உவமைகளும் பட்சிகளின் பார்வையில் விஞ்ஞானப்பூர்வமானதா என அறிய வாய்ப்பில்லை. எனினும் விலங்குலகம், அதற்கே உரித்தான ஆபத்து, தற்காப்பு, அமைப்பு, ஒழுங்கு எனக் கொண்டுள்ளது. எறும்புகளின் வாழ்க்கை அமைப்புக்குட்பட்டது. குரங்குகளின் குழுவுக்கு தலைமை உண்டு. ராணித் தேனீயின் வாழ்க்கை பிற தேனீக்களிலிருந்து பேதமானது. பெண் சிங்கங்களே வேட்டையாடுகின்றன. இப்படி பல்வேறு வகையிலான கட்டமைப்புகள், ஒழுங்குகள்!

மனிதன் எனும் பரிணாமமே உழைப்பிலிருந்து பெறப்பட்டதென்றிருக்க, உழைப்பு உன்னதமாக மதிக்கப்படுவதில் வியப்பென்ன



இருக்க முடியும்? உழைப்புதான் மாற்றத்திற்கான கருவி என்ற வகையில்தான் நம் பொருளாதாரத் தத்துவங்கள் உள்ளன. எனினும் மூலதனமிடும் முதலாளிகளே உழைப்பை மதிப்பீடு செய்யும் அதிகாரத்தில் உள்ளனர் என்பதுதான் உடலரசியலில் பிரதானம்.

இந்தியச் சுரண்டல் அமைப்பைப் பார்ப்போம். செய்யுந்தொழிலே தெய்வம், முயற்சி திருவினையாக்கும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனக் கவிஞர்களும் அறிஞர்களும், உழைப்புக்கு ஊக்க மருந்து கொடுக்கையில், உழைப்பாளிகளைக் கடையர்களாகவும் இழிந்தவர்களாகவும் எண்ணுகின்றது இச்சமூகம். ஏனெனில் சாதி அமைப்புக்கு வெளியில் தள்ளப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களுமே உழைக்க வேண்டும் என்ற நியதியை வகுத்திருக்கிறார்கள். பிறப்பின் அடிப்படையில் உழைப்பை வரையறுத்திருக்கிறார்கள். யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை வந்த பின்பும்,



படிப்பகம்

www.padippakam.com

உடலுழைப்புச் செய்பவர்களை மதிப்பிழக்கச் செய்யும் வண்ணம் அவர்கள் தொழில்களுக்கு மிகக் குறைவான ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். உடலுழைப்பற்ற வீணர்களும், பேராசைப்பிடித்த பார்ப்பனியர்களும் ஆளும் அரசு உடலுழைப்புக்கு மதிப்பு கொடுத்தால் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். இந்நிலைதானே அவர்களது இலட்சியம்? கேளிக்கையும் சோம்பலும்தான் உடலுழைப்பு மூளையுழைப்பு என உழைப்பைத் தரம் பிரித்து மூளையுழைப்பை மதிப்புள்ளதாகவும், உடலுழைப்பை மதிப்பற்றதாகவும் மாற்றி ஏற்றத்தாழ்வுகளை விதைத்துள்ளனர் பிறப்பினடிப் படையில் உழைப்பை வரையறுத்தும் இவைதான்.




உடல் அடிப்படையில் உழைப்பைக் கணிப்போம். உடலுறுப்புகள் ஒவ்வொன்றுக்கும் இயல்புகள் உண்டு. இவ்வுறுப்புகளின் செயல்பாடுகள் யாவும் தற்காப்பு, இனவிருத்தியுடன் பொருத்தமுற இணைக்கப்பட்டுள்ளன. தற்காப்பு, இனவிருத்திக்காக உடல் இயல்பூக்கம் பெறுகிறது. பசி, இயற்கையின் சீற்றம், எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளல் இவையே உழைப்பின் அடிப்படை. எனவே உடலின் இயல்பூக்கத்தில் உழைப்பும் இணைந்துள்ளது, தூக்கமும் ஓய்வும் போல.

உழைப்புக்கான இயல்பூக்கம் உடலில் இருந்தாலும் வாழும் சூழலே உழைப்பு வகையைத் தேர்ந்தெடுக்கிறது.

நாம் வாழும் சூழலில் மூளையுழைப்பே போற்றப்படுவதினால், உடலின் இயல்பூக்கம் தடைபடுகிறது. உடலுழைப்புள்ளவர்கள் வறுமையிலிருப்பதும் மற்றொரு தடை. இந்த இயல் பூக்கம் தடைபடுவதினாலும், வறுமையினாலும் உழைப்பு என்பதே சோர்வும், ஏமாற்றமளிப்பதாகவும் உள்ளது. உழைப்பவர்கள் உற்பத்திப் பொருளை அனுபவிப்பதிலிருந்து அந்நியப் படுவதால் உழைப்பிலிருந்து மகிழ்ச்சி அறவே போய்விடுகிறது. மேலும் மேலும் வறுமைப் பிடியில் சிக்கிக் கொள்ளாமலிருக்க கட்டாய உழைப்புச் செய்கிறார்கள் உழைப்பாளர்கள்.

இப்படியாக உடலின் இயல்பூக்கம் காயடிக்கப் பட்ட கட்டாய உழைப்பாக மாறியுள்ளது.

உழைப்பு சிருஷ்டியின் மூலம் என்கின்றோம். ஆனால் கட்டாய உழைப்பில் ஆக்கத்திற்கு இடம் கிடையாது. இயந்திரத்தனமான, ஒரே வகையான அலுப்பூட்டும் உழைப்பு ஆட் கொல்லியாகி விடுகிறது நாளடைவில். இன விருத்திக்கான பாலுறவு என்பது கருவுறுதல் நீங்கிய கேளிக்கை, விபச்சாரம் என மலிந்தது போல், உழைப்பு என்பது பலனற்ற அடிப்படைத் தேவைகள்கூட பூர்த்தி செய்ய முடியாத விரய உழைப்பாகி உள்ளது.

உழைப்புப் பற்றியக் கருத்தாக்கத்தில் கீழ்க் கண்டவற்றைப் பரிசீலிக்கலாம்.

- உடலுழைப்பு - மூளையுழைப்பு
- உழைப்பு - ஓய்வு.
- உழைப்பும் ஊதியமும்.
- கட்டாய உழைப்பிலிருந்து விடுதலை.

ஏன் உடலுழைப்பு பலருக்கு, மூளை யுழைப்பு சிலருக்கு என உழைப்பைப் பகுக்க வேண்டும்? ஒவ்வொரு மனிதனுக்கும் உட லுழைப்பும் மூளையுழைப்பும் அவசியம். உழைப்பை நேர விகிதாச்சாரத்தில் உடலுழைப்பு, மூளையுழைப்பு என பகுக்க முடியாதா? இயந் திரத்தைப் பழுதுபார்க்கும் ஒரு சாதாரண தொழிலாளி அது சம்பந்தமான கோப்புகளைப் பரிசீலிப்பது சிரமமானதா? தொழில் நுட்பம்



படிப்பகம்

www.padippakam.com

கற்ற ஒருவர் அந்த இரண்டு வேலைகளையும் நேரப்பங்கீட்டில் செய்யமுடியாதா?

ஒரு இயந்திரத்தின் உற்பத்தித்திறன், கொள்ளளவு, விலை, உதிரிபாகங்கள் பற்றிய அறிவு சேர்ந்தே ஊட்டப்படும் நிலையில் அதை இயக்குவதும் (குறிப்பிட்ட நேரம் வரை) பழுது பார்ப்பதும், அது சம்மந்தமான கோப்புகளைத் தயாரிப்பதும் சாத்தியம்தானே! சமீபத்தில் B.E. Mechanical Engineering படித்த வாலிபர் ஒருவர் வந்தார். படித்து முடித்து இரண்டு வருடங்கள் தனியார் துறையில் வேலையனுபவம் பெற்ற பின் தானே ஒரு லேத்து வைக்கவேண்டும், அதற்கான மூலதனம் குறித்த ஆலோசனை கேட்டார். அவர் தனியார் நிறுவனத்தில் தொடர்ந்து வேலை செய்யும் பட்சத்தில் ஒரே வகையான வேலை செய்யக்கூடும் என்பதும், அது அலுப் பூட்டுவதாக இருக்கும் என்றும் நம்பினார். இப்போதுள்ள சந்தையிலுள்ள இயந்திரங்கள் இன்னும் குறைந்தது பத்து வருடங்களாவது நீடிக்கும் என்றும், புதியதாக ஒரு மெஷின் உருவாக்கப்படும்பட்சத்தில் இந்தப் பத்து வருட காலத்தில புதிய மெஷின் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்பினார். ஆனால் பெரிய ஆலைகளோ அல்லது கம்பெனி களோ தமது ஊழியர்கள் முழுமையாக ஒரு துறையில் பாண்டியத்தியம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே உதிரியான ஒரே வகையான வேலையைத் தொடர்ந்து கொடுத்து அவர்களது உடல் திறனையும், மூளையையும் மழுங்கடிக்கச் செய்கின்றன. ஆடை நிறுவனங்கள் பெரும் பாலும் ஒவ்வொரு துறைக்கும் நிபுணர்கள் என்ற பெயரில் காலத்துக்கும் நீடிக்கிற வகையில் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து கட்டிங் மாஸ்டர், டிரெஸ் டிசைனர், மார்க் கெட்டிங்மானேஜர் எனப் பட்டம் சூட்டி மிகுந்திருக்கும் பெரும் உழைப்பாளர் களை பொத்தான் தைப்பவர், காலர் மட்டும், கை மட்டும், கால் மட்டும், இணைப்பு மட்டும் செய்யக்கூடிய 'மாஸ்' (mass) ஆக்கிவிட்டு அவர்களுக்கு அடிமாட்டுச் சம்பளம் (ஆயிரத்து ஐந்நூற்றிலிருந்து இரண்டாயிரம் வரை) கொடுத்து கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார் கள். ஒவ்வொரு உழைப்பாளியும் தன் தொழிலின் முழுப்பரிமாணத்தையும் ஆள்பவராகவும், உரு வாக்குபவராகவும், நுட்பங்களை அறிந்து அதைக் கலையாக மாற்றுபவராகவும் மாற வாய்ப் பளிப்பதில்லை. இதிலிருந்து வெளியேற முடி யாதபடி மூலதனமும், சந்தைப் போட்டியும் கிடுக்கிப்பிடிப் போடுகின்றன.

இந்நிலை மாற, சுழற்சி முறையில் வேலை யைப் பகிர்ந்தளிப்பதும், அதற்கான பயிற்சி நேரத்தை அவசியமாக்குதல் அவசியம். உடலு ழைப்பும் மூளையுழைப்பும் அனைவருக்குமான வாய்ப்பாக வேண்டும். நூற்றுக்கணக்கில் தினசரி பொத்தான்கள் மட்டும் தைக்கும் வேலை எவ்வளவு அலுப்பூட்டுவதாக இருக்கும்?! தனியார் துறையில் தலித்துகளுக்கு ஒதுக்கீடு என்பதே சாத்தியப்படாத நிலையில், படிநிலை களற்ற வகையில் உழைப்பை அனைவருக்கும் பங்கீடு செய்வது தூரத்துக் கனவே.

உழைப்பைப் பகுக்காமல், உழைப்பு நேரத்தை மட்டும் ஒவ்வொருவருக்கும் சரியான முறையில் பங்கீடு செய்தல் சாத்தியம்தான்! ஆனால் தங்கள் ஆதா யத்திற்காகவும் சுயநலத்திற் காகவும், நிபுணத்துவம் என்ற பெயரில் படிநிலை களைக் கற்பித்து சுரண்டலை சாசுவத மாக்குகின் றனர் முதலாளிகள். அதிகச் சம்பளம் வாங்கும் ஊளைச்சதை அதிகாரிகளின் உடல் நலனில் அக்கறை காட்டுகிறோம் என்ற பெயரில் அலுவலக நேரத்தில் யோகா பயிற்சி தருகின் றார்கள்!

இத்தொடரை எழுதுகையில் கிளிகளின் கிராமம் (சாகித்திய அகாடமி வெளியீடு) என்று சிப்பி பள்ளிபுரம் எழுதிய சிறுவர் களுக்கான சிறுகதைத் தொகுப்பு ஞாபகம் வருகிறது. அதில் இட்டிலி மாமாவும் நண்பர் களும் என்றொரு கதை. இத்தம்மா பைங்கிளி, தோட்டம் துறவு வயல் வரப்பு இங்கெல்லாம் பறந்து சென்று தேவையான காய்கனிகளும், நெல்மணிகளும் கொத்திக் கொண்டுவரும் இக்கண்டன் எலி காட்டுக்குள் சென்று அடுப்பு எரிக்கத் தேவையான விறகுச் சுள்ளிகள் கொண்டு வந்து சேர்க்கும். இவர்கள் இருவரையும் நண்பர் களாகக் கொண்ட இட்டிலி மாமாவோ நெல்லை அரிசியாக்கி, சோறு சமைத்து, காய்கறிகளால் கறிசமைத்து வைக்கும். பிறகு அவை சேர்ந்து உண்ணும்.

ஒரே மாதிரியான வேலை அலுத்துப் போகும் அல்லவா.? ஆகவே அவை வேலை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தன. ஆனால் காய், கனி சேகரிக்கப் போன இடத்தில் இட்டிலி மாமாவை நரி குதற நடுவில் பள்ளம் விழுந்து ஆப்பம்போல் ஆகிவிட்டது அது.விறகு பொறுக் கச் சென்ற கிளிக்கு அலகில் வலி. எலியோ பழக்கமில்லாததால் உப்பைக் கூட்டிப் போட்டு விட்டது. எல்லாம் நாஸ்தி. கதை கந்தர கோலம். எனவே பழையபடி அவரவர் வேலையை அவரவர் செய்ய வேண்டும் என முடிவெடுத் தனர்.



படிப்பகம்

www.padippakam.com

இதைப் படித்ததும், ஐயா, சிப்பி பள்ளிபுரம் அவர்களே, நீங்கள் சிறுவர்களுக்காக கதை யெழுதும் வேலையை விட்டு விடுங்கள் என்று கூறத்தோன்றியது. வர்ணப்பாகுபாடையும், வேலைப்பாகுபாட்டையும் நிரந்தரமாக்கும் உத்தியை விதைக்கும் கதை இது! முதல்நாளின் மோசமான அனுபவம் நிரந்தரமானதல்ல. பிறக்கும்போதே ஞானப்பால் குடித்து யாரும் வளர்வதில்லை. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம். ஒவ்வொரு தொழிலும் அதன் முழுமையில் ஆக்கத்திற்கான இடத்தைக் கொண்டுள்ளன. அப்படியும் அலுப்பூட்டும் பட்சத்தில் மாற்றுத் தொழிலும் கைவசம் கொள்ளக் கூடிய அறிவுள்ளவர்கள் தான் மனிதர்கள். ஆனால் வாய்ப்புக்கள்தான் இங்கே மறுக்கப்படுகின்றன. தலித் அலுவலர்களுக்கு அதிகாரம் சாராத அல்லது உதிரி வேலைகளே தரப்படுகின்றன பல அலுவலகங்களில். இதுவும் இங்கே கவனத்தில் கொள்ளக் கூடிய ஒன்று.

**உழைப்பு - ஓய்வு:**

தற்போது உழைப்பு எட்டுமணி நேரமாக் கப்பட்டுள்ளது அரசு அலுவலகங்களில். தொழிற்சாலைக்ளில் கூடுதல். அரசு அலுவலகங் களுக்கு வாரம் இரண்டு நாட்கள் விடுமுறை. ஆனால் தனியார் நிறுவனங்களில் கிறிஸ்துவின் ஓய்வுநாள் மட்டுமே. அரசு அலுவலர்களுக்கு தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, ஈட்டா விடுப்பு, மருத்துவ விடுப்பு, பேறுகால விடுப்பு, படிப்பு விடுப்பு, சம்பளமில்லா விடுப்பு இப்படி உழைப்பிலிருந்து ஏக விடுதலை. சில அரசு அலுவலகங்களில் விடுமுறைகளில்கூட உழியர் கள் இருப்பார்கள். அவர்களை உழைப்புக்கு அடிமையானவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம். நெருங்கி விசாரித்தால் பலர் வீட்டுத் தொல்லையினாலும், கரண்ட் பில்லை குறைக் கவும் அலுவலகங்களில் ஓய்வெடுக்கிறார் கள் என்பது புரியும். சரி, உடலின் இயல்பூக்கத் தின்படி, ஒரு மனிதன் எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என ஏதாவது கணக்கிருக்கிறதா? இலக்கும், வேலை குறித்த ஆர்வமும்தான் இவற்றைத் தீர்மானிக்கும். என்றாலும் வேலையின் தன்மை, சூழல் இவற்றை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உட லுக்கு ஓய்வு அவசியம். ஓய்வு என்பது தூக்கம் அல்லது சோம்பல் மட்டுமல்ல. வேலையின் இயல்பை மாற்றியமைப்பதும் ஓய்வாக இருக்க முடியும்! அலுவலகக் கூட்டங்களை உரையாட லாக்குவது, கலை, இலக்கியப் பயிற்சிகளை அறிமுகப்படுத்துவது, மக்களுக்கும் நிறுவனத் திற்குமான உறவைப் பலப்படுத்துவது என ஓய்வு பலவகைப்படும்.

ஜப்பான் அலுவலகங்கள், அலுவலக நேரம் முடிந்து மதுக் கடைகளில் தொடரும். அலுவலக நேரம் முடிந்ததும் ஏறக்குறைய மொத்த அலுவலகமே மதுக்கடைகளுக்குள் நுழைந்து விடும். இரவு பதினோரு மணி அல்லது பன்னிரண்டு மணி வரை அலுவலக வேலை குறித்த சம்பாஷனைகள் தொடரும். தூங்கிக் கொணிடே புறநகரில் உள்ள இல்லங்களுக்குச் செல்வார்கள் பலர் காலையில் ஆறுமணிக்கு தூங்கிக் கொண்டே அலுவலகம் வருவார்கள். இது வியப்பாக இருக்கும். விறைக்கும் குளிரிலும் தவறாது வந்துவிடுகிறார்கள். அவர்கள் சமூகமே 'கம்பெனி சமூகம்'தான்! இப்படி வேலையையும் கேளிக்கையையும் கலந்து விடுகிறார்கள். ஆனா லும் அது அவ்வளவு கேளிக்கையானதல்ல. அலு வலகப் படிநிலைகள் மிக மோசமானவை. அதிகாரம் குறைந்த நபர், மதுக்கடையில் நீளமான மேசை இருக்குமானால் அதன் விளிம்புக்கு தள்ளப்படுவார். குடித்து விட்டு உயர்நிலை அதிகாரியிடம் உளறமுடியாது. இப் படிச் சில சங்கடங்கள்.

ஆனாலும் ஓய்வு என்பது வேலையிடங் களில் உச்சரிக்கப்படக்கூடாத வார்த்தையாகத் தான் உள்ளது. படிநிலைகளை உடைத்தெறிந் தாலே பாதி ஓய்வு கிட்டும். ஓய்வு உடலுக்கும் உழைப்புக்கும் புத்துணர்வு தருவதால் அது மதிக் கப்படக்கூடிய சொல்லாக மாற்ற படிநிலை களை உடைப்பதும், சுழற்சி முறையில் வேலை களை மாற்றித் தருதலும் பரிசீலிக்கப்பட வேண் டியவை.

**உழைப்பும் ஊதியமும்:**

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமளவு எல்லோருக்கும் ஒரே அடிப் படைச் சம்பளமும், அனுபவம், மூப்பு, திறன், குடும்பச் சூழல் இவற்றின் அடிப்படையில் வேறு பட்ட விகிதங்களை பின்பற்றலாம். எவ்வகை யிலும் இவற்றிற்கான இடைவெளி மிக அதிக மாக இருப்பது சோர்வுக்கு வழிவகுக்கும். பணி யின் அவசரம் மற்றும் பல்வேறு நிலை களைக் கருத்தில் கொண்டு வாகனவசதி, உதவியாளர் வசதி செய்து தரலாம். எல்லாப் பணிகளும் பெரும்பாலும் எல்லாருக்குமானது அல்லது அதற்கு ஈடான முக்கியத்துவமானது என்ற ஒன்றே சம்பள விகிதங்களை வழிநடத்த வேண் டும். அவரவர் விருப்பத்தின் அடிப்படை யிலும், இயல்பூக்கத்திலும் அலுவல்சார்ந்த ஒரு துறை யைத் தேர்ந்தெடுப்பதினால், பெரிய தியாகம் செய்துவிட்டவரைப் போல் அவரை வழிபடா மல், அல்லது குற்றம் செய்தவரைப் போல் நிந்திக்காமல் அணைத்துப் பணிகளையும் இயற்கை யான கடன்களாகப் பாவிப்பது சிறந்ததாகும்.



படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலும் ஊக்கம் என்பதைப் பொருளாகப் பாவிக்கின்றோம் - பணமாகவோ பரிசாகவோ. ஆனால் பணியில் ஊக்கம் என்பது என்றோ வருடத்தில் ஒருமுறை நடக்கும் திருவிழா போலல்லாது தினசரி உற்சாகமாக மாறவேண்டும். சில அயல்நாட்டு தனியார் நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் காலையில் துறைசார்ந்த குழுக்கூட்டங்களுக்கு எற்பாடு செய்கின்றன. முந்திய நாள் பணியினைப் பற்றிய ஆய்வு, அலசல், விவாதம், குற்றங்குறைகள், பாராட்டுக்கள், அன்றையநாள் பணிப்பங்கீடு, ஒவ்வொருவர் பணியின் முக்கியத்துவம், சிறப்பம்சங்கள் இவற்றை ஒரு மணிநேர கால அவகாசத்தில் நடத்துகின்றன. இந்தக் குழு விவாதம் கசப்பின்றி தொடர அவ்வப்போது புதிய அம்சங்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. இது எல்லா நிறுவனங்களிலும் முயன்றால் சாத்தியமாக்கலாம். இது பணியின்பால் ஊக்கத்தினை ஏற்படுத்துகிற, சோர்வைக்களைகின்ற அருமருந்தாகச் செயல்படுவதாகக் கூறுகின்றனர்.

ஊக்கம் என்பதை போனஸ் என்றும், பணம் என்றும் அளிக்கையில் அது வேறு விதமாகச் செயல்பட்டதை ஜப்பானிய நிறுவனம் குறித்த ஆய்வு ஒன்றைப் படிக்கும் போது அறிந்தேன். அதிகப்பணமும், பரிசும் வேலையை ஊக்குவிப் பதற்குப் பதிலாக, ஓய்விலும், கேளிக்கையிலும் நாட்டமேற்படுத்துகின்றன, அதிக விடுமுறையிலும், மனச்சோர்விலும் முடிகின்றன என்பதாக.சம்பளமில்லாத விடுப்பு எடுத்துக்கொண்டு வாரக்கணக்கில் ஆட்கள் மாயமாகி விடுவதால், நீண்ட விடுமுறைக்குப் பின் பணியில் தளர்ச்சியும், இதன் தொடர் விளைவுகளாக பல்வேறு உபாதைகளும் ஏற்படுவதாக ஆய்வு தெரிவித்தது. இதனால் சம்பளம் அல்லது ஊக்க போனஸ் என்பது எதிர் விளைவுகளையே உண்டாக்குகிறது. ஊக்க போனஸ் விளையாட்டையும் அதற்கான விடுமுறையையுமே கைக்கொள்வதால், அத்தளங்களை வேலையோடு இணைத்து வைப்பதற்கான செயல்பாடுகளைத் துவங்கினார்கள். இப்படி வேலையை விளையாட்டாக்குவது அல்லது விளையாட்டைப் பின்பற்றி தொழில் விதிகளை மாற்றி அமைப்பதற்கான நடைமுறைகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின் றன.

விவசாயத்தை விளையாட்டாகக் கொள்ள முடியுமா? விளையாட்டு என்றதும் சட்டதிட்டங்களற்ற, நிபந்தனையற்ற கேளிக்கை, எல்லைமீறிய குடி அல்லது பாலுறவு என்ற புரிதலினால் தொந்தரவே உண்டாகின்றது. விளையாட்டாக நட்டு வைத்த தக்காளிச் செடிக்கு, விளையாட்டாக நீர் ஊற்றி, விளையாட்டாகப் பழம் பறிக்கலாம்தான்! அத்தனை சுலபமான விளையாட்டல்ல அது! தொடர்ந்த நீரூற்றல், களையெடுப்பு, நோய்த்தாக்குதலின்றி காப்பாற்றுதல் இவற்றாலான நிபந்தனைகளுக்குட்பட்டதுதான் தக்காளியின் விளைச்சல். ஒரு நாளில் மூன்று மணி நேரம் அல்லது நான்கு மணி நேரம் போதுமானது என்ற நேரக்கணக்கு விவசாயத்துக்கு ஒத்து வராது. பருவத்தே பயிர் செய் என்ற இயற்கை விதிகளுக்குக் கட்டுப்



பட்டது. சில நாட்கள் வேலையிருக்கலாம், சில பருவங்களில் வேலையே இல்லாமலிருக்கலாம். தாவரங்களின் இயல்புகள் எப்படி மனித உழைப்பைக் கட்டுப்படுத்துகின்றனவோ, அவ்வாறே இயந்திர இயல்புகளும் சில கட்டுப்பாடுகளை விதிக்கச் செய்கின்றன. ஆகவே வேலையை விளையாட்டாக்குவது அதைச் சுலபமாக்குவது, மனதுக்கு ஊக்கமளிப்பது என்ற வகையில் மாற்றியமைக்கும் சாத்தியங்களே அன்றி வேறில்லை என்பதை அறிதல் அவசியம். இந்தியச் சூழலில் நிலப்பகிர்மானமும், பஞ்சமி நிலங்கள் மீட்பும் கிராமப்புற தலித்துகளுக்குக் கிடைக்கும் ஊக்கமாகும்.

ஒரு வினையை திறம்படச் செய்வதே நுட்பமான விளையாட்டு. இதனால் கிடைக்கும் மகிழ்ச்சியும் ஊதியம்தான்!

**கட்டாய உழைப்பிலிருந்து விடுதலை:**

எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்குத்தான் என்று மனிதனின் உழைப்பு நடவடிக்கைகளை விளக்கும் சொலவடை நம்மிடையே உண்டு



படிப்பகம்

**வளங்களை சமஅளவில் பங்கீடு செய்ய முடியாததைப் போலவே, உழைப்பையும் பங்கீடு செய்ய முடியவில்லை. தொழில் நுணுக் கம், விசேஷத்திறன், பிறப்பியல்புகள் என்ற போர்வையில் உழைப்பை அதிகாரத்திற்கு சேவகமாக மாற்றியவர்களை எதிர்த்துப் போரிட முடியாதவர்களும், சோம்பேறிகளும் உழைப் பிலிருந்து அனைவரும் விடுதலை பெறமுடியும் என்கின்றார்கள்.**







ஆனால் நடைமுறையில் உழைப்பின் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தத்துவங்கள் பல. சாதி, மதம் சார்ந்த கருத்தியல் தலித் சமூகத்தை ஒடுக்கி பிற சாதியினருக்கு சேவகம் என்றளவில் உழைப்புத் தத்துவத்தை வரையறுக் கையில், மார்க்சியமோ உழைப்பின் மேன்மை யைக் கருத்தில் கொண்டு, புரட்சிக்கான வழியாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என வரையறுக் கிறது. இதனோடே எல்லோருக்கும் உடலு ழைப்பை வற்புறுத்தத் திராணியற்றவர்களே நம்மிடையே வந்து, உழைப்பாளிகளே ஓய் வெடுங்கள் உழைத்தது போதும் என ஓலமிடு கின்றார்கள். வளங்களை சமஅளவில் பங்கீடு செய்ய முடியாததைப் போலவே, உழைப்பையும் பங்கீடு செய்ய முடியவில்லை. தொழில் நுணுக் கம், விசேஷத்திறன், பிறப்பியல்புகள் என்ற போர்வையில் உழைப்பை அதிகாரத்திற்கு சேவகமாக மாற்றியவர்களை எதிர்த்துப் போரிட முடியாதவர்களும், சோம்பேறிகளும் உழைப் பிலிருந்து அனைவரும் விடுதலை பெறமுடியும் என்கின்றார்கள். ஓய்வை கேளிக்கை-பாலுறவு என அர்த்தப்படுத்துகிறார்கள். உடல் விஞ் ஞானம் தொடர்ந்து கேளிக்கையையும் பாலுற வையும் நமக்கு போதிக்கவில்லை. அல்லது தொடர்ந்த வேலையையும் நிர்ப்பந்திக்கவில்லை. பறவைகளின் பறத்தல் சுதந்திர மிதவையோடு உணவுத்தேடலையும் அடக்கியது. ஆகையால் தனிப்பட்ட மனிதர்களின் விருப்பு வெறுப்பு களை யொட்டிய வாய்ப்புக்களும், உடலு ழைப்பை மதிப்புள்ளதாகச் செய்தலும், உழைப்பை அனைவருக்குமாக பகிர்ந்தளிக்கக் கூடியதுமான இலக்குகளை நோக்கியே நாம் நகர வேண்டியுள்ளது. ஒவ்வொரு உழைப்புக்கும் தனித்தனி மதிப்பு அதைச் செய்யும் நபர்களால் தான் உருவாக்கப்படுகின்றது. சந்தை நிலவரங் கள், தொழில் நுணுக்கங்களைப் பரவலாக்காத முயற்சி, அதிகாரக் குவிப்பு, வளங்களின் தேக்கம், சாதியமைப்பையொட்டி முறையானப் பங் கீடின்மை, உபயோகத்திற்கும் பங்கீட்டிற்கும் தேவையான infrastructure இல்லாத நிலை, மூலதனக்குவிப்பு, போட்டிகள், விளம்பரங்கள் இவை யாவும் உழைப்பை மேலும் மேலும் சுரண்டி மதிப்பற்றதாக்கியுள்ளன. இவற்றைக் கலைப்பது, உழைப்புக்கு மதிப்பேற்படுத்துவது என்பவை இவற்றைப் பற்றிய அடிப்படைப் புரிதலின்றி முடியாது. இவற்றைப் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாதிக்கும் என்றார்கள். உழைப் பின் உன்னதம் என்று வேறுவகையான அதி காரத்தையே அது கைக்கொள்ளும். இம்மாற்றங் களை விளைவிப்பதில் கலை - இலக்கியம் - கலாச்சாரத்தின் பங்கு மிக முக்கியமானது. ஆனால் நமது தொழில் நிறுவனங்களோ வியாபார நோக்கு மட்டுமே கொண்டு அனைத்து விஷயங்களை அணுகுகின்றன. நமது பண் பாட்டை சமத்துவம் சகோதரத்துவம் அடிப் படையிலானதாக மாற்றியமைக்க இவற்றிற்கான பண்பாட்டுக் கூறுகளோடு, துணை செய்யும் கலை இலக்கியங்களை இணைக்க வேண்டும். தற்போது இவை தனித்தனித் தீவுகளாக இயங்கு கின்றன. தொழில் நுட்பம், தொழில் வளர்ச்சி என்பது மனித நலன் - சமூக நலன் சார்ந்து, சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் இவற்றின் அடிப்படையில் கலை இலக்கியங்களோடு சேர்ந்து வளரும் போது கட்டாய உழைப் பிலிருந்து விடுதலை கிடைக்கும். இதற்கான பரிசோதனை முயற்சிகளை சிறு சிறு நிறுவனங் கள், குழுக்கள் இவற்றில் மேற்கொள்ள வேண் டிய அவசியம் உள்ளது.

உழைப்பைப் பகிர்ந்தளிக்கவும், சமத்துவம் சகோதரத்துவம் தழைக்க சாதியமைப்பைத் தகர்க்கவும், இச்சமூகத்தைப் புணரமைக்கவும் நம்மால் முடியும் •

தொடரும்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பொதுச் சொத்துக்கள் மற்றும் மூலவள ஆதாரங்களும்: தமிழக தலித் மக்களின் உரிமைப் போராட்டமும்: விமர்சனம்

■ மா. வேலுசாமி

இந்திய மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினராய் (24%, 1991 கணக்கெடுப்பின்படி) வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்கள், இன்று வரை இந்திகயக் குடியுரிமை பெற்ற சமூக அடிமைகளாகவே நடத்தப்பட்டு வருவதை செய்தித்தாள்களிலும் - பல நேரங்களில் நேரிடையாகவும் காணமுடிகிறது. உயர்சாதியினர் என்று தங்களை கருதிக்கொண்டு தலித் மக்களை இரண்டாம் தர குடிமக்களாய் நினைத்து அவர்களை சாதிப் பெயர் அழைத்து அவமானப்படுத்துதல், இழி தொழில்கள் செய்யக் கட்டாயப் படுத்துதல், தீண்டாமை என்னும் வக்கிர புத்தியால் பல்வேறு கொடுமைகளை அவர்களுக்கு ஏற்படுத்துதல், தேர்தலில் நிற்க தடையளிப்பதுடன் - பயமுறுத்துதல், பொருளாதார பலமின்மையை பயன்படுத்தி அதிகாரத்தைத் திணித்தல் என்று எண்ணற்ற கொடுமைகளில் இன்று புதியதாய் மற்றுமொரு உரிமை மறுப்புப் பிரச்சினை. அது பொதுச் சொத்துக்கள் மற்றும் மூலவள ஆதாரங்கள் மீதான தலித் மக்களின் உரிமை கோரல் மற்றும் அதற்கான அவர்களின் போராட்ட உரிமையும் ஆகும்.

கல்வி மற்றும் நில உரிமை போன்றவற்றின் மீதான உரிமைகள் மறுக்கப்பட்டது போலவே பொதுச் சொத்துக்கள் மற்றும் மூலவள ஆதாரங்கள் மீதான தலித் மக்களின் உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் கிராமத்தில் உயர்சாதி இந்துக்களின் நிலங்களிலும். பண்ணைகளிலும் வேலை செய்யும் விவசாயக் கூலிகளாகவும், அவர்களது வீதிகளை, கோயில்களை தூய்மைப் படுத்தும் துப்புரவுப் பணிகளைச் செய்யவுமே தலித் மக்கள் குடியமர்த்தப்பட்டனர் என்பது உயர்சாதியினரின் கருத்து. உதாரணமாக விவசாயக் கூலிகளாகக் கருதப்பட்டு அடிமையுற்றிருந்தவர்களான தலித் மக்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்த பஞ்சமர் நிலங்களையும் தலித் மக்கள் நிலங்கள் வைத்திருப்பதை காணப் பொறுக்காத உயர்சாதியினர், அரசு அதிகாரிகளின் துணை கொண்டு சூழ்ச்சியினால் பஞ்சமர் தவிர வேறு யாரும் விற்கவோ, வாங்கவோ கூடாது என்ற அரசு உத்தரவை செல்லாதது ஆக மாற்றின பின் மீண்டும் தலித் மக்களை நிலமற்றவர்களாக மாற்றிவிட்டனர். தலித் மக்கள் நிலச்சுவன்தார்களான உயர்சாதி இந்துக்களின் மத்தியில் சிறிய பரப்பளவு நிலங்களை வைத்துக் கொள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையினாலும், அச்சுறுத்தல்களாலும் நிலஉரிமை இழப்பது கட்டாயமாக ஆக்கப்பட்டது. பொதுச்சொத்துக்களில் தலித் மக்களின் உரிமை என்பது அக்கிராமத்தில் அவர்களுக்கு உள்ள நிலஉரிமை பொறுத்தே அமையும். ஆனால் கிராமமே அவர்களை இரண்டாம் தர குடிமக்களாய் காணும்போது பொதுச் சொத்துக்களை எப்படி பொதுவானதாகக் கருதமுடியும். மேலும் சில உதாரணங்களிலிருந்து இதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அவை.

1. கிராம அமைப்பும் - பொதுச்சொத்துக்களும்
2. கிராம வருவாயும் - பொதுச்சொத்துக்களும்

## கிராம அமைப்பும் - பொதுச்சொத்துக்களும்

தமிழனுக்கே சொந்தமில்லாத மற்றும் திரிபுவாத தன்மையுடைய இராமாயண, மகாபாரத கதைகளை தமிழர்களின் அனைத்து வகை ஊடகங்களிலும் திணித்துவிட்ட ஆரியர்களின் எழுதப்படாத, சாதியினை வரையறுக்கும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் இன்றுவரை சமூகத்தினையும் அதன் சகலவித நடைமுறைகளையும் கட்டுப்படுத்தி வருகின்ற மனுதர்மத்தின் வர்ணாசிரம கோட்பாடுகள் நாமறிந்ததே. அவற்றின் முக்கிய நிகழ்வுகளை சற்று நினைவு கூர்வோமெனில் நமது இந்திய, தமிழக கிராம அமைப்பின் வரலாற்றை உணர முடியும். வர்ணாசிரம பிறப்பின் அடிப்படையான நாவிலிருந்து தோன்றியவன் (தலை) பிராமணன், மார்பில் இருந்து தோன்றியவன் சத்திரியன் என்றும்



படிப்பகம்

www.padippakam.com

வயிற்றிலிருந்து தோன்றியவன் வைஷ்யன். பாதங்களில் இருந்து தோன்றியவன் சூத்திரன் என்றும் நான்குவித பிறப்பிற்கான அர்த்தங்களைக் கொடுத்ததோடு அவர்களுக்கான தொழில்களை வரையறுத்ததால் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், தங்களின் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும், தங்களுடைய சமூகத்தின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஏதுவான அமைப்பை உருவாக்கிக் கொண்டனர். உதாரணமாக தமிழகத்தின் பெரும்பான்மை கிராமங்களில் பெரிய கோவில் இருக்கும். அதைச் சுற்றி பெரிய வீதி, பொதுக்குளம், சமூக கட்டிடம், கிராமத்தின் முக்கிய அலுவலகங்கள் அமைந்திருக்கும், அங்கேதான் நாவிலிருந்து பிறந்தவர்களுக்கான குடியிருப்புகள் இருக்கும். (பிராமணர்கள் கிராமத்தில் இப்போது குறைவானவர்களே இருக்கின்றார்கள். ஆனால் திருவண்ணாமலை, தஞ்சாவூர், மதுரை போன்ற கோவில் வருமானம் அதிகம் உள்ள இடங்களில் இம்மக்கள் அதிகமாக இருப்பதை காணலாம்) அவர்களைச் சுற்றியுள்ள வீதிகளில் ஆச்சாரி, செட்டியார்கள் போன்ற மார்பில் மற்றும் வயிற்றில் பிறந்தவர்களுக்கான குடியிருப்புகள் இருக்கும். இறுதியாக சூத்திரர்களான மிகவும் பிற்படுத்தப்பட்டவர் குடியிருப்பு அமைந்திருக்கும். ஆனால் இந்த கிராம அமைப்பிலேயே தலித் மக்களின் இருப்பிடத்தினைக் காணமுடியாது. ஏனெனில் அவர்கள் வாழும் பகுதி சேரி என்று அழைக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இன்றளவும் ஒவ்வொரு கிராமத்திலும் தெளிவாகக் காணமுடியும். பிராமணர்களின் சூழ்ச்சியால் வடிவமைக்கப்பட்டு பின்பு கிராம அமைப்பாக மாறி இன்று பிராமணர் அல்லாதார் அதே அமைப்பினை பாதுகாத்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர் என்பதைக் காணமுடிகிறது

கிராம அமைப்பினை உருவாக்கியவர்களே அதற்குத் தேவையான கிராம வளங்களையும், பொதுச் சொத்துக்களையும் தங்களின் தேவைகளுக்கேற்றவாறு அமைத்துக் கொண்டனர். அதாவது கோவில்களும், அதனைச் சுற்றி குளங்களும், தோப்புகளும் அமைக்கப்பட்டன. கோவில் இருப்பதாய் காரணம் காட்டி அழகான சாலை வசதிகள், இறைக்கூட்டங்கள் நடத்துவதற்கான பொதுச்சத்திரங்கள், கோவில் திருவிழாக்கள் நடத்திட பல லட்சம் மதிப்புள்ள தேர், அதில் சிலைகளுடன் அலங்காரமாய் பவனி வருவது என தன்மையும், தான் சார்ந்த சமூக அமைப்பின் நலன் கருதியே உருவாக்கப்பட்ட கிராம அமைப்பில், தலித் மக்கள் காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். அவர்களைப் பார்ப்பது மட்டுமல்ல அவர்களின் நிழலும்கூட தீண்டிடக்கூடாத ஓர் சமூகப் புறக்கணிப்பை சந்தித்து வந்த தலித் மக்கள் தங்களுக்கென்று ஒரு வாழ்வியல் கலாச்சாரம் ஏற்படுத்தி வாழ்ந்து வந்தனர். ஆனால் மக்களாட்சி, சமதர்மம், சகோதரத்துவம் என்று வெள்ளையர்களை விரட்டிட ஒரு சுதந்திர மாயையினை தலித் மக்களின் மீது திணித்து, திடீரென்று சுதந்திரம் பெற்றதாய் விழா எடுத்த இந்து உயர்சாதியினரும், நிலச்சுவன்தார்களும் தங்களின் அதிகாரத்தினுள் சிக்கித்தவிக்கும் தலித் மக்களின் சுதந்திரத்தை மறந்து விட்டனர். இது மாதிரியான கிராம அமைப்பு ஆதிக்க சாதியினரே பயன்படுத்தும் விதத்தில் ஏற்படுத்தப்பட இயற்கை வளங்கள் கிராம அமைப்பின் கடைசி அடுக்கில் வாழும் மக்களான தலித் மக்கள் இன்றல்ல - என்றும் பயன்படுத்த முடியாத வகையினில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் நிச்சயம் கவனித்திடல் வேண்டும்.

**கிராம வருவாயும் - பொதுச் சொத்துக்களும்:**

இரண்டு கால்கள் இழந்த ஒரு இளைஞனை அவனுக்கு உரிமை இருக்கின்றதென்று ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளச் செய்துவிட்டு, உன்னுடைய உரிமையைப் பறிக்கவில்லை, ஆனால் இரண்டு கால்கள் உடையவனே வெற்றி பெற முடியும் என அறிவிக்கும் "வாக்கு விரும்பி அரசுகள்" அவர்களுடைய இயலாமையினை அரசியலாக்கி, ஆட்சி பிடித்து, காலம் காலமாய் தலித் மக்களின் நம்பிக்கையினையும். அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பதாக வேஷமிட்டு, கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து, பொருளாதார பலமிழக்கச் செய்து, இன்றுவரை ஜனநாயக அடிமைகளாக நடத்தப்படுவதை இன்றையச் சூழலில் காணமுடிகிறது. இக்கூற்றை நியாயப் படுத்தும் பல்வேறு நிதர்சன உண்மைகளை வெளியிடுவது பயனளிக்கும்.

கிராமங்கள் இந்தியாவின் புகழ்மிக்க பாரம்பரியத்தின் சான்றுகள். அவை கொண்டுள்ள மூடநம்பிக்கைகள், கல்வியறிவு இல்லாமை என்பதைத் தவிர மற்ற காரணங்களைக் கூறமுடி



படிப்பகம்

www.padippakam.com

யாமல் திரு. காந்தி (மகாத்மா என்று கருதப்படு கின்ற) என்ற ஓர் மனிதர் "கிராம அளவிலான சுயாட்சி மற்றும் விடுதலை" வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அவர் இன்று இருந்திருந் தால் ஒருவேளை நகரங்களில் அவர் சார்ந்த சமூக மக்கள் வாழும் பகுதிக்கு இந்த வாசகத்தை பயன்படுத்தியிருக்கக் கூடும். ஏன் எனில் அன் றைய கண்ணோட்டத்தில் கிராமங்கள் அவரது சமூகத்தாரிடம் இருந்தது என்ற சுயநல சந்தேக மும், எதிர்மறை கேள்வியும் அவசியமாகிறது ஆனால் எந்த ஒரு உடலுழைப் பும் இல்லாமல் மதத்தையும், மேல்நிலைக் கல்வியும் - அதிகார வர்க்கத்தின் ஆக்கிரமிப்பும் மட்டும் கொண்டு ஒரு சமூகம் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பது ஒரு தவிர்க்க முடியாத கேள்வி.

மேற்கூறிய செய்திக்கும், எடுத்துக்கொண்ட தலைப்பிற்கும் என்ன உறவுகள் என்பதைபோல நெருடல்கள் வரும். எந்தவொரு இந்திய சமூக ஆய்வினை எடுத்துக்கொண்டாலும் வரலாறும், சமூக அமைப்பும் அதன் கூறுகள் என்பதை மறுக்க இயலாது. இந்திய கிராமங்களில் ஒரு நாள் தங்கினால் இவை வெளிப்படும். உதாரண மாக இந்துமத பார்ப்பனிய கருத்துக்களே குடும்ப, சமூக செலவுகளை நிர்ணயிக்கின்றது. அங்கீகரிக் கப்படாத தனிக்குழு, தன்னுடைய நடை, உடை, பாவனைகளின் மூலம் பெரும்பான்மை யினர் கவனத்தை ஈர்த்து பிறகு தங்களுடைய பாவனைகளை அந்த பெரும்பான்மை சமூகத் தார்க்கு அளித்துவிட்டு சென்றிருப்பது போல ஒரு மாபெரும் சமூக ஏய்ப்பை ஏற்படுத்திவிட்டு இன்று நகரங்களை ஆக்கிரமித்து, தொலைக் காட்சி சீரியல்களின் வழியாக மீண்டும் ஏமாற்று (பார்ப்பனீய) கலாச்சாரத்தை இன்றுவரை திணித்து வரும் அதிசயத்தை எழுதாமல் - புரிந்து கொள்ள முடியாமல் நாம் எதையும் விளங்கிக் கொள்ள முடியாது.

தமிழ் வருடத்தின் அனைத்து மாதங்களிலும் ஒரு இந்து திருவிழாவை உருவாக்கி அதனுள் இருக்கிற மாபெரும் உண்டியல் தொகை, ஊர்ப் பணம் என்று மக்களின் உழைப்பு மற்றும் கூலிக் கான சேமிப்புத் தொகைகளை மதம் என்ற பெயரால் சிறுபான்மையினர் சுரண்டி வருகின்ற னர். அதனால் தங்களின் சமூகத்திற்கு பயன்படு கின்ற வளங்களை பேணி காப்பது அவர்களது சமூகக் கடமைகளில் ஒன்றாக இருந்தது. அதனை இன்றைக்குள்ள அதிகார வர்க்கத்தினர் பிறசாதி யினர் அப்படியே பாதுகாத்திடும் வேளையில் விழிப்புணர்வு பெற்றிட்ட தலித் மக்கள் அதன் மீது சமஉரிமை கொண்டாட முயற்சிக்கும் போதுதான் சூழலியல் பாதுகாப்பு, பொதுச் சொத்து ஆக்கிரமிப்பு, கலவரங்கள் என்ற மாயை உருவாக்கப்பட்டு ஆதிக்க சாதிகளால் உரிமைகள் மறுக்கப்படுவதையும், பொதுச் சொத்து உயர் சாதிகளின் உரிமைச் சொத்தாக இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதையும் காணமுடிகிறது.

கிராம வருவாய்க்கும், பொதுச்சொத்துக் களுக்கும் உள்ள ஒரு உறவை தனியாக எழுது வதுடன் பல உதாரணங்களுடன் விளக்குவதை எனது கடமையாகக் கொள்கின்றேன்.

கிராம நிர்வாகத்தினை அந்த கிராமத்தைச் சேர்ந்த நேர்மையான சாதிப்பாகுபாடற்ற ஒரு தலைவன் தலைமையேற்று நடத்தவேண்டும் என்று பஞ்சாயத்து அரசியல் கிராம அளவில் உருவாக்கப்பட்டு கிராம அளவிலான அனைத்து வருவாய் அமைப்புகளையும் கிராம அளவில் ஒப்படைத்தது தமிழக அரசாங்கம் (பஞ்சாயத்து அரசியல் சாசனம் 92-வது விதியின்படி நியாய மானது). ஆனால் கிராமத்தின் 90 சதவிகி தம் தலித் அல்லாதவர்கள் மற்றும் தலித் விரோதப் போக்கு கொண்டவர்களுமே "பஞ்சாயத்துத் தலைவர்களாக" தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இதனால் சாதியத்தின் தன்மை கிராம வருவாயிலும் திணிக்கப்படுகிறது. இதனைத் தான் டாக்டர் அம்பேத்கர் அரசியல் சட்டமோ, அதிகார மாற்றமோ எங்கள் சமூகத்திற்கு எவ்வித பயனும் அளிக்கப்போவது இல்லை சமூக மாற்றமே எங்களுக்கு சுதந்திரத்தை பெற்றுதரக் கூடிய சாத்தியக்கூறு என்று கூறியுள்ளார்.

ஆனால் சமூக மாற்றம் இன்றுவரை நிகழாதபோது மாறுகின்ற சட்டங்களுக்கேற்ற வாறு தங்களுடைய ஆதிக்க யுத்தியை மாற்றி ய மைத்து தலித் மக்களை சக்தியற்றவர்களாக, செயலிழந்தவர்களாக மாற்றுவதில் கவனத்தை (உயர் சாதியினர்) செலுத்துகிறார்கள். உதாரண மாக ஏலங்கள் (மீன், காடுகள், நிலங்கள், மது பானக்கடைகள், பொதுச்சொத்துக்கள், தற் பொழுது புதியதாக அரசு சட்டத்திற்கெதிராக தேர்தல் நடத்தாமல் தலைவர் பதவிக்கான ஏலம்) விடுவதில் வரும் குத்தகைத் தொகையினை தேர்ந் தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் தங்களுக்குப் போக மீதியை கோவில் நிர்வாகத்திடமும், திருவிழாக்



படிப்பகம்

www.padippakam.com

கமிட்டியிடமும் மட்டுமே ஒப்படைக்கிறார்கள், குறிப்பாக இந்தத் தொகைகள் தலித் மக்களைச் சென்றடைவது இல்லை. ஏதோ அரசு சட்ட பயமுறுத்தலால் கோவிலில் நுழைய மட்டுமே அனுமதி. இச்சலுகை கூட நிர்வாகத்தில் இல்லை. கோவில் நழைவுகூட பல இடங்களில் புறக்கணிக்கப்படுகின்றது (இளங்குண்ணி - திருவண்ணாமலை மாவட்டம்).

**இக்கூற்றுகளை நியாயப்படுத்தக்கூடிய சம்பவங்கள்:**

புளியமரம் மற்றும் சமூக வனக்காடுகள் (முந்திரி, தைலம்) போன்ற குத்தகைகளில் தலித் மக்கள் இன்றுவரை வேடிக்கை பார்க்கவே அனுமதிக்கப்பட்டனர். ஆனால் முதன்முறையாக தங்களுக்கும் அதில் உரிமைகள் இருக்கின்றன. என்றெண்ணி நரசிங்கப்பட்டி (1992, மதுரை மாவட்டம்) தலித் மக்கள் ஏலம் எடுக்க விழைய அவர்கள் மட்டுமல்ல அவர்களது தலைமுறையினர் கூட இவ்விஷயத்தில் தலையிட முடியாதவாறு அச்சுறுத்தப்பட்டு உள்ளனர். இது போலவே கோவில் நிலங்களுக்கான குத்தகை எடுக்கச் சென்றபோது சென்னகரம் பட்டியிலும், விழுப்புரம் மாவட்டம் விழதாவூர் கிராமத்திலும், அவை கலவரங்களாக மாற்றப்பட்டன. மேலும் இந்த பொது ஏலத்தொகைகள் கிராம முக்கிய நிகழ்வுகளுக்கும், கிராம பொது நலச் சேவைகளுக்கும் பயன்படுவதை விட தலித் மக்களின் எழுச்சியை அடக்குவதற்கே பெரும்பாலும் பயன்படுகின்றது. உதாரணமாக கடந்த பஞ்சாயத்து தேர்தலில் வென்ற மேல வளவு கிராம பஞ்சாயத்து தலைவர் முருகேசன் (1997) அவர்களது கொலை வழக்கை சந்திக்க ஊர் பொதுப் பணத்தை உயர்சாதியினர் செலவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கிராமம் அவர்களுடையது (உயர்சாதியினர்). அவர்கள் மட்டுமே (உயர்சாதி இந்துக்கள்) திருவிழாக்கள், பொதுக் கூட்டங்கள், அரசியல் விழாக்கள் நடத்த வேண்டும் என்பது எழுதப்படாத சமூகச் சட்டம். ஆனால் இந்திய அரசியலமைப்பை நம்பி, தங்களுடைய அரசியல் தலை வரை (வேறுயாருமல்ல, அரசியலமைப்பை வடி வமைத்த டாக்டர் அம்பேத்கர் அவர்கள்) அவருடைய பிறந்த நாளில் நினைவு கூர்ந்து, அவர் கருத்துக்களைக் கூற விரும்பிய ஒரே காரணத்துக்காக, எர்ரம்பட்டி (நிகழ்வு 14.042001) கிராமத்தைச் சேர்ந்த தலித்துகளும், ஐந்து மாதக் குழந்தையான அம்பேத்ராசா மற்றும் அக்கிராமத்தில் புரட்சி வித்தை விதைத்து உயிர்விட்ட தோழர் சோலைமலை (24) மற்றும் உயிர்பிழைக்க அஞ்சி யோடிய கிராம மக்களும் இனி இது போன்ற சம்பவங்களில் ஈடுபடக் கூடாதென்ற விதத்தில் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள் அக்கிராமத்தின் உயர்சாதியினர். "தலித் மக்கள் திரட்டப்பட்ட அரசியல் சக்தியாக வளரும் போது அவர்கள் மீதான வன்கொடுமைகள் குறையும் என்ற எதிர்பார்ப்பையும், ஆதங்கத்தையும் அழித்துவிட்டது எர்ரம்பட்டி தாக்குதல்" என்று எழுச்சி தலித் முரசில் (மே, 2001) எழுதியிருந்த வாசகம் எவ்வளவு பொருத்தமானது என்றுணர வேண்டும்.

கிராம வருவாய் மொத்தமாக உயர்சாதி இந்துக்களிடம் சென்று அவர்களின் சாதி அதிகாரத்திற்கும், இந்தும தசாதி வெறித்தனத்திற்கும் பயன்படுகின்றபோது தினந்தோறும் வயிற்றுக்கூலிக்குப் போராடும் தலித் மக்கள் அவர்களுடைய (சாதி இந்துக்கள்) நிகழ்வுகளில் கலந்துகொள்வது என்பதையே சாதி இந்துக்கள் தலித்துகளுக்கு தந்த விடுதலை என கருதுகின்றார்கள். ஆனால் அந்த நிகழ்வுகளின் பொறுப்புகளில் தங்களுக்கு முழு அளவிலான சதந்திரத்துடன் கூடிய பங்கேற்பு என்பதே தலித் மக்களின் கனவு.

சகோதரத்துவம், சமத்துவம், ஜனநாயகம் சட்ட பாதுகாப்பு என்பனவற்றை தலித் மக்களின் வோட்டுக்களைப் பெறுவதற்காக மட்டுமே பயன் படுத்துவதைத் தவிர்த்து - தலித் மக்களும் இந்திய நாட்டின் அனைத்து வளங்களைப் பெறுவதற்கு உரிமையானவர்களே என்பதை உறுதி செய்திட அரசும், அரசு இயந்திரங்களும், அரசியல் வாதிகளும், மதவாதிகளும் நினைத்திடல் வேண்டும். இல்லையெனில், மாபெரும் போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

நான், தனிவாக்குரிமை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை ஆகியன கேட்கும்போது மட்டும்தான் - இந்த அவையில் நான் உயிருடன் இருப்பது உங்களுக்குத் தெரிகிறது. மற்ற நேரங்களில் நான் இறந்துவிட்டதாகவே நினைத்து நீங்கள் செயல்



படிப்பகம்

www.padippakam.com

படுகின்றீர்கள். உங்களுக்கு தேசிய சிந்தனை இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்களிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்வீர்களா?

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் உரிமைகளுக்காக எழுந்து போராட முன்வந்து விட்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். “நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளைக்கூட தொடர்ந்து எதிர்ப்பீர்கள் எனில் நாங்கள் எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு ரத்தம் சிந்தக்கூட தயங்க மாட்டோம்.” (பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு-10: பக்கம்-354).

மூவாயிரம் ஆண்டுகால அடக்குமுறைகளை 54 ஆண்டுகால சட்டங்களினால் ஏதும் ஒழித்து விட முடியாது என்பது ஒரு பக்கம். சட்டங்களினால் மட்டும் நாம் சுதந்திரம் பெற்றுள்ளோம் என்ற நம்பிக்கைக் கொண்டு உரிமைகளைப் பெற்றுவிட எழுச்சிக் கொள்ளும் தலித் மக்கள் மறுபக்கம். இதுவரை சட்டங்கள் தலித் மக்களின் உரிமைகளுக்கெதிராகவும், புறக்கணிக்கப்பட்டும் வருவதனால், தலித் இளைஞர்கள் மனதில் அரசு - அரசியலமைப்பு - அரசியல்வாதிகள் ஆகியோர் ஒரு வெறியூட்டும் சக்திகளாக மாறிவரும் அபாயத்தை அனைவரும் உணர வேண்டும். இறுதியாக **சமத்துவமும் சுதந்திரமும் மட்டுமே** ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியாது. சமூகம் ஏற்றத்தாழ்வினைக் கொண்டிருக்கும்போது, அனைவருக்கும் சம வாய்ப்பை அளிப்பது - வலுப்பெற்றவன் பயன் பெற மட்டுமே உதவும், நலிந்தவன் ஏமாற வழி வகுக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ●

# அன்னியம்

**கா**ன்கிரீட் காடுகளைத் தாண்டி
நான் பயணப் படும் போதெல்லாம்
நீ கட்டாயம் பார்வையில் படுகிறாய்

உன் கருத்த தோலின் வியர்வைக்கு
விலை அன்றைய நிலவரப்படி அமையும்
அனேகமாக உயர்வதே இல்லை

உன் உழைப்பின் விளைவுகளில்
ஒண்டிப் பிழைக்காத உயிரேதுமில்லை
ஆனாலும் நீ தீண்டத்தகாதவன்

உன் குழந்தைகளைப் பள்ளிக்கு
அனுப்பாத குற்றவாளியும் நீயே
நகரம் நிராகரித்த புறங்களை ஆக்கிரமித்தவனும்

எம் சிந்தனையின் தீராப் பிணிகள்
உனக்கொரு பொருட்டல்ல - நவீன மருத்துவம்
நோயுற்ற உன் பெண்டுபிள்ளைகளுக்கு அப்பாற்பட்டாலும்

உன் இடது ஆட்காட்டி விரல் மேலும்
இடது பெரு விரல் கீழ்ப்புறமும்
படும் கறைகள் உனக்கு அன்னியமானவை

■ சத்யானந்தன்



படிப்பகம்


www.padippakam.com

■ அ. இருதயராஜ்

# கருவிலிருந்து கல்லறை வரை...

டெல்லியில் நான் தங்கியிருக்கிற பக்கத்து வளாகத்தில் இருக்கிற கவர்னர் மாளிகையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் ஷீலா திக்சித் பதவியேற்கிற விழா நடந்தது. பதவியேற்பு விழாவுக்கு வந்திருந்த திருமதி. சோனியா காந்திக்கும், ஷீலா திக்சித்துக்கும் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. 'சோனியா காந்தி வாழ்க' 'ஷீலா திக்சித் வாழ்க' என்ற கோஷங்கள் விண்ணை முட்டின. நடந்து முடிந்த நான்கு வடமாநிலங்களின் முதல்வர்களில் மூன்று பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மத்தியப் பிரதேசம் (உமா பாரதி), ராஜஸ்தான் (வசுந்தரா ராஜே), டெல்லி (ஷீலா திக்சித்), பிகார் (ராப்ரி தேவி), தமிழ்நாடு (ஜெயலலிதா) ஆகிய ஐந்து மாநிலங்களை தற்போது ஆளுவது பெண்கள் என்பது பெருமை தரும் விசயமல்லவா? உத்திரப் பிரதேசத்தில் ஒருவேளை மாயாவதி ஆட்சி தொடர்ந்திருக்குமென்றால் ஆறு பெண் முதல்வர்களாக இருந்திருப்பார்கள். இதன்மூலம் பெண்கள் தங்களின் அரசியல் பலத்தைப் பெருக்கி வருகிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியுமா?

ஐந்து பெண் முதல்வர்களின் அரசியல் அதிகாரம் எந்த வகையில் சாவின் விளிம்பிலும், அவமானத்தின் சகதிக்குள்ளும் சிக்கிக்கிடக்கிற அடித்தட்டுப் பெண்களைக் காப்பாற்றப் போறது? ஆணாதிக்கத்தின் வக்கிரத்திலிருந்தும், உலகமயமாக்கலின் கோரப்பிடியில் இன்பம் தரும் பண்டமாக்கப்பட்டதிலிருந்தும், பெண் விடுதலையாவதற்கு இந்த ஐந்து பெண்களின் அரசியல் அதிகாரம் நம்பிக்கை தரும் சின்னமாக அமைய முடியுமா? பாதிக்கப்பட்ட பெண்களின் அழுகைக் குரலில் வெளிப்படும் வெப்பக் கேள்விகள் இவை. சமீப காலத்தில் இந்த ஐந்து பெண் முதல்வர்களின் படங்கள் பத்திரிக்கைகளில் அட்டைப் படங்களாக பிரசுரிக்கப்படுகின்றன. அவர்களைப் பாராட்டி பல பத்திரிக்கைகள் கட்டுரைகள் எழுதுகின்றன. செய்தி நேரங்களில் அவர்களுக்கு சிறப்பு இடம் கிடைக்கிறது. இதெல்லாம் எதற்காக? இந்தியாவெங்கும் வெளியே சொல்ல முடியாத வேதனைகளை உள்ளத்தில் போட்டு அடக்கி வைத்துக் கொண்டு குமுறிக் கொண்டிருக்கும் அப்பாவிப் பெண்களுக்கு ஆறுதல் சொல்லுவதற்காகவா! இல்லை. விளையாட்டுப் போக்காக அரசியல்



அதிகாரம் தந்தாலும், பெண்ணானவள் ஆணின் பார்வையில் ஒருபடி தாழ்ந்தவள்தான் என்ற சிந்தனை ஒருபோதும் மறையாது என்பதுதான் எதார்த்தமாக உள்ளது. எனவேதான், ஐந்து பெண் முதல்வர்கள் உள்ள இந்தியாவில், சராசரி பெண்களின் நிலைமை எப்படி உள்ளது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்-பெண் விகிதாசாரம் எப்படியுள்ளது என்ற கணக்கெடுப்பின் முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. இதில் அதிர்ச்சியளிக்கும் உண்மைகள் வெளிப்பட்டன. ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு தொள்ளாயிரத்து இருபத்தி ஏழு பெண்கள்தான் இருக்கிறார்கள். இன்னும் டெல்லி போன்ற பெருநகரங்களில் பெண்களின் எண்ணிக்கை எண்ணூற்று நாற்பத்தி ஐந்தாக குறைந்துள்ளது. ஆணோ பெண்ணோ கடவுள் கொடுத்ததை ஏற்றுக் கொள்வோம் என்று சொன்னதெல்லாம் இனி மேல் பொய் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், பெண் குழந்தைகளின் எண்ணிக்கைக் குறைவுக்கு கடவுள் காரணமல்ல. மனிதனின் செருக்கு நிறைந்த அறிவும், சுயநலமும்தான். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் ஆண்-மையச் சிந்தனைதான் முக்கியமான காரணமாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

தாயின் கருவறை பெண் குழந்தைகளுக்கு மட்டும் கல்லறையாக மாறுவது அறிவியல் கண்டுபிடிப்பின் மிகப்பெரிய சாபக்கேடு. கருவில் இருக்கும் குழந்தைக்கு ஏதாவது குறையிருக்கிறதா என்று கண்டறிய உருவாக்கப்பட்ட ஸ்கேன் எந்திரங்கள் நாளடைவில் கொலைக் கருவிகளாக மாற்றப்பட்டுள்ளன.

உலகமயமாக்கல் தோற்றுவித்த நுகர்வு வெறி, அழகை ஒரு பண்டமாக மாற்றியுள்ளது. அழகோடு சம்பந்தப்படுத்தி பேசப்படுகிற பெண்ணும் ஒரு பண்டமாக மாற்றப்பட்டுள்ளாள். எனவேதான், பெண்ணை மையப்படுத்திய அழகு சாதனப் பொருட்கள் இந்தியாவில் கட்டுக் கடங்காமல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. எல்லாப் பண்டங்களையும் பயன்படுத்த வேண்டும்; நுகர வேண்டும் என்ற எண்ணம், பண்டமாக மாற்றப் பட்டுள்ள பெண்ணையும் நுகரவேண்டும் என்ற வக்கிர சிந்தனைக்கு வழிவகுத்துள்ளது. பெண்ணானவள் ஆணின் பார்வைக்கு அழகாகவும், கவர்ச்சியாகவும் தெரியவேண்டும் என்பதே சந்தை சொல்லித் தருகிற தத்துவம். எனவே, அழகுப் பொருட்கள் அனைத்தும், பெண்ணை ஆணின் பார்வையில் கவர்ச்சிப் பொருளாக மாற்றத் துடிப்பதால் அவள் மாண்புள்ள ஒரு மனுசி என்பதை மறக்கடிக்கிறது. பெண்ணின் தன்மான ஆடைகளை அவிழ்த்து அவமானப் படுத்துவதற்குப் பொறுப்பற்ற ஊடகங்கள் தலை குனிய வேண்டும். இலாபம், சூடான செய்திகள், பரபரப்பு, பாலியல் வக்கிரம் என்ற போர்வையில் பெண் படும் துன்பத்திற்கு அளவேயில்லையா? என்ற கேள்வி எழுகிறது. பெரிய இடத்து புள்ளிகளிடம் தொடர்பு வைத்திருந்ததால் தமிழகத்தில் செரினாவும், ஜீவஜோதியும் படுகிற அவலத்திற்கு எல்லையேயில்லை என்றாகி விட்டது. இருவரும் பெண்கள் என்பதால் எத்தனை எத்தனை செய்திகள், கிசுகிசுப்புகள், அட்டைப் படங்கள், அலங் கோலங்கள். ஊடகங்கள் கொண்டுவரும் அவமரியாதை தற்கொலையைவிட மோசமானது என்பதை பாதிக்கப்பட்ட இருவரும் உணர்ந்திருப்பார்கள்.

டெல்லி, கல்கத்தா, பாம்பே போன்ற மெட்ரோ நகரங்களில் கற்பழிப்பு சம்பவங்கள் அதிகரித்து வருவதையும் நாம் பார்க்கிறோம். ஒரு சில மாதங்களுக்கு முன் சர்வதேச திரைப்பட விழா நடக்கும் அரங்கத்திற்குச் சற்று தொலைவில் சுவிச்சர்லாந்து தூதரகப் பெண்ணைக் காரில் வைத்து கற்பழித்ததைச் செய்தித்தாளில் வாசித்தோம். இந்தக் கற்பழிப்பு சம்பவம் சினிமாவைவிட ஒரு படி மேலே போய், நூற்றுக் கணக்கான கார்களும், மனிதர்களும் நடமாடும் பகுதியில்தான் நடந்துள்ளது. ஒரு பெண்ணுக்கு நடக்கிற வன்முறை யாருடைய கவனத்திற்கும் எட்டாத நிகழ்வாக மாறிவிட்டது கவலைதரும் விசயம்தான். பொது இடங்களிலும், அலுவலகங்களிலும், சொல்லாலும், உடல்ரீதியாகவும், பெண் துன்புறுத்தப்படுகிறாள்.

தேசிய அளவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை பதிவு செய்யும் அமைப்பு கொடுக்கிற கணக்குப்படி, இந்தியாவில் மட்டும் ஒரு நாளைக்கு 480 வாக்குகள் பதிவு செய்யப் படுகின்றன. மேலும் ஒரு நாளைக்கு 45 கற்பழிப்பு வழக்குகளும் 19 வரதட்சணைச் சாவுகளும் பதிவு செய்யப்படுகின்றன. இதில் பதிவு செய்யப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறைவுதான். பதிவு செய்யப்படாத, செய்தியில் வராத வன்முறைகள் எத்தனையோ அன்றாடம் அரங்கேறுகின்றன.

வீடுதான் பெண்களுக்கு பாதுகாப்பான இடம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இது தவறு. வீட்டிலும் பெண்களுக்கு பல கொடூரங்கள் நடக்கின்றன. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் பாதுகாப்பாக வீட்டில் இருக்கிற நான்கு பெண்கள் கொடுமைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். ஒருமணி நேரத்திற்கு நான்கு பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் படுகிறார்கள். பெரும்பாலும் வீட்டில் உள்ள ஆண்களின் நண்பர்கள்போல வந்து போகிறவர்கள் பெண்களின் எமன்களாக மாறி விடுவதாக ஆய்வு கூறுகிறது. வீடும் நரகமென்றால் அவர்கள் எங்குதான் போவார்கள்?

பெண்ணாகப் பிறப்பதே பாவம் என்றால், சமூகத்தில் இழிவாகக் கருதப்படுகிற தலித் பெண்ணாக பிறப்பது கொடுமையான விசயம். அவள் பெண்ணாக, தலித் பெண்ணாக, பொருளாதாரத்தில் ஏழைப் பெண்ணாக பன்முக ஒடுக்குதலுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகிறாள். பெண்ணாக இருந்து உடல் ரீதியாக துன்புறுத் தப்படும்போது அவள் தலித் என்பதால் தீண்டாமைக் கொடுமையையும் சேர்த்து சுமக்கிறாள். உயிர்வாழும்போதே நரகத்தை அனுபவிப்பவர்கள் தலித் பெண்கள்தான். இந்தியா வெங்கும் தலித் பெண்கள் சந்திக்கிற கொடுமைகளை ஊடகங்கள் பதிவு செய்ய மறந்து விடுகின்றன. சில சமயங்களில் மறுத்து விடுகின்றன. தமிழகத்தில் எல்லாக் கிராமங்களிலும் உள்ள தலித் பெண்கள் எந்த நேரத்திலும் தங்களுடைய உடலை உயர்சாதிக்காரன் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக வைத்திருக்க வேண்டும். பண்ருட்டிக்குப் பக்கத்திலுள்ள சிறுதொண்டமாதேவி கிராமத்தில், தலித் பெண்கள் ஒவ்வொரு நாளும்



படிப்பகம்

www.padippakam.com

பாலியல் வன்முறைக்குள்ளாகப் படுகின்றனர். சாதிக்கார ஆண்கள் எந்தவித தடையுமின்றி தலித் பெண்களை வீட்டில் புகுந்து பலாத்காரம் செய்கிற பயங்கரம் நடக்கிறது. இதை ‘பறை’ என்ற குறும்படம் சிறப்பாக படம் பிடித்துக் காட்டுகிறது.

பெண் கருவிலிருந்து கல்லறை வரை பல கசப்புகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மணிநேரமும் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள போராட வேண்டியிருக்கிறது. ஆணாதிக்க சிந்தனை புரையோடிப் போயிருக்கிற சமூகத்தில் பெண் விடுதலை பெற வேண்டுமென்றால், ஆணின் சிந்தனையிலும், மன நிலையிலும் மாற்றம் நிகழவேண்டும். பெண் கல்வி வலியுறுத்தப்பட வேண்டும். ஆணின் மீதுள்ள சார்புத்தன்மைக் கலையப்பட வேண்டும். சுயமாக சிந்திக்கிற, முடிவெடுக்கிற சுதந்திரம் பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும். சமூகத்தின் கடைக்கோடியில் உள்ள பெண் விழிக்காதவரை, பெண்களுக்குக் கிடைக்கும் அரசியல் அதிகாரம் அர்த்தமற்றதாகவே இருக்கும். ●

## மறைவு

அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தில் பல வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. **கே.எஸ். ஜெகன்நாதன்** அவர்கள் அதன் எஸ்.சி./எஸ்.டி. நலச்சங்க தலைவராகத் தொண்டாற்றி தலித் ஊழியர்களுக்குச் சேர வேண்டிய பல சலுகைகளை உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடி வாங்கிக் கொடுத்தவர். வேலை மற்றும் கல்வி சம்பந்தமாக கிராமங்களில் இருந்து சென்னை வரும் தலித் மாணவர்கள் தங்கிக் கொள்வதற்காக அருள்ஒளி அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் சமுதாய மையம் ஒன்றை இவர் உருவாக்கினார். மலேசிய அம்பேத்கர் இன்டர்நேஷனல் மிஷன் போன்ற பல்வேறு சேவை அமைப்புகளுடன் தன்னைத் தொடர்புபடுத்திக்கொண்ட திரு. கே.எஸ். ஜெகன்நாதன் 13-12-2003 அன்று நம்மிடமிருந்து மறைந்துவிட்டார். அவருக்கு நமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## கறுப்பு அறிக்கை...

நான் கேட்கவில்லை
கதிரையும் நிலவையும்
உங்கள் வானத்திடமிருந்து
உங்கள் வயல்களையோ உங்கள் நிலங்களையோ
உங்கள் மாடிவீடுகளையோ மாளிகைகளையோ
நான் கேட்கவில்லை
தெய்வங்களையோ சடங்குகளையோ
சாதிகளையோ சமயக் குழுக்களையோ
அல்லது உங்கள்
தாயையோ மகளையோ சகோதரியையோ...
நான் கேட்பதெல்லாம்
மனிதனுக்குரிய எனது உரிமைகளை
எனது நுரையீரலின் ஒவ்வொரு மூச்சுக் காற்றும்
வன்முறையின் கண்ணீர்த்துளியைத் துடைக்கின்றன
உங்களது பனுவல்களிலும் மரபுகளிலும்
உங்களது நரகங்களிலும் மோட்சங்களிலும்
மாசு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தால்
உங்களது ஆயுதங்கள் உபாயத்தயாராக உள்ளன
எங்களது வாழ்விடங்களைத் தரைமட்டமாக்க!
நீ என்னை அடிக்கிறாய்! சிதைக்கிறாய்!
எனது வீட்டைக் கொள்ளையிட்டபின் எரிக்கிறாய்!
ஆனால் என் நண்பர்களே!
கிழக்குச் சூரியனில் விதைத்தவை போன்ற
எனது வார்த்தைகளை எவ்வாறு நீ அழிக்க முடியும்?
எனது உரிமைகள்:
தொற்றித் தொடரும் கலகங்களால்
நகரம் நகரமாய், கிராமம் கிராமமாய்
ஆள்பின் ஆளாய்
மூடுண்டுபோய்,
சாதிவிலக்கப்பட்டு, சாலை அடைக்கப்பட்டு
நாடு கடத்தப்பட்டதாய்
எனது உரிமைகளது நிலைமை அப்படித்தான் உள்ளன
எனது உரிமைகள் வேண்டும் எனக்கு
கொடு எனது உரிமைகளை
சட்டவிரோதமாக எரிக்கப்பட்ட எதார்த்தங்களை
மறுக்கமுடியுமா உன்னால்?
வேதநூல்களைப் பெயர்த்து எறிந்துவிடுவேன் நான்
தண்டவாளங்களைத் தகர்த்துவிடுவதுபோல்
சட்ட விரோதமான உங்கள் சட்டங்கள்
எரிகின்ற நகரப்பேருந்து போன்றவை
என் தோழர்களே!
வானில் எழுகின்ற கதிர் போன்றவை
எனது உரிமைகள்
இந்தக் கதிர் எழுச்சியை மறுக்க முடியுமா உன்னால்?

- சரண்குமார் லிம்பாலே (மராட்டி)
- பிரியம்மா அடர்கார் (ஆங்கிலம்)
- முனைவர் அந்தோனிகுருசு (தமிழில்)



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி - பதில்

■ முனிமா

✍ 'கோவேறு கழுதைகள்' போன்ற தலித் விரோத மனப்பான்மையில் எழுதப்பட்ட படைப்புகளைப் பாராட்டும் விதமாக புதிய கோடாங்கியில் கட்டுரைகள் வெளியாகின்றன. இதுபற்றி புதிய கோடாங்கியின் கருத்து என்ன?

- **செழியன்,** நெல்லை.

சுயசாதி விமர்சனம் தலித்துக்கு விரோத மானது என எப்படிக் கூற முடியும். இந்த இதழில் கூட நீலவனின் 'எதுக்குப் பொய் சொல்லனும்'? என்ற சிறுகதை வெளியாகியுள்ளது. குடியானப் பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததற்காக தலித் ஒருவனை உயிரோடு தீ வைத்துக் கொளுத்துகிறார்கள் குடியானவர்கள். வழக்குப் பதிவு செய்யப்பட்டும் தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் வழக்கு தோற்கிறது. அதை ஈடு கட்ட பிறிதொரு சந்தர்ப்பத்தில் நோய் காரண மாக விஷமருந்திச் சாகும் தலித்தின் சாவை அவன் பெண்ணை சாட்சியாக்கி குடியான வர்கள் செய்த கொலையாக ஜோடிக்க விரும்பு கிறது தலித் சமூகம். பொய் சாட்சி சொல்ல மறுக்கிறாள் அந்தப் பெண். இதுதான் கதை. தலித்தல்லாதார் மலம் திணிப்பதும் (திண்ணி யம்), மலத்தைக் கரைத்து உடலில் தெளிப்பதும் (மதுரை), உயிரோடு கொளுத்துவதும் (விருத்தாச் சலம்) தொடர்ந்து நடக்கிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட இரண் டாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளில் வெறும் 7 சதவிகிதமே வெற்றி பெறுகின்றன. தலித்தல்லா தார் கொடுமையும் நிகழ்த்திவிட்டு அரசு துணை யுடன் பொய்சாட்சி சொல்லியும், மிரட்டியும் குற்றத்திலிருந்து தப்பிவிடுகிறார்கள். தலித்தல் லாதவரின் நேர்மையற்ற செயல்களுக்கு எதிர் மறையாக ஒரு தலித் பெண் நேர்மையுடன் பொய் சொல்ல மறுக்கிறாள். இது தலித்துக் குணம் என்பதாகத்தான் இச்சிறுகதை கருதுகிறது. கோவேறு கழுதைகள் நாவலும் உட்சாதிப் பிரிவுகளில் நிலவும் நுட்பமான ஒடுக்கு முறை யைக் களைய வேண்டுகோள் விடுக்கிறது.

தலித் சமூகம், தலித்தல்லாதவரைப் பழி வாங்க அனைத்து நியாயங்களையும் வைத்துக் கொண்டுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதை எதிர்கொள்ள தலித் ஓரணியில் திரண்டு போராடும் அவசியமுள்ளது. முறையாக (கற்பி, கிளர்ச்சிசெய், ஒன்றுசேர்) விழிப்புணர் வூட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்ட இயக்கமே சோதனைகளைத் தாங்கி போராடும் என்பது வரலாற்றுண்மை. அதிமுக, திமுக, பாஜக என பதவி சார்ந்த. சந்தர்ப்பவாதத்தைக் கைக்கொள் ளும் இயக்கங்கள் பழிவாங்கல் நியாயத்தைத் தான் வற்புறுத்துகின்றன - நீலவன் சிறுகதையி லுள்ள தலித் சமூகம் போல. வெற்றிபெறு வதற்கான போராட்ட உத்திகளை வகுக்காமல், சந்தடி சாக்கில் நுழைந்து பழிவாங்குவது சரி தான் என்று சொல்பவர்களே சுயசாதி விமர் சனத்தை வெறுப்பவர்கள்.

சுயசாதி விமர்சனத்தை தலித் விரோதம் என்று கொள்ளாமல், தொடர்ந்து போராட வலுசேர்க்கும் விதமாகத்தான் கொள்ள வேண் டும். தொடர்ந்த போராட்டமே நமது இலக்கு! சந்தர்ப்ப வாதமல்ல!

✍ குரூப் 1, குரூப் 2-வில் 8200 காலியிடங் களை நிரப்பப்போவதாக 13.1.2004 இல் தினசரிகளில் செய்தி வெளியாகியுள்ளது. எஸ்சி/ எஸ்டி பிரி வில் 6000 காலியிடங்களை நிரப்ப அரசு நட வடிக்கை எடுக்குமா?

**ஜெயலட்சுமி,** சென்னை

அதிமுக ஆட்சிக்கு வந்து ஒருவருட காலம் கழித்து ஆறாயிரம் காலியிடங்களை நிரப்ப அரசு ஆணை 44 என்ற ஒன்றை வெளியிட்டது அதோடு சரி, அந்தக் கோப்பு கிடப்பில்தான் இருக்கிறது இன்னமும்.

✍ கவியரசு வைரமுத்துவுக்கு சாகித்ய அகா தமி பரிசு வழங்கியுள்ளது! இது மகிழ்ச்சிக் குரிய செய்தி அல்லவா?

முருகன், விருதுநகர்

ஆம். இது மனிதர்கள் எடுத்த முடிவல்ல. தேவர்கள் ஒன்றுகூடி வானிலிருந்து அர்ச்சித்தது. எல்லாம் அவர் செயல்.

✍ 'மகாமகம்' தேசிய விழாவாகக் கொண் டாட வகைசெய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் பின்னணி?

- **சிவன்,** கோயில்குன்றனூர்

அதிமுகவும், பா.ஜ.க.வும் சேர்ந்து குளிக்கும் தேசியத் திருவிழா என்பதுதான் பின்னணி!.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றிய பயிற்சி காவலர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருவதாக செய்திகள் வருகின்றன. இது நன்மை பயக்குமா?

**-தேவன்,** சென்னை.

இந்தப் பயிற்சியின்போது என்ன சொல்லித் தருகிறார்கள் என்பது போகப்போகத்தானே தெரியும். ஒவ்வொரு முறையும் இதைத் தவறாகப் பயன்படுத்திவிடாதீர்கள் காவலர்களே, என்ற அறிவுரையும் சேர்ந்து பத்திரிகைகள் வெளியிட்டு வருவதை நீங்கள் கவனிக்கவில்லையா?

இந்துத்துவ மாய்மாலங்களை (ரதச் சவாரி, செங்கல் பயணம்) தவிர்த்துவிட்டு ராஜஸ்தானத் திலும், மத்தியப் பிரதேசத்திலும், பொருளாதார மேம்பாட்டை பிரச்சாரக் கருவியாக பாஜக பயன்படுத்தியுள்ளது. இதையே தமிழகத்திலும் எதிர்பார்க்கலாமா?

**- மேகவன்,** நன்னிலம்,

பாஜக - அதிமுக கூட்டணி பொருளாதார மேம்பாட்டு சூலங்களைக் கையில் ஏந்தினால் திமுக-காங்கிரஸ் கூட்டணி தமிழிய-இந்துத்துவ கதாயாயுதத்தைக் கையிலேந்தும். இரண்டு கூட்டணிகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் - அவ்வளவுதான்!

கேரளா உச்சநீதி மன்றத்தில், பூஜை உள்ள சிவாலயத்தில், தான் பூஜை செய்ய அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து ஒருவர் தொடுத்த வழக்கில், விதிமுறைகள் தோத்திரங்கள் தெரிந்த எந்த இனத்தவரும் கருவறையில் பூஜை செய்யலாம் என்று உச்சநீதிமன்றம் துணிச்சலாக தீர்ப்பு வழங்கியுள்ளது. இதுபற்றி எந்த முற்போக்கு இயக்கங்களும் வாய்திறக்காமல் உள்ளது எதனால்?

**- கோவிந்தன்,** திருப்பாப்புலியூர்,

இந்துக் கோயிலுக்குள் நுழையாத தலித் பௌத்தர்களுக்கு இது ஒன்றும் பிரச்சனையல்ல. சாதி இந்துக்களான் பிற்படுத்தப்பட்டவர்களும் வாளாவிருக்கிறார்களே! பார்ப்பனிய எதிர்ப்பாளர்களான ஒடுக்கப்பட்டவர்கள் இதை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

எல்டிடிஈ ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குற்றச்சாட்டு. வைகோ எல்டிடிஈ ஆதரவாளர். தேர்தலில் கூட்டணியில் ஒரே மேடையில் தோன்றும் சோனியாவும் வைக் கோவும் என்ன பேசுவார்கள்?

**- மோகன்தாஸ்,** சேலம்.

பொடா உருவாக்கியபோது உடனிருந்த வைகோ சிறைக்கு வந்ததும் பொடா எதிரியானார். அந்தர் பல்ட்டி அவருக்குத் தெரியாததல்ல. தமிழ், தமிழ் ஈழம் இவற்றையெல்லாம் பதவிக்காகத் தியாகம் செய்ய தயாராகி விடுவார். கவலையை விடுங்கள்! ஆனால் இந்த சோனியா அம்மா இத்தாலியிலோ, ஆங்கிலத்திலோ அல்லது இந்தியிலோதானே பேசப்போகிறார்? அதை நாசூக்காக மொழிபெயர்த்து விடுவார்கள் தனித்தமிழ்க்காரர்கள். இருவரும் சேர்ந்து ராஜீவ் காந்திக்கு மலர் வளையம் வைத்துவிட்டால் முடிந்தது கதை! உம் காதில்தான் சுற்றப்படும் முழம்பூ!

பண்டிகை தவறாது டி.வி.யில் பட்டி மன்றம் நடத்துகிறார்களே, ஏனம்மா, முனிமா?

**- ஜவகர்,** சென்னை

பண்டிகை நாட்களில் மட்டுமே பட்டி மன்றம் நடத்தவேண்டும் என்ற நியதியிருப்பதால் மகிழ்கிறோம். மீதி நாட்களிலாவது தலைவலி இல்லாமலிருப்போம்!

ஜெயா டிவிக்கும் சன் டிவிக்கும் உள்ள ஆறு ஒற்றுமைகளைக் கூறுக.

**- சல்லியன்,** நெய்வேலி

எதிரும் புதிருமாய் செய்திவரும் இரண்டு சானல்களுக்கும் ஆறு ஒற்றுமைகளைக் கண்டு பிடிப்பது சிரமம்தான். எனினும் முயற்சி செய்தோம். இரண்டுமே 'பொடி' வைத்து செய்தி வாசிக்கும். இரண்டுமே 'கடி'க்கும். கண்ணீரும் கம்பலையுமாகப் பெண்கள். இரண்டிலும் மிகுந்திருக்கும் பார்ப்பனர்கள். தலித்துகளை இருட்டடிப்புச் செய்பவர்கள். இரண்டினாலும் சமுதாயத்திற்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. என்ன, போதுமா?

அரசு ஊழியர்கள் கதை எழுதக்கூடாது என்று அரசு விதி எழுதப்பட்டுள்ளது. கதை கூடவா எழுதக்கூடாது?

**- வீரன்,** புதுப்பட்டினம்,

ஒன்றும் தெரியாத அப்பாவி போல் கேட்கிறீர்கள்?! இலக்கியம் மனித விடுதலையைத் தான் முன் வைக்கிறது என்று நீங்கள் வேண்டுமானால் நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் நமது எழுத்தாளர்கள் இலக்கியத்தை அதிகார மாகவல்லவா நினைக்கிறார்கள்! பிறகு அது வியாபாரமும்தானே! அதிகாரமும் வியாபாரமும்தானே அரசு! தனது அதிகாரத்தை கதை என்ற பெயரில்கூட யாருடனும் பகிர்ந்து கொள்ள அது விருப்பப்படவில்லை என்பது தான் இந்தத் தடைக்குக் காரணம். கதை கிதை என்று வருபவர்களைச் சற்று ஏற இறங்கப் பார்த்து அவதானியுங்கள் ஐயா!

வெளிநாட்டு சோனியா பிரதமராகலாமா?

**- குமார்,** பாண்டிச்சேரி

இந்நாட்டில் தலித்துகள் மட்டும் பிரதமராகக்கூடாது என்று எழுதப்படாத சட்டம் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# முளைவிடும் படைப்பாளிக்கு...

■ சத்யானந்தன்

அட்டகாசமாய் இயங்கு
ஆத்திரத்தைப் பதிவு செய்
இலக்கே இருப்பு
ஈனம் சமரசம்
உழைப்பு வாசிப்பு
ஊட்டாதே - வலை பின்னி வீசு
எளிய உருவம் ஏற்றி
ஏழ்கடல் உள்ளடக்கு
ஐம்புலன் தூண்டிலில்
ஒரு சுறாவைப் படிமமாக்கு
ஓரம் சார் - சமூக நீதிப் பக்கம்
ஔடதம் அல்ல எழுத்து
அஃது அக்கினிக் குஞ்சின் அச்சு வடிவம்

# திருநீறு

■ தேவதேவன்

உன் நெற்றித் திருநீறு, என் நெஞ்சில்
ஒரு புத்துணர்வுப் பொழுதின்
பசுமையைத் தோற்றுவிக்கிறதுதான் என்ன!
அது உன் முகமலருடன் இணைந்து
விண்தவழும் ஒரு வெண்மேகமாய் உயிர்க்கிற
தெப்படி?

மங்களகரமானதெனவும்
'நீறில்லா நெற்றி பாழ்' எனவும்
குறிப்பிட்டதொரு மதத்தின் அடையாளமாகவும்

முகிழ்க்கும் எண்ணங்களின் இயக்கம்
தாம் உதறிக் குதறியவை எவையெனும்
தன்னறிவற்று
உலகை இரத்தக் களறியாக்கிக்
கொண்டுப்பதும்தான் ஏப்படி?

# அறுவை சிகிச்சை நிபுணனுமாக

■ வெ. வெங்கடாசலம்

இதுவொரு
சரிவுகளைச் சகித்துக்கொள்ளும்
சப்பைக் காலம்

சில்லரை வித்தைகள்
முட்டுகளாய்த் தாங்குகின்றன

ரணப்பொக்கு பிளவுகளில்
கசியும் சீழை
மொய்க்கின்றன மலங்காட்டு ஈக்கள்

அனுதினம் நடந்தேறும்
ஓட்டப் பந்தயம்
அருவருப்பூட்டுவதாய் இருக்கிறது

பந்தய விதிகட்கு
'ஆமாம்' என்பவன்
இங்கு தனவந்தன்
நுட்பங்கள்முன்
வளையாதவன் அபாக்கியவான்

சீறி ஆற்றும் பொருட்டு
சூரிகொண்டு
அலைகிறான் செம்பறையன்

அடியாத மாடு படியாது
மயில்
போடு என்றால் போடாது.



படிப்பகம்

www.padippakam.com

# கழுவுதல்

■ கலாமோகன், பாரிஸ்



**பா**த்திமா அல்ஜீரியா செல்ல முடிவெடுத்த செய்தி முதலாளியின் காதிற்கு எட்டிய அடுத்த நாள் எனக்கு அவளது இடத்தில் நியமனம் கிடைத்தது. புளோஞ்சர் வேலை. அதாவது கோப்பைகள் கழுவும் பணி. பிரான்சிற்கு வந்த பின்னர் எனக்குக் கிடைத்த முதலாவது வேலை இதுதான்.

'கழுவினால் பளபளப்பாக இருக்க வேண்டும். கோப்பைகளில் ஒரு துளி தண்ணீர்கூட இருக்கக்கூடாது. இரண்டு நேர வேலை. காலை 10 மணியிலிருந்து மத்தியானம் 3 மணிவரை முதலாவது சேர்விஸ். இரண்டாவது பின்னேரம் 6 முப்பதில் இருந்து இரவு 12 மணி வரை. சேர்விஸ்கள் முடியும் தறுவாயில் நிலத்தையும் சுவர்களையும் கழுவிப் பளபளப்பாக்க வேண்டும்' என எனது வேலையின் தன்மையை சற்றே அதிகாரத்தோடும் சற்றிலும் சற்றான குறுநகையோடும் சொல்லி வைத்தார் 'காட்டினுள் சூரியன்' உணவகத்தினது முதலாளி திரு ஹென்றி.

இது மட்டுமா, சமையல் பொறுப்பாளரான பிலிப்பைக் காட்டி 'இவர்தான் உனது செவ். இவர் எது சொல்கின்றாரோ அது நான் சொல்வதுபோல' என்றும் சொல்லி வைத்தார்.

நான் கோப்பைகளைக் கழுவத் தொடங்கினேன். 'ஏ! கோப்பைகளுக்குப் பவுடர் போட நீ இங்கு வரவில்லை. வேகமாக... மிகவும் வேகமாக...' என்றபடி பிலிப் என் பக்கம் வந்தபோது நான் நடுங்கியே விட்டேன்.

உணவகத்தில் நிறையப் பாத்திரங்கள் இருந்தன. அவை உண்மையிலேயே பாரமானவை. மூன்று பாத்திரங்களைக் கழுவிய பின்னர் எனக்கு மூச்சடைப்பு வரும்போலிருந்தது. முதுகில் வேறு நோவு. முதலாவது சேர்விஸின் பின்னர்வேலையை விடலாம் போலவும் பட்டது.

கோப்பைகள் கரண்டிகள் என்முன் குவிந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு அவைகளைக் கழுவித்துடைத்துப் பளபளப்பாக்கினேன். எனக்குள் ஓர் வேகம் எப்படி ஏற்பட்டதென்பது எனக்கே புரியாத புதிராக இருந்தது. முதலாவது சேர்விஸ் முடியும் தறுவாயில் செவ் என்னை நோக்கிவர, திட்டப்போகின்றான் எனத் திகைத்தால் அவனோ திட்டவில்லை. முதுகைத் தட்டி எனது வேலை தனக்குப் பிடித்துள்ளதாகவும் என்னைத் தொடர்ந்தும் வேலையில் வைத்திருப்பதற்குத் தான் தயார் என முதலாளியிடம் சொல்லப் போவதாகவும் சொன்னார்.

அன்று கோப்பைகளைக் கழுவி முடித்ததும் நிலம் சுவர் இவைகளைக் கழுவத் தொடங்கிய போது அவை ஒரு மாதமாகக் கழுவப்படவில்லைபோலத் தோன்றியது. சுவரிலே ஒட்டிக் கிடந்த வெங்காய தக்காளி உருளைக் கிழங்குத்



படிப்பகம்

www.padippakam.com

தோல்களைச் சுரண்ட உளி ஒன்று இருந்தால் நல்லதுபோலவும் பட்டது. நான் சிரமப்படு வதைக் கண்ட பிலிப். அதாவது செவ்ஓர் கத்தியை என்னிடம் தந்தான்.

முதலாவது சேர்வில் முதலாவது தினமே மூன்று மணிக்கு முடிந்தது. முதலாளி வந்து என்னைப் பாராட்டிச் சென்றதும். பிலிப் என் பக்கம் வந்து 'ஏதாவது குடி' என்று கேட்டான். ஓர் மரியாதைக்காக 'வேண்டாம்' என்றபோதும் அவனோ என்னை விடவில்லை 'பியர் குடிப் பாயா?' என என்னைக் கேட்டு நான் பதில் சொல்லுவதற்கு முன் பார் பக்கம் சென்று இரண்டு பியர்ப் போத்தல்களோடு வந்தான். இருவரும் குடித்துக்கொண்டிருந்தபோது 'வேலை நேரத்தில் இங்கே மதுபானம் குடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. வேலை முடிந்த பின்னர் ஒரு பியர் குடிக்கலாம். இன்று நான் மூன்று மணிவரை நின்றேன். முறைப்படி எனது முதலாவது சேர்விஸ் இரண்டு மணிக்கே முடிந்து விடும். உனது வேலையைப் பார்க்கவும் உனக்கு வேலையை விளங்கப்படுத்தவுமே ஒரு மணி நேரம் கூடுதலாக நின்றேன். உனக்கு எல் லாம் வேகமாக விளங்கும்போல படுவதால் பெரிதாக எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என நினைக்கின்றேன். சரி, இப்போது நீ போகலாம். பின்னேரம் சரியாக ஆறு முப்ப திற்கு இங்கே நில்!' என்று சொல்லியபின் தனது மோட்டார் சைக்கிளில் பறந்து விட்டான்.

புளோஞ்சர் வேலை உண்மையிலேயே எனக்குப் பிடித்திருந்தது எனச் சொல்ல முடி யாது. இதைவிட்டால் எனக்கு வேறு வழியும் இருக்கவில்லை. பிரான்சிற்கு நான் வந்து அப் போதுதான் ஒரு வருடம் ஆகியிருந்தது. புதிய மொழி உதட்டில் ஏறக் கண்ணாமுச்சி காட்டி யதுபோதும் ஓர் காட்டுத்தனமான உச்சரிப் போடும் பிழைகளோடும் பேசினேன்.

ஆறு முப்பது மணிபோல உணவகத்துக்குள் நுழைந்தபோது செவ்வும் இல்லை முதலாளியும் இல்லை. வேண்ணிறக்கூந்தலை லாவகமாகத் தோளில் பறக்க விட்டபடி ஓர் நடுத்தர வயதுப்பெண் முதலாளி இருக்க வேண்டிய இடத்தில் இருந்தாள். 'பொன்ஜூர்' என என்னி டம் சொல்லி விட்டு 'வேலை தேடி வந்துள் ளீரா?' எனக் கேட்டாள். 'இல்லை. நான்தான் இங்கே புதிதாக எடுக்கப்பட்டுள்ள புளோஞ்சர்' என்றேன். 'ஓ ! மன்னிக்கவும்! கேள்விப்பட்டேன். அது நீங்கள்தான் என்பது தெரியாது. வேலை பிடித்துள்ளதா?' எனக் கேட்டு நான் 'ஆம்' எனச் சொன்ன பின்னர் 'செவ் வரத் தாமதிக்காது. நீங்கள் கீழே இறங்கி உடுப்பை மாற்றலாம்' என்றாள்.

நிலக்கீழ் அறையில் வெளிச்சம் குறைவாக இருந்ததைக் காலையிலேயே அவதானித்திருந் தேன். உடுப்பை மாற்றிக்கொண்டிருந்தபோது விசிலடித்தபடி ஒருவர் இறங்குவதை உணர்ந் தேன். அது செவ்.

'பின்னேர சேர்விஸ் இலகுவானது. நிறைய வாடிக்கையாளர்கள் இல்லை. பதினொரு மணிக் குச் சனம் இல்லையேல் நீ போகலாம்' என பிலிப் சொல்லிக்கொண்டே உடுப்புகளை மாற்றினான்.

இரவு எட்டரை மணிவரை ஒரு வாடிக்கை யாளரையும் காணவில்லை. எனக்கோ வேலை யிருந்தது. நாளைய தேவைக்கான உருளைக் கிழங்குகளைச் சீவினேன். சின்ன பெரிய வெங் காயங்களை உரித்தேன். கரட் சீவினேன். பல வகைப் பழங்களையும் தாயக்கட்டை வடிவில் வெட்டி பஞ்சாமிருதச்சுவை தரும் சலாத்து புறுயி செய்யும் வித்தையை செவ்விடம் இருந்து கற்றுக்கொண்டேன்.

வாடிக்கையாளர்கள் எவரும் இல்லாததால் பிலிப் சமையலறைப் பகுதியை விட்டு காசுப் பட்டறைக்குச் சென்று முதலாளியின் மனைவி யோடு பேசத்தொடங்கினான். அவர்கள் பேசு வது எனக்குப் பெரிதாக விளங்காது விட்டாலும் மிகவும் சந்தோசமாகப் பேசுவது போலப் பட்டது. சில வேளைகளில் அவன் அவளது சொக்கையை மிருதுவாகத் தடவுவதை அவ தானித்தேன். இருவரும் குடித்துக்கொண்டி ருந்தது மதுவே என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமுமே வரவில்லை.

அந்த உணவகத்தின் அளவு பெரியது. பரி மாறுவதற்கு ஒரு சேவகனும் இரண்டு சேவகி களும் இருந்தனர். தேவையில்லாமல் அவர்கள் கிச்சின் பக்கம் வருவது தடை செய்யப் பட் டுள்ளது போலவும் தெரிந்தது. இரண்டு சேவகி களுள் ஒருத்தி மட்டுமே கரிசனை கொண்ட முகத்தினள் போலப்பட்டாள். இதற்கு அவள் தனது விழிகளை அடிக்கடி என் விழிக ளோடு மோதவிட்டது காரணமாக இருக்கலாம்.

பிலிப் முதலாளியின் மனைவியுடன் பேசு வதை நிறுத்திவிட்டு சிரித்தபடி என்பக்கம் வந்தான்.

'முதலாளியின் மனைவி நத்தலியும் நானும் நல்ல ஒட்டு' என்றான்.

உண்மையைச் சொல்வதாயின் நத்தலி நல்ல அழகிதான். அவளிடம் அட்டகாசம் இல்லாத ஓர் கவர்ச்சி இருந்தது. மின்னலிடும் நளினம்



படிப்பகம்

www.padippakam.com

பேச்சில்.

'உனக்கு ஓர் உண்மையைச் சொல்லலாமா?' பிலிப் என்னிடம் கேட்டான்.

'உண்மைகள் தனிப்பட்டவை. உனது வாழ்வின் மூலங்களை அறியவேண்டும் என்கின்ற சிற்றாசை எனக்குள் இல்லை. என்னிடம் சொல்லுதல் உனக்கு அவசியமானதாகப்பட்டால் நீ சொல்லலாம்'

'உன்னை எனக்குப் பிடித்துள்ளது. உன்மீது எனக்கு ஓர் நம்பிக்கையும் வந்துள்ளது. அதனால் தான் இதை உன்னிடம் சொல்கின்றேன். நானும் நத்தலியும் ரகசியமாக இரவுச் சுகம் காண்பதுண்டு.'

'திரு ஹென்றிக்கு இது தெரியுமா?'

'அவரை யாரும் ஏமாற்ற முடியாது. அவருக்கு எல்லாம் தெரியும். அவரது ரகசியங்களும் எனக்குத் தெரியும்.'

'உனக்கும் நத்தலிக்கும் உள்ள உறவுகூட அவருக்குத் தெரியுமா?'

'தெரியும்'

ரகசியங்கள் எப்போதுமே வித்தியாசமான முகங்களைக் கொண்டன. இவைகளை நான் இயற்கை எனக் கருதுவதால் எனக்குள் எந்த ஆச்சரியமுமே ஏற்படவில்லை.

'இன்னொரு உண்மையைச் சொல்லவா?' கேட்டது பிலிப்.

'சொல்'

'இரண்டு ஆண்டுகளின் முன்னே இங்கே ஓர் சீனத்துச் சேவகி வேலை செய்தாள். எனக்கும் அவளுக்குமிடையே இரவுத்தொடர்புகள் இருந்தன. இது திரு ஹென்றிக்கும் தெரியும். ஆனால் அவருக்கும் அவள் மீது மையல் வந்து விட்டது. உண்மையிலேயே அவள் நத்தலியைக் காட்டிலும் கவர்ச்சி கூடியவள். திரு ஹென்றிக்கு அவள் மீது மையல் வந்ததாலும், அவள் எனது மனைவியாக இல்லாததாலும் ஒரு தடவையாவது அவளைத் தனது கட்டிலில் பார்க்க வேண்டும் எனத் துடித்தார். அவளைத் திரு ஹென்றிக்கு சரிக்கட்டிக் கொடுத்தது நான். ஆனால் எனக்கும் நத்தலிக்கும் உள்ள கள்ளத்தொடர்பு தெரிந்ததும் திரு ஹென்றி என்னை வேலையிலிருந்து நிறுத்துவதாக மிரட்டினார்.

'எப்படி'

'நீ என்னை மிரட்டினால் உனக்கும் சீனத்திக்கும் கள்ளத்தொடர்பு உள்ளதென்று உனது மனைவிக்குச் சொல்வேன் என்றதும் அவர் நடுங்கிவிட்டார். ஒன்றுக்காக ஒன்றை விட்டுக் கொடுக்க முடியாத பலவீனம் அவரிடம் இருந்தது. நத்தலியிடம் கிடைக்காதது சீனத்தியிடம் அவருக்குக் கிடைத்தது என்றும் கொள்ளலாம். ஆனால் நத்திலியை சீனத்திக்காகக் கைவிடும் துணிச்சலோ அவருக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவள் பெயரிலேயே உணவகம் உள்ளது. அவள் நினைத்தால் அவரை எப்போதும் கைவிட்டு விடலாம்.'

'நத்தலிக்கும் உண்மை தெரியுமா?'

'தெரியும்'

'ஏன் அவரை எறிந்துவிட்டு அவள் உன்னைத் திருமணம் செய்யவில்லை?' என நான் கேட்க 'பொறு' என்று சொல்லி நத்தலி பக்கம் சென்று சிறு சரசம் செய்துவிட்டு இரண்டு பியர்ப் போத்தல்களுடன் வந்தான்.

'எது எப்படியோ திரு ஹென்றி என்னைப் போல நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல. வசதியானவர்கள் வசதியானவர்களைத் தேடுவர் என்பது உனக்குத் தெரியாத விசயமா? என்னிடம் இன்னும் பல உண்மைகள் உள்ளன. இவைகளைப் பின்னர் சொல்வேன்' என்று அவன் சொல்லியபோது இரண்டு வாடிக்கையாளர்கள் நுழைந்தனர். நுழைந்தவர்கள் பெரிய பசியுடன் வராதபடியால் லைட்டாகக் கடித்துவிட்டு விடைபெற்றனர். அன்று பத்து முப்பதுக்கே நான் வெளியேறிவிட்டேன். எனது உணவக அனுபவத்தினது முதலாவது தினம் இப்படித்தான் கழிந்தது.

□ □ □

'காட்டினுள் சூரியன்' உணவகத்தில் நான் மூன்று வாரங்கள் மட்டுமே வேலை செய்தேன். இந்தக் குறுகிய காலத்துள் பிலிப் கிருபையால் பிரெஞ்சு சமையல் கலையின் சில பக்கங்களை என்னால் எட்டிப் பார்க்க முடிந்தது. உண்மையிலேயே நானாகப் புளோஞ்சர் வேலையை விடவில்லை. விலகுமாறு மிகவும் நாகரீகமாக திரு ஹென்றியினால் கேட்கப்பட்டேன். அல்ஜீரியா செல்லும்போது தனது வேலையை



படிப்பகம்

www.padippakam.com

இராஜினாமா செய்த பாத்திமா திரும்பவும் வந்ததே காரணம். ஒருவர் தனது வேலையை இராஜினாமாச் செய்து அவரது இடத்தில் நியமிக்கப்பட்டவரை விலக்குவதாயின், விலக்கப் பட்டவருக்கு முதலாளி ஓர் தொகையை வழங்க வேண்டும். தொகையின் கனதி அவர் வேலை செய்த ஆண்டுகளின் தொகையோடும் கொந்தி ராவோடும் சம்பந்தப்பட்டது. எனது கொந்திரா ஒருமாத ஆயுளைக் கொண்டது என்பதை திரு ஹென்றி சொல்லியபோதே அறிந்தேன். இத னால் எனக்குக் காட் அற்றாக் வரவில்லை. பிலிப் பிற்கும் திருமதி ஹென்றிக்கும் என்னை வைத் திருக்கவே விருப்பம். 'உனது வேலை எனக் குப் பிடித்துள்ளது. ஆனால் பாத்திமா இங்கு பல வருடங்கள் வேலை செய்த காரணத்தாலும் அவளது நிதி நெருக்கடிகளுக்கு உதவ விரும்பு வதாலும் அவளை மீளவும் எடுக்கிறேன். எனக் குப் பல உணவக முதலாளிகளைத் தெரியும். அவர்கள் இடங்களில் உனக்காக ஒரு வேலைக் காக முயற்சி செய்வேன்' எனத் திரு ஹென்றி என்னிடம் சொல்லியபோது நான் அவருக்கு நன்றி கூறினேன்.

உணவகத்தை நான் விட்டு விலகிய கடைசித் தினத்தில் இரவில் பிலிப் என்னிடம் இன்னும் சில உண்மைகளைச் சொன்னான். திரு ஹென் றிக்கும் பாத்திமாவிற்குமிடையே ரகசியத் தொடர்பு உள்ளதாம். அந்தத் தொடர்பு அவ ருக்கு முக்கியமானதாம். நான் எறியப்படுவதின் காரணம் இதுதான் என்றான். அத்தோடு பாத் திமா வேலை செய்வதைவிட, முதலாளியுடன் சரசம் செய்வதே அதிகம் என்றான். பிலிப்பும் எனக்கு உதவ விரும்பி தனக்குத் தெரிந்த சில முகவரிகளைத் தந்து அங்கே போய் தன் சார்பில் வேலை கேள் என்றான்.

□□□

அனைத்து முகவரிகளுக்கும் சென்றேன். தற்போது வேலை எதுவும் இல்லை என்றபடி எனது முகவரியையும் போன் நம்பரையும் பெற்றுக்கொண்டு, வேலை காலி வரும்போது என்னைத் தொடர்பு கொள்வோம் என்றனர்.

பதில்களுக்கு எப்போதுமே குறைச்சல் இல்லை. ஆனால் அவை தீர்வுகளா? உண்மை யிலேயே இந்தப் பதில்கள் எனது மன தைரி யத்தை உடைக்கக்கூடும் எனக் கருதியதால் வேலை தேடுவதை நிறுத்தி நித்திரை செய்ய வெளிக்கிட்டேன். அரசு தந்த சிறு நிதி உதவி யோடு இரண்டு வருடங்கள் பிரான்சினையும் சிறீலங்காவையும் மறந்தேன்.

□□□

எனது மறதிக் கனவு ஒரு நாள் பிலிப்பிடம் இருந்து வந்த கோலால் உடைந்தது. ஒரு முகவரி யைத் தந்து 'உடனடியாகப் போ! உனக்கு நல்ல வேலை கிடைக்கும்' என்றான். போனேன். வேலை கிடைத்தது. புளோஞ்சர் வேலை.

அதுவும் இரண்டு நேர வேலையே. வேலை முடிந்து மாத சம்பளம் எவ்வளவு என முதலாளி யிடம் கேட்டபோது 'மாத சம்பளமா? அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை. இங்கே வேலை செய்த புளோஞ்சரும் உன்னைப்போல சிறீலங் கனே. அவன் இன்று வரவில்லை; நாளை வரு வான். ஒரு நாளைக்காகவே உன்னை இங்கு எடுத் தேன்' என்றபடி எனது கையில் 150 பிராங்கை வைத்தபோது நான் இதற்காகவும் அதிர்ச்சி அடையவில்லை.

இதற்குப் பின்னர் ஓர் சீன உணவகத்தில் ஓர் 'கள்ள வேலை' கிடைத்தது. இதனை 'தறவாய் ஒநுவார்' என பிரெஞ்சில் சொல்வர். விசா உள்ள வர்களும் சட்டப்பதிவு இல்லாமல் வேலை செய்யும் ஓர் சூழல் விவகாரம் இது. என்னிடம் விசா இருந்தபோதும் தெரிவைத் தெரியா உலகே எனது உலகாகியதாலும் சீன உணவகத்தில் சில மாதங்கள் வேலை செய்துவிட்டு மீண்டும் அரச சிறு உதவியில் தூங்கத் தொடங்கினேன்.

□□□

நள்ளிரவு ஒன்றில் போன் அலறியது. எடுப் பதற்கு எந்த விருப்பமும் இல்லாத போதும் எடுத்தேன். அது பிலிப்.

'இந்த நேரத்தில் உனக்குப் போன் பண்ணுவதற்காக என்னை மன்னித்துக்கொள்.'

'நான் இன்னமும் தூங்கவில்லை. உனது கோல் என்னைத் தொல்லைப்படுத்தும் ஒன்றல்ல.'

'தற்போது நீ வேலை ஏதாவது செய்கின் றாயா?'

'வேலை தேடும் எந்த விருப்பும் எனக்குள் இல்லை'

'உனக்கு ஓர் நிரந்தர வேலையுள்ளது. விருப்பமா?'

'புளோஞ்சர் வேலையா?'

'ஏன் உனக்கு இந்த வேலை பிடிக்க வில்லையா?'

'எனக்குப் பிடித்த வேலை அதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

கோப்பைகளைக் கழுவும் கணங்களில் நான் எனது உவாதைகளை மறக்கின்றேன்.'

'ஆனால் இது கஷ்டமான வேலையே?'

'தண்ணீர்முன் எனது உவாதைகள் அழிகின்றதாக உணருகின்றேன்.'

'உனது மொழி எனக்கு விளங்கவில்லை.'

'நான் அகதி, நீ அகதியல்லன். எனது மொழி உனக்கு விளங்காது விடுவது எனக்கு ஆச்சரியத்தைத் தரவும் இல்லை. உன்னை என்னால் விளங்கவும் முடிகின்றது.'

'நான் கூட ஓர் அகதி. இது உனக்குத் தெரியுமா?'

'உனது பெயர் பிலிப், உனது நிறம் வெள்ளை.'

'பெயரிலும் நிறத்திலும் என்ன உள்ளதாம்?'

'நீ சொல்வது உண்மை. ஆனால் நான் அகதி. எனது அம்மாவும் அப்பாவும் நாற்பதுகளில் ஹிட்லர் கொடுமைகளால் இங்கே வந்து அகதிகளானவர்கள். நான் ஓர் அகதி.'

பிலிப்பின் வார்த்தைகள் எனக்குள் எனது முதலாவது அகதித் தினங்களை விழிக்க வைத்தன. இந்தக் கொடூரமான தினங்கள் எனக்குள் விழிக்காதே இருக்கட்டும் என வேண்டிக் கொண்டேன். நான் தூங்குவதை விரும்புவதுகூட இந்தத் தினங்கள் எனக்குள் விழிக்காதிருப்பதற்காகப் போலும்.

'நான் உனக்குத் தருவது புளோஞ்சர் வேலையில்லை. இன்னொரு வேலை.'

'எனக்கு இந்த வேலையைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பது உனக்குத் தெரியும் தானே?'

'சில விஷயங்களைத் தெரிய பெரிய அனுபவங்கள் தேவையென்று சொல்ல முடியாது. நான் கூட செவ்வாகப் பிறக்கவில்லை. முதலிலே 'காட்டில் சூரியன்' உணவகத்தில் ஓர் வாடிக்கையாளனாக இருந்தேன். சேவகிகள் வராத வேளைகளில் நத்தலியே சேர்விஸ் செய்தாள். ஆம், எனக்கும். இந்த அபூர்வமான கணங்களில் நான் அவளைச் சுழட்டினேன். இரண்டு தினங்களுள் ஓர் ஹோட்டலில் நாங்கள் எங்களது முதலாவது இரவை வாழ்ந்தோம்.'

'உனது செக்ஸ் தேவைகளை என்னால் விளங்க முடிகின்றது. ஆனால் நீ எப்படிச் செவ்வாக வந்தாய்? உன்னிடம் டிப்ளோம்கள் இருந்தனவா?'

'என்னிடம் டிப்ளோம்கள் இருக்கவில்லை. சமையல் அனுபவம் கொஞ்சம் இருந்தது. ஆனால் நத்தலியின் கள்ளக் காதலனாக இருந்தேன் என்பதுதான் முக்கியமான விஷயம். தனக்கு அருகில் நான் எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காக என்னைச் செவ்வாக ஆக்கினாள். இதுதான் நான் செவ் ஆகிய கதை.'

'சரி, நீ எனக்கு புளோஞ்சர் வேலை தராது விட்டால் வேறு என்ன வேலை தரப்போகின்றாய்?'

'உனக்கு சமையலறைச் செவ் வேலையைத் தரப்போகின்றேன்.'

'அது உனது வேலையல்லவா!'

'அது இனிமேல் எனது வேலையாக இருக்க மாட்டாது. நான் முதலாளியாகிவிட்டேன்.'

'திரு. ஹென்றிக்கு என்ன நடந்தது?'

'நத்தலி அவரைவிட்டுப் பிரிந்தது மல்லாமல் அவரிடமிருந்து விவாகரத்தும் பெற்றுவிட்டாள். நானும் அவளும் திருமணம் செய்வதாக வேறு முடி வெடுத்துவிட்டோம். இனி நான் எடுப்பதுதான் முடிவு.'

'பாத்திமாவுக்கு என்ன நடந்தது?'

'அவளை நான் வேலையிலிருந்து விலக்கிவிட்டேன்.'

'எனக்குத்தான் சமையல் வேலை பெரிதாகத் தெரியாதே!'

'அதுபற்றி நீ யோசிக்கவே வேண்டாம். நான் உனக்கு உதவி செய்வேன். நான் கொஞ்சம் பிஸியாக உள்ளேன். நாளை வந்து வேலையைப் பாரமெடு!' என்றபடி போன் தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

நான் எப்போதோ படித்த ஹைக்கூக் கவிதையொன்று எனது நினைவில் வழித்த போது எனக்குத் தூக்கம் வந்தது.

●



படிப்பகம்

www.padippakam.com



# வல்லினம்

## (காலாண்டிதழ்)

■ சாக்கியன்

அடித்தள மக்கள் ஆன்மீகத்தின் மீது ஒரு கலாச்சார யுத்தம் என்ற வாசகத்துடன் இதழ் அட்டை நம்மை வரவேற்கிறது. இது ஒரு காலாண்டிதழாக இருப்பதால் மூன்று மாதங்கள் வரை வைத்திருந்து படிக்க வேண்டிய கனத்துடன் 128+4=132 பக்கங்களுடன் உள்ளது. இதழின் முதல் பக்கத்தில் சிறப்பாசிரியர் மகரந்தன் தலையங்கம் எழுதியுள்ளார். அடித்தட்டு மக்கள் பெரும்பான்மை மக்கள் என்றும், ஆதிக்க சாதி மக்கள் வலிமையானவர்கள் என்றும் தெரிவிக்கிறார். அடித்தட்டு மக்களின் ஆன்மீக மும், ஆதிக்க சாதிமக்களின் ஆன்மீகமும் மோதிக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். ஆன்மீகங்கள் மோதிக் கொள்கின்றனவா? என்று ஆன்மீகத் தில் நம்பிக்கையில்லாதவர்கள் மகிழ்ச்சியாய் அடுத்த வரியைப் படித்தால் அங்கு ஒரு அதிர்ச் சித் தகவலைத் தந்துள்ளார். ஆன்மீகத்திற்கு அப் பால் ஓர் அரசியல் நோக்கம் இருக்கிறதாம். ஆன் மீகத்தில் சகலமும் நல்லடக்கம் என்று நாம் நினைத்திருந்தால் அதையும் தாண்டி அரசியல் நோக்கம் உள்ளதாய் இவர் தெரிவிக்கிறார். அந்த ஆன் மீகப் புதிரை கல்வியாளர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் விடுவிப்பார்கள் என்ற நகைச் சுவையைத் தந்து சிரிப்புடன் நம்மை பிற பக்கங்களுக்கு அழைத்துச் செல்ல வழிவிடுகிறார்.

அடுத்த பக்கத்தில் இடுப்பில் கட்ட வேண்டிய துண்டை தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டு, கோவணத்துடன் ஒருவர் நிற்கின்றார். முண்டாசைவிட பெரிய ஆடையை தோளில் போட்டுக் கொண்டு நிற்கிறார். இவர் யார்? இவர்தான் விளிம்பு நிலை மனிதர். கையில் போதுமான ஆடை வைத்திருந்தும் அதை உடுத்திக் கொள்ளாமல் இவர் ஏன் தலையிலும், தோளிலும் அதைச் சுமக்கிறார் என்பது நமக்குப் புரியவில்லை. ஒருவேளை விளிம்புநிலை மனிதர் இப்படித்தான் இருப்பார் என்று மகரந்தன் புரிந்து வைத்துள்ளாரா? நமக்கு வேண்டாமடா இவர் விரும்பும் விளிம்பு நிலை மனிதனின் தோற்றம். நல்லவேளை விளிம்புநிலை மனிதராக இவர் ஒரு பெண்ணை சித்தரிக்கவில்லை. கவர்ச்சிப் படம் ஒன்று தவிர்க்கப் பட்டிருக்கிறது. இதழின் கட்டுரையாக ஆ.செல்லபெருமாள் "விளிம்பு நிலை மனிதரின் அடையாள வெளிப்பாடுகள்" சில அடையாளங்களைத் தருகிறார். காணாமல் போன பையனுக்கு கடவாய்ப் பல் சொத்தை, உள் நாக்கில் ஒரு மச்சம் இருக்கும் என்று அடையாளம் தரும் ஒரு போலீஸ் ரிப்போர்ட் போல. பாவம் இந்த அடையாளங்களை வைத்து அந்தப் பையனை கண்டுபிடித்துத் தர முயற்சிக்கிறவர்கள் யாரேனும் ரோட்டில் சட்டையைக் கிழித்துக் கொண்டு அலைந்தால், அவர் இந்த அடையாளக் கட்டுரையைப் படித்திருப்பார் என்ற அடையாளத்தை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள். அசாத்திய நம்பிக்கை இந்த செல்லபெருமாளுக்கு. உங்களுக்கு வாசகர்கள் செல்லம் தரமாட்டார்கள். கிள்ளிவிடுவார்கள் ஜாக்கிரதை.

அடுத்த இம்சையாக, மன்னிக்கவும் - கட்டுரையாக டி.என். ஜா நேர்காணல் தந்துள்ளார். நாங்கள் இவரை நேரில் காணமாட்டோம் என்ற நம்பிக்கையில் இதைத் தந்துள்ளார் என நினைக்கிறோம். ஓர் இனத்தின் கலாச்சாரம் மிகவும் சீரியஸான விஷயம். இதில் இவர் நையாண்டி செய்திருப்பது மனதிற்கு மிகுந்த வேதனையளிக்கிறது. "காந்தி ஒரு வெகுமக்களின் தலைவர். அவர் தீண்டாமைக்கு எதிராகப் போராடியுள்ளார். சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பின் தங்கிய மக்கள் மீதான காந்தியப் பார்வையே முக்கியமானது; கவனத்திற்குரியது" என இந்த ஜா குறிப்பிடுகிறார். இந்தக் கட்டுரையில் இந்த ஜா-வின் புகைப்படம் நான்கு இடங்களில் வருகிறது. முகத்தை இவ்வளவு இறுக்கமாக வைத்துக் கொண்டு குபீர் காமெடியை இவரால் எப்படிச் செய்யமுடிகிறது. நமக்கு இது நல்ல ஜோக்காகப் பட்டாலும் சிரிப்புத்தான் வரமாட்டேன் என்கிறது. பேட்டியின் இறுதியில் "தமிழ் நாட்டில் பிராமண எதிர்ப்பியக்கம் மிக வலுவானது என நான் அறிவேன்" என்று தன் -னுடைய உச்ச நகைச்சுவை உணர்வை இந்தக் கட்டுரையில் பதித்துள்ளார். முத்திரை



படிப்பகம்

www.padippakam.com

பதிக்கும் காமெடி சென்ஸ். நமக்கு நான்சென் ஸாகத் தெரிகிறது.

கிருத்துவத்தில் சாதியம் என்ற கட்டுரையை மாற்கு எழுதியுள்ளார். பாலில் ஈ என்று எழுது வது போல இவர் பொத்தாம் பொதுவாக எழுதி யுள்ளார். எனக்குத் தரப்பட்ட பாலில் ஈ விழுந்து விட்டதை பாலென்றாலே ஈ இருக்கும் போல புலம்புகிறார். உலக கிருத்துவதில் சாதியில்லை. உன்னுடைய இந்திய கிருத்துவம் இந்துமய மாவதை நீ புரிந்துகொள் என்ற ஒற்றை வரியை புரிந்து கொள்ளாமல், ஒரு நீண்ட கட்டுரை. அதற்கொரு அங்கலாய்ப்பு. அச்சம் தவிர். கண்திற.

அடுத்ததாக "புத்தரின் சாரம்ச மறுப்பு அணுகு முறை" பற்றி அ. மார்ஸ் எழுதியுள்ளார். இவர் புத்தரை "ஞான பரிபூரண மூர்த்தி" என்று அழைக்கிறார். பரிபூரண ஞானம் அடைந்த தாகச் சொல்லிவிட்டு, அதையும் தாண்டிச் சிந்தியுங்கள் என்கிறார் கட்டுரை ஆசிரியர். தம்மம் அல்லாதவையும் தம்மமாக இருக்கும் என்பது புத்தரின் அறவுரை. தம்மம் அல்லாத வையும் தம்மமாக இருக்கும் என்பதை ஏற்றுக் கொண்டால் மட்டுமே, புத்தரின் தத்துவம் கால ஓட்டத்துடன் பயனித்து மனிதனை பண்படுத் தும். இதை எல்லா பவுத்த சிந்தனையாளர்களும், சாதாரண எழுத்தாளர்கள் வரை ஒத்துக் கொண் டுள்ளபோது, தம்மம் அல்லதவற்றை அதம்மம் என்று அ. மார்க்ஸ் தெரிவிக்கிறார். பின்னர் தம்மத்திற்கு எதிரானதை இவர் எப்படி வரை யறுப்பார். தம்மத்திற்கு எதிரானது மட்டும்தான் அதம்மா என புத்தர் பதிவு செய்துள்ளார். புத்த ருக்கும், மார்க்ஸ்க்கும் இடையில் இப்படி ஒரு கொள்கை விளக்கப்போர்.

Becoming என்ற ஆங்கிலச் சொல்லுக்கு வளர்சிதை மாற்றம் அதாவது அநிக்கா தத்து வத்தின் பொருளாகவே புத்தர் தெரிவித்துள் ளார். ஆனால் மார்க்ஸ் "நான் உருப்பெற்று வருகிறேன்" என்று தமிழாக்க தண்டனை தரு கிறார். ஏதோ புத்தர் கொஞ்சம் கொஞ்சமாக உருவம் பெற்று வளர்வது போலவும் அது வானுயுர மேம்பாடு அடையும் என்பது போல வும் பதிவு செய்துள்ளார். புத்தரின் உருவ வளர்ச்சி ஆள் உடைத்த தாலிபான் சிலை அளவிற்கு வளர்ந்து விடப்போகிறது போல இவர் எழுதி யுள்ளார். ஏன் இந்தக் கவனக்குறைவு. "புத்தர் என்றுமே தத்துவவாதியாக இருந்த தில்லை. விடுதலைக்கான வழியே அவரது கரிசனமாக இருந்தது. உண்மையில் புத்த போதனைகளில் நாம் எந்த தத்துவத்தையும் காண்பதில்லை" என்று மார்க்ஸ் பதிவு செய்துள்ளார். தத்துவம் இன்றி விடுதலை சாத்தியப்படுமா? தத்துவங்கள் தங்கள் தள செயல்பாடுகளில் மேம்பட்டு வள மாக்கப் படலாமே தவிர, தத்துவமே இல்லை என்பது சரியாக பொருந்தி வரவில்லை. வெகு வேகமாக ஓடுபவனின் கால் தரையில் படும் நேரம் குறைவாக இருக்கலாமே தவிர, தரையில் கால் படாமலேயே ஓடுகிறான் என்பது போலத் தான் இதைக் காணமுடிகிறது. கட்டுரை ஆசிரி யருக்கு, ஓட்டத்தின் வேகத்தில் ஏற்பட்ட மலைப் பில், தன்னுடைய கருத்தில் தேவையற்ற மயக்கம். தரையில் கால் படாமல் யாராலும் ஓட முடி யாது. வேண்டுமானால் அந்தரத்தில் தொங்க லாம். அங்கு வேக அசைவு இருக்காது. புத்தர் வேகத்துடன் இணைந்து மக்களையும் தன் னோடு அழைத்துச் செல்பவர். வேகம் இருக்கும் இடத்தில் அசைவு இருக்காது என்கிறாரா கட்டுரையாளர். நல்லவேளை இவர் விஞ்ஞான விசயங்களை ஆய்ந்திருந்தால் பூமி சுற்றவில்லை, நகர்வதும் இல்லை, பூமி அசையாமல் இருக் கிறது என்று தன்னுடைய அறியாமையை அங்கும் பதித்திருப்பார்.

"யாகங்கள் குறித்து அதை இயற்றும் முனியிடமோ" என்று சொல்லத் துவங்கும் இவர் முனி என்பது யாகங்களில் உவப்புடைய வர் என்பதாக பதிவு செய்துள்ளார். முனி என் பது பவுத்தச் சொல் என்பதையும், நிறையபேர் முனி என்பதன் தொடர்புச் சொல்லாக, முனி நாதன் முதல் முனியம்மா வரை உள்ளதை இவர் எப்படி மறந்து போனார்? குறைந்த பட்சம் புத்தருக்கு சாக்கிய முனி என்ற பெயர் உள்ளதைக் கூட இவரால் எப்படி மறக்க முடிந்தது? To meet one force, there is another force required என்பது அம்பேத்கரின் சிந்தனை. ஆனால் உலக தத்துவ ஞானிகளின் கொள்கை களை புத்தர் தனக்கென தத்துவக் கொள்கையே இல்லாமல் மறுதலித்தார் என்று கட்டுரை தெரிவிக்கிறது. தத்துவம் ஏதுமன்றி ஒரு தத்து வத்தை எதிர் கொள்வதோ, எதிர்ப்பதோ எங்ஙனம் சாத்தியப்படும்? இது கட்டுரையின் மையப் புதிர் போலத் தென்படு கிறது.

"உச்சநீதி மன்றத்தால் பறிக்கப்படும் இடஒதுக்கீடு உரிமைகள்" பற்றி ஒரு கட்டுரை. இதை விடுதலை இராஜேந்திரன் எழுதியுள்ளார். "பக்கத்து இலைக்குப் பாயாசம் போடுங்கப்பா" என்று சொல்வது போல உள்ளது. தாழ்த்தப் பட்ட மக்கள் சட்ட உரிமைகளைக் கேட்பதை, தங்கள் கைகளில் போராட்டமாக எடுத்து பிற் படுத்தப்பட்டவர்கள், தங்கள் அதித தேவையாக தாழ்த்தப்பட்டவர்களைச் சுரண்டுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

பிற்படுத்தப்பட்டவர்களின் அரசியலில் தங்களைக் கரைத்துக் கொண்டவர்கள் ஏற்கனவே தங்களது வேட்டியை இழந்தவர்களாக உரிமைகளை விட்டுக் கொடுத்துள்ளனர். இருக்கும் கோவணத்தை இறுகப் பற்றிக் கொண்டு, பிற்படுத்தப்பட்டவர்களிடம் நாம் அரசியல் செய்ய வேண்டியிருக்கும் தருவாயில், இது போன்ற கட்டுரைகள் நம்மை மேலும் அவநம்பிக்கை கொள்ளவே வைக்கின்றன. சாதி இந்துக்களின் கல்லூரிகளான

- பச்சையப்பன் கல்லூரி
- கந்தசாமி நாயுடு கல்லூரி
- வள்ளியம்மாள் கல்லூரி

போன்ற கல்லூரிகளில் இட ஒதுக்கீடு கேட்டு போராட இந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் தலைமை தாங்கினால், எங்களில் பெரும்பான்மையோரால் பயன்பெறமுடியும். இங்குதான் ஆயிரக்கணக்கான கல்வி, வேலை வாய்ப்புகள் எங்களுக்கு மறுக்கப்படுகிறது. ஏதோ ஐ ஐடி-யில் தலித்துக்கான இட ஒதுக்கீடு மறுக்கப்படுவது போல இவர் ஒரு மாயையை ஏற்படுத்தி அதன் மூலம் தங்களுக்கான இட ஒதுக்கீடு கேட்டவரை இனியும் வேறுவடிவங்களில் இந்த இதழ் நமக்கு அறிமுகம் செய்கிறது.

“மையம், விளிம்பு, அதற்கும் அப்பால் நிற்கும் அயோத்திதாசர்” என்ற கட்டுரையை டி. தருமராசன் எழுதியுள்ளார். அயோத்திதாசர் பற்றி ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் கட்டுரை. இதை எல்லோரும் படிக்க வேண்டும் என்ற தேவையை இன்றைய சூழல் உருவாகியுள்ளது. வரலாற்றுச் சான்றுகளுடன், புலமை மேலிடும் வாதங்கள் கட்டுரையின் தன்மையை மிகவும் உயர்த்தியுள்ளது. டி. தருமராசன் அவர்களின் பணியை நாம் மனமாறப் பாராட்டுகிறோம்.

அடுத்தபடியாக, “மனிதர்களைப் பற்றி கவலைப் படாதவர்கள் மிருகங்களைப் பற்றி கவலைப் படுவது போலித்தனமானது” என்ற கட்டுரையை ஆர். நல்லகண்ணு எழுதியுள்ளார். வார்த்தை களை கச்சிதமாகப் பயன்படுத்தியுள்ளார். சாமான்ய மனிதர்களின் மீது இவருக்குள்ள அக்கறை சிறப்பாக உள்ளது. சரியான பார்வை. நாம் இவரின் பார்வையை பாராட்டுகிறோம். எஸ்.வி. ராஜதுரை தன்னுடைய தெளிவான அணுகுமுறையால், நன்கு விவாதம் செய்துள்ளார். இது பெருமை மிகு பணியாகிறது.

தாழ்ந்த நிலையில் உள்ள மக்கள் பலரும் இங்ஙனம் செய்து வருதலைப் பார்த்து “பன்றியோடு கூடிய கன்றின் செயல்” என்று வி. அரசு மறைமலை அடிகளின் கருத்தாக பண்பாடு வன்முறை பற்றிக் குறிப்பிடுகிறார். ஏதோ பன்றி வெஜிடேரியன் விலங்கு போலவும், அந்தஸ்த்துக்காக மலம் சாப்பிடுவது போலவும், கன்று மிக ஒழுக்கமாக ஆசுமவிதிப்படிஇருக்க வேண்டிய ஆச்சாரமான விலங்கு போலவும் இருப்பதாக நினைத்து இவர் உள்ளத்தில் இருந்த உச்சபட்ச வன்முறையை வெளிக்காட்டி நம்மைத் திகைக்க வைக்கிறார். கொலைகாரன் பிக்பாக்கெட் அடித்தவனைப் பார்த்து குறைசொல்வதாகவே இது அமைகிறது. அது சரி; தனக்குப் போட்டியாக ஒரு கருத்தியலாகவே பலி தடை சட்டத்தை இவர் அணுகி யுள்ளார். வெளிப்படையாக இவர் மறைமலை அடிகள் சாடுவது போலத் தோன்றி னாலும், நான் இருக்கும்போது நீ எப்படியப்பா இது போலப் பேசலாம் என்ற தொனியே மேலோங்குகிறது. யாருக்கோ நீங்கள் இப்படி யெல்லாம் செய்தீர்கள் என்று ஏன் அதை கைவிட்டு விட்டீர்கள் என்ற குறிப்பை காட்டு கிறார் கட்டுரையாளர்.

தாய் உறவு, கன்று பகை; இது வேறொன்றும் இல்லை. சுலோச்சனா சம்பத் தாயார்; அம்மா ஆட்சியில் உறவாக அங்கம் வகிக்கிறார். ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் கன்றுக்குட்டி; துள்ளி இந்த சட்டத்தை எதிர்க்கிறது. “இந்த தடைச் சட்டத்தை கொண்டுவந்தது சரியில்லை. இதை யார் சொல்லிக் கொண்டுவந்தார்கள்...” என்று கட்டுரையாளர் புலம்பியுள்ளார். சொன்னவருக்கும் அம்மாவிற்கும் உள்ள உறவைவிட, தாய்க்கும் கன்றுக்கும் உள்ள பாசம் Blood is thicker than water. அம்மாவிடம் பாதுகாப்புக்காக தாயார். புரட்சி பேச அகில இந்திய அன்னை தயவு. மொத்தத்தில் அம்மா, தாயார், அன்னை support-ல் ஒரு குழப்பம்.

மொத்தமாக, பாண்டிச்சேரி அரசு விளம்பரங்கள் ஐந்து இந்த இதழில் உள்ளன. அதை நாம் படிக்கவில்லை. இதழின் சில கட்டுரைகள் வணிக விளம்பரம் போல அமைந்துள்ளன. இதை வாசகர்கள் படிக்காமல் அடுத்தப் பக்கங்களுக்குப் போகலாம். நாமும் இதைப்பற்றி எவ்வித கருத்தும் சொல்லவேண்டிய தேவை இல்லை. வலிமையாக விளங்க வேண்டும் என்று எண்ணித்தான் ‘வல்லினம்’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கட்டுரைகளின் தன்மை இதை மெல்லினத்தின் விளிம்பிலிருந்து விடுவித்து இடையினத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிது. இதழ்களில் தனக்கென ஓர் இனத்தை வரையறுத்துக் கொள்ள மனமாற வாழ்த்துகிறோம் வல்லினத்தை.



படிப்பகம்

www.padippakam.com

# சிவ-சக்தி-அணு-காஷ்மீர் பற்றி சில குறிப்புகள்

■ எச். பீர்முஹம்மது
Peer8@rediffmail.com

சைவம் அதன் கோட்பாட்டு வடிவத்தில் பல கிளைகளாகப் பிரிந்தது. தென்னிந்திய சைவம், வட இந்திய சைவம், காஷ்மீர் சைவம் போன்றவை அதன் கிளைகள். சிவனை மையமாகக் கொண்டு இதன் கருத்துக்கள் நிலைபெற்றன. காஷ்மீர் சைவம் காஷ்மீர் பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வாக்கில் ஏற்பட்டது. இதனை தாந்திரீகர்கள் பலர் பின் தொடர்ந்தனர். வசுகுப்தர், சோமநந்தர், அபி நவகுப்தர் போன்றோர் இதனின் தலைசிறந்த கோட்பாட்டாளர்கள்.

காஷ்மீர் சைவம் வேதங்களில் அதிகாரத் தையும் அதன் நிலைப்புத் தன்மையையும் மறுத் தது. மேலும் சாதி முறையையும் நிராகரித்தது. இது தரிகா, ஸ்பந்தா, பிரத்ய பிஜனா என்ற மூன்றுமுக்கிய கோட்பாட்டோடு தொடங்குகிறது.

தரிகா சிவ-சக்தி-அணு அல்லது பதி-பாச-பசு என்ற மூன்றாக நீள்கிறது. காஷ்மீர் சைவம் தனி மனித ஆன்மாவும், பொருளாதார உலகமும் சிவனோடு ஒன்றுகிறது என்றது. அவைகள் சிவனின் வெளித்தோற்றங்கள். சிவனே அதன் வடிவமாக இருக்கிறான். இது 'ஸ்பந்தா' எனப்படும். ஆன்மாவானது சிவனோடு அடைதல் அல்லது சிவ அனுபவத்தை பெறுதல் பிரத்யபிஜனாவாகும். இந்த கோட்பாடானது சூபிசத்தின் இயைபுக்கு ஒத்ததாகும்.

சிவனே உயர்ந்த இருப்பு. அதன் சாரம்தான் மனிதன். இந்த இருப்பானது முழுமையானது, நிலையானது, காக்க முடியாதது. சிவனே முழு முதல் உணர்வு. அந்த உணர்வின் வெளிப் பாடே மற்றவை. இந்நிலையில் காரண-காரியத் திற்கிடையே எந்த வித்தியாசமும் இல்லை. தூய வஸ்துவாக சிவனை இருத்தும்போது உல கின் தோற்றம் என்பது சிக்கலான கேள்வியாக இருக்கிறது. இதற்கு இவ்வுலகமானது சிவனின் பிரதிபிம்பம் என்கிறது காஷ்மீர் சைவம். கண் ணாடி எந்த கறையையும் ஏற்படுத்தாததைப் போன்று சிவனிடத்திலும் எந்த கறையையும் உண்டு பண்ணுவதில்லை.

உலகின் வெளிப்பாட்டுக்கு சிவனோடு சக்தியும் இன்னொரு காரணமாகும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியா தவை. சக்தியானது அலைவுறும் நிலையில் அது விமர்சமாயாவாகும். இந்த சக்தியானது சித்தம், ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை, யோகம் என்ற ஆறுவித தன்மைகளைக் கொண்டது. சித்தம் என்பது அறியும் நிலை. ஆனந்தம் அதனை ஏற்படுத்தும் வழி. இச்சை படைப்பில் தூண்டல். கிரியானது செயல் பாடாகும். யோகம் சிவ-சக்தி இரண்டும் இணையும் நிலை. ஞானம் என்பது படைப்பின் தோற்றம். படைப்பு நிலையில் சிவ-சக்தியைப் பிரிக்க முடியாது. இதன் உறவு வெப்பத்துக்கும் நெருப்புக்கும் இடையேயான உறவாகும். சக்தி வெளிப்படும்பொழுது உலகம் தோற்றம் கொள்கிறது. அது மறையும்பொழுது பிரளயம் ஏற்படுகிறது. காஷ்மீர் சைவத்தைப் பொறுத்த வரை சிவனுடன் ஒன்றுவது உலக இறுக்கங்களி லிருந்து விடுதலை பெறுவது ஆகும்.

காஷ்மீர் சைவத்தின் சிவ-சக்தி என்பது ஆண், பெண் உறவோடு இணைத்து பார்க்கப் படுகிறது. ஆண், பெண் நிலையில் காஷ்மீர் சைவம் தாந்திரிகத்தோடு இணைகிறது. தாந்திரீகத்தின் தொடர்ச்சியில் இதன் உறவு பிரிக்க முடியாததாகும். பிரகிருதி - புருஷ கோட்பாட் டின்படி பிரகிருதி சக்தியாகவும், புருஷ என்பது சிவனாகவும் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சக்திக்கு செயல்படும் மற்றும் செயல்படா ஆகிய இரு நிலைகள் உள்ளன. செயல்படா நிலையில் இது சிவனோடு அல்லது பிரகாசத்தோடு இணைந்துவிடுகிறது. செயல்படும்நிலையில் உயர் இருப்பானது உணரும் நிலையை அடைகிறது. உயர் இருப்பானது கடக்க முடியாததாகவும் நிலையானதாகவும் இருக்கிறது. உயர் இருப்பில் சிவ-சக்தி இரண்டற கலந்துவிடுகிறது. சக்தியின் முதல் மாறுதல் நிலை இச்சையாகும். இரண்டாவது நிலையில் சித்தம் அல்லது உணர் வடிவமாகும்; பின்பு அறிவாகவும், செயலாகவும் மாறுகிறது. இவை முழுமை அடையும்பொழுது படைப்பாக மாறுகிறது. இங்கு பெண்ணே முன்னிலைப் படுத்தப்படுகிறாள். சக்தியானது கருவி காரணமாகும்போது விந்தணுவானது பொருளாயத காரணமாகிறது.

சக்தியானது அதன் இன்னொரு நிலையில் பெண் தெய்வங்களோடு தொடர்பு கொண்டது. பிரபஞ்ச படைப்பு நிலையில் மூலப் பிரகிருதி யானது அம்ச ரூபினி, கால ரூபினி, காலாம்ச ரூபினி மற்றும் அதன் துணை வடிவங்களாகிறது. முதல் நிலையில் சக்தியானது துர்கா, லட்சுமி, சரஸ்வதி, சாவித்ரி மற்றும் ராதை ஆகிறது. இரண்டாம் கட்டத்தில் கங்கா, துளசி, மனசா, சாஸ்தி, மங்கள காந்திகா மற்றும் காளியாகிறது. மூன்றாம் கட்டத்தில் கிராமதேவதைகளாகவும், நாட்டுப்புற அடித்தள மக்கள் தெய்வங்களாக வும் வடிவம் கொள்கிறது.

இம்மாதிரியான பெண் தெய்வ நிலை தாந்திரீக தாக்கத்தின் விளைவாகும், இவர்களே தேவிகள் என அழைக்கப்பட்டனர். காஷ்மீர் சைவம் மதரீதியான சடங்குகளுக்கோ, வழிபாடுகளுக்கோ, மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வில்லை. அது ஜீவனானது சிவ-சக்தியோடு ஒன்றும் நிலையை எடுத்துரைத்தது. இதன் மூலம் எல்லா விதமான துயரங்களிலிருந்தும் விடுதலை அடையலாம் என்றது. இம்மாதிரியான கோட்பாட்டு சூழலின் ஒருவகையில் காஷ்மீர் சைவம் பௌத்தம், தாந்திரீகம், சூபிசம் இவற்றுடன் ஒன்றி விடுகிறது. ●

---

■ தேவதேவன்

## ஓராயிரம் வாட்கள்!

நான் பார்க்கவில்லை என நினைத்து
இரண்டு குட்டிப் பையன்கள்
மூலையிலிருந்த பெருக்குமாற்றிலிருந்து
இரண்டு ஈக்கிகளை உருவி
வாள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்

என்னைப் பார்த்துத் திகைத்து நின்றார்கள்.
நான் கேட்டுக் கொண்டேன்:
"சண்டையிடுவதா நமது வேலை"

பணி, சாதனை, தீரச்செயல்
அனைத்தையும் குறிக்கும் ஒரு பெரும் சொல்லை
அப் பெருக்குமாற்றை வெறித்தபடி
என் வாய் முணுமுணுத்தது;
"துப்புரவு செய்தல்"

ஓராயிரம் வாட்களையும்
முஷ்டி கனல
ஓர் ஈக்கிப் பெருக்குமாறாக
ஒன்றுசேர்த்து இணைத்துக் கட்டி,
ஒரு தூரிகையைப் போலவோ
ஒரு பூங்கொத்தைப் போலவோ
ஒரு பேர்வாளைப் போலவோ
எளிமையாய்க் கையிலேந்தல்! ●

## இந்த வியாதிகளும் நாற்றமுமே நம் விதியா?

ஊறும் தென்னீரின் வெள்ளமெங்கே?
காதற் படகுகளும் மலர்களும் தென்றலும்
பறவைகளும் வெள்ளி மீன்களும் உலாவும்
அந்த நீர் நிலைகள் எங்கே?

நாம் ஊற்றுக் கண்களைப் பொத்தி
அடைத்துக் கொண்டுள்ளது -
ஊறும் தென்னீரால்
அழிக்க இயலாத அளவுக்குத்
தேங்கிய நீர்விகாரக்கிடையின் பாரம்!

ஓட்ட இறைத்து
ஊறும் நீர் காண்பதற்கும்
காப்பதற்கும்
யார் சொல்லித் தர வேண்டும்? ●



படிப்பகம்

www.padippakam.com



# நிகழ்ந்தனவெல்லாம் வரலாறல்ல...

■ இரா. பழனிச்சாமி

நடந்தவைதான் வரலாறுதான் என்பதை ஒப்புக் கொண்டு விட்டு 'நிகழ்ந்தன அல்ல; வரலாறு சொல்லப்படுவன' என எதனைக் கட்டுரையாசிரியர் சொல்கின்றார் எனத் தெரிய வில்லை. ஒரு நாடகப் பிரதியை மதிப்பீடு செய்ய துணைக்கு இரண்டு நாவல்களை அழைக்க வேண்டியதின் அவசியம் என்ன? நிகழ்வுகள், அனைத்துக்கும்; அனைவர்க்கும் பொதுவான தென்பதாலா? ஒரு நாடகப் பிரதி கைக்கு வருவதற்காகன வழியே (நிகழ்வு) வேறு வேறாக உள்ளதே. அந்நாடகப் பிரதியைக் காணும் பாக்கியம் நமக்கு இன்னும் கிட்டவில்லை. அவ்வாய்ப்புகளெல்லாம் வளர்ந்தவர்களுக்கே சாத்தியமாகிறது. எளிமையானவர்களும் எதிர் பார்க்கலாம் புத்தகக் கடைக்கு வரும்பொழுது எனவே அந்த நாடகப் பிரதியை விடுத்து வரலாறு சொல்லப்பட்டதாகக் கூறப்படும் நாவல்களை மட்டுமே விமர்சனத்திற்கு உள் ளாக்குவோம்.

நிகழ்ந்தனவெல்லாம் வரலாறாவதும் கிடை யாது. வரலாறுகள் அனைத்தும் உண்மையை மட்டுமே கூறுகின்றன என்றும் கூறமுடியாது. பதிவாகியுள்ள வரலாறுகள் யாரின் சார்பாக நின்று தமது குரலைப் பதிவு செய்துள்ளன எனப் பலர் கருத்துக்களைக் கூறியுள்ளனர். பல சம்ப வங்கள் மறைக்கப்பட்டுள்ளன; சிலவற்றை மறக் கடிக்கப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் தலித் தியப் பார்வையில் அணுகி மறைக்கப்பட்ட வரலாறுகளை புதுப்பிப்பதும், புரட்டிக் கூறப் பட்ட வரலாற்றைத் தலைகீழாக்குவதும் தற் பொழுது (1990க்குப் பிறகு) தீவிரமடைந்து வருவதை அறிகிறோம். 'ஐயுறுதலே அறிவின் முதல்படி' என்ற சொல் சில வேளைகளில் ஆபத்தையும் உண்டு பண்ணிவிடுகிறது. இதற்குச் சான்றே அ. ராமசாமியின் கட்டுரை.

கல்மண்டபம் என்ற நாவல்கள் பெண்களால் எழுதப்பட்டவை என்பதனுடன் சாதியப் படித் தரத்தில் உயர்த்தி வைப்பவர்கள் என்று கூறப் படும் பார்ப்பன சாதியைச் சேர்ந்த சுமதி என்ப வராலும், தலித் சாதியைச் சேர்ந்த பாமா வாலும் எழுதப்பட்டவை என்பது மிகுந்த கவனத்தைப் பெறக்கூடியவை. தலித்து உரிமைகளில்; ஒதுக்கீடு களால் பங்கு கேட்கும் நோக்கத்தை முன்வைக் கும் முயற்சி கல்மண்டபத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று கூறினாலும் ஆசிரியருக்கு அத்தகைய எண்ணம் இருந்திருக்குமா? என்பது சந்தேகமே. இதனைக் கட்டுரை யாளரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். வரலாறாக்கும் முயற்சி யாகத் தன் தாத்தாவின் பிரேதத் திற்குத் தோள் கொடுத்த பிச்சுக் குட்டியின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் (நிகழ்வுகள்) என்ற குறிப்புடன் ஆரம்பமாகும் நாவலில் அந்நாவல் கூறும் 'சவுண்டி பார்ப்பனர்களின்' வாழ்வென் பது கசடு நிறைந்ததாய் அமைந்து சாதியைக் கட்டிக் காக்கும் தம் சக பார்ப்பனர்களின் முகத் தில் காறி உமிழ்வதைக் காணமுடிகிறது.

பார்ப்பனர்கள் என்றாலே தூய்மையான வர்கள், சைவம் சாப்பிடுகிறவர்கள், மதுப் பழக் கத்திற்கு அடிமையாகாத ஒழுக்க சீலர்கள் என்று எழுப்பப் பட்டிருக்கும் பழைய கட்டுமானத்தின் காரைச் சுவற்றில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது இந்நாவல். இந்நாவலின் நாயகனான தேசீ என்ற வேதாந்த தேசிகன் தம் சாதியக் கட்டுமானத்தை மீறிய கலகக் காரனாக உள்ளதைப் போன்றே 'கிங் ஆப் டைகர்' என்பதின் வாழ்வும் அமைந் துள்ளது. தேசு கஞ்சா குடிப்பதும், பாய்கடையில் வடைகறி சாப்பிடுவதும், மது அருந்துவதும் கலகப் பண்பாட்டிற்குச் சான்று. இதனைப் போன்றே கிங் ஆப் டைகர் 'பூணூலை' அறுத் தெறிவதும், பார்ப்பனர்களை ஏகபத்தினி விரதர்களாகக் காட்டும் போக்கை மறுத்து 'இராமன்ஜி' கொண்ட பெண் தொடர்பும் கலகக் குரலை ஒத்ததே.

புனிதம் கற்பிக்கப்பட்டு வந்த ஒரு சாதியின் மற்றொரு முகத்தை மக்களுக்கு அடையாளப் படுத்திய சுமதி இத்தகைய ஒரு இழிவைத் தாம் சார்ந்த சாதிக்குச் செய்யப் போடிகறோம் எனத் தெரிந்தே செய்திருப்பாரா? என்பதைச் சிந்திக்க வேண்டும். அறிமுக எழுத்தாளரான சுமதி அடுக்கடுக்காய் பல நிகழ்வுகளைத் தனது நாவலில் பதிவு செய்துள்ளார். எந்தப் பாத்திர



படிப்பகம்

www.padippakam.com

மும் பார்ப்பனருக்கான ஒழுக்கங்கள் என்று தொல்காப்பியம்; மனுதர்மம் முதல் சொல்லப் பட்டு வரும் ஒழுக்கக் கோட்பாடுகளுக்குள் அடங்காதவர்களே என்பது கூடுதல் கனமான விஷயமாக உள்ளது. நிச்சயம் இந்நாவலை பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் (சோ. இராமசாமி போன்றவர்கள்) எழுத்தாளர் களிடம் கொடுத்தருந்தால் வெளிவந்திருக்குமா? என்பதே சந்தேகத்தான்.

'கல்மண்டபம் உயர்ந்த இடத்திலிருக்கும் மனிதர்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பும்' என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ள திராவிடப் பாசறை அருள்மொழிகூட மேலே கூறிய செய்தி களைத் தெரிந்துதான் கூறினாரா என்பதும் தெரியவில்லை. மனசாட்சியைத் தட்டி எழுப்ப எழுதப்பட்ட இந்நாவல் பார்ப்பனர்களின் போலிப் புனிதங்களை மண்ணைக் கவ்வ வைத்துள்ளது. இதுவரை புனிதம் கற்பிக்கப் பட்டுவந்த தொடாத ஒன்றைத் தொட்டிருப்பதே அதுவும் அவர் சாதியைச் சார்ந்தவர்களை நோக்கி இத்தகைய இழிவுகளைச் சுமத்தி மனிதனை அடிமைப்படுத்தியுள்ளீர்களே எனக் கேட்பது நிகழ்வாக இருந்தாலும் வரலாறாக இருந்தாலும் ஒரு வகையில் தலித்துக்கு ஆதர வான குரலாக ஆகிப் போய் விட்டது என்பதே உண்மை. தெரிந்தோ, தெரியாமலோ ஒருவனின் கதையைக் கூறுகிறேன் என ஒரு சாதியின் போலித்னத்தை துயிலுறிந்திருக்கிறார் சுமதி. ஆதிக்க மதிப்பீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 'வெளியே பார்த்தால் வெள்ளை உள்ளே போனால் சொள்ளை' என நிரூபிக்கச் சான்றாக அவர் சார்ந்த சாதி ஆவணமே சாட்சியாக நிற்பதால் நிச்சயமாய் தலித்துகளுக்கு எதிரான படைப்பு எனக் கொள்ள முடியாது.

இப்பின்னணியில்தான் வெங்கட் சாமிநாத னின் 'மேட்டுக் குடித் தலித்துகள்' என்ற கோரிக் கையை அணுகவேண்டும். சாதிக்களைவு செய்த வர்கள்; சாதியொழிப்பிற்கு ஆதரவானவர் கள் அனைவரும் தலித்துகள் என்று ஏற்கனவே ஒரு வரையறையுள்ளது. இதற்கு பார்ப்பனர் களின் குறிப்பாக வெங்கட் சாமிநாதனுக்கு திராணி யிருந்தால் மேலே கண்ட சொல்லாட்சியே தேவையில்லாமல் போய்விடும். சாதியே வேண் டாமென்று சாதியொழிப்பு என்பத னையே 'தலித்' என்ற சொல் முன்னிலைப் படுத்தி யுள்ளது. எனவே பார்ப்பனர் முதல் தலித் வரை சாதிக்களையும்; சாதியொழிப்பும் சாத்தியப் பட்டதென்றால் விட்டுவிடத்தான் போகிறோம் தலித் என்னும் சொல்லை. எனவே கோரிக்கை வைப்பதை விட்டுவிட்டு சாதிக் களைவு என்ற கொள்கையுடன் ஒன்றிப் போவதைப் பற்றி வெங்கட் சாமிநாதன் போன்றோர் சிந்திக்க வேண்டும். கட்டுரை யாளரும் கல்மண்டப நாவலை 'தலித் விரோத' படைப்பு என்பதை விட்டு விட்டுத் தமது பார்வையை மற்றொரு தளத்திலும் பரவவிட வேண்டும்.

பாமாவின் நாவல்களை மதிப்பூடு செய்த பொழுது கிடைக்காத ஞானோதயம் கட்டுரை யாளருக்குத் திடீரென எப்படிக் கிடைத்ததோ. (புதிய கோடாங்கி அக்டோபர் 2003 இதில் சிவகாமி, பாமா நாவல்களை மதிப்பிட்டுள்ளார்) தெரியவில்லை. அதிலும் நடந்தவைதான், வரலாறுதான் என்று கட்டுரையாளர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ள 'வன்மம்' எவ்வகை யில் தலித் விரோத நோக்கம் கொண்ட நாவல் என்று தெரியவில்லை. (ஆதரவு நாவலுக்கு அளவுகோல் ஏதும் உண்டா?) சாதியப் படிநிலை வரிசையை தலித் மக்களும் உள்வாங்கியுள்ளனர். அவர்களிடமும் சாதி வெறி குடிகொண்டுள்ளது என்பதைத் கரடி சித்தூர் (விழுப்புரம்) சம்பவம் வரை கண்டு வருகிறோம். பள்ளர்கள் பறையர் களிடமும், பறையர்கள் சக்கிலியர்களிடமும் வேற்றுமை பார்க்கின்றனர் என்பதற்குச் சான் றாக பல சம்பவங்களைக் குறிப்பிடலாம். இத் தகைய நிகழ்வினை மையமாகக் கொண்ட நாவல் 'வன்மம்'. வ. புதுப்பட்டியில் நடந்த சம்பவங்கள் அனைவரும் அறிந்ததே. இச்சம்பவங்கள் நடக் கும் பொழுது பாமா அவ்வூரிலேயே இல்லை என்பது வாக்குமூலமாக உள்ளது. (திண்டுக்கல் பூங்குன்னன் தமிழ்ப்பள்ளியில் கூறியது) சம்ப வங்கள் நடந்த பிறகு ஒரு படைப்பாளியாக ஊருக்குள் வந்து தரவுகளைத் தம் சாதியைச் சேர்ந்தவர்களிடம் மட்டும் சேகரித்ததின் விளைவே எதிர் சாதியான பள்ளர்கள் மீது விரோதப் போக்கினை மையம் கொண்ட மனநிலையுடன் தமது கதைப் போக் கினை நகர்த்திச் செல்வதாகும். இப்போக்கு பாமா விடம் 'வன்மத்தில்' மட்டுமில்லை அவரின் முதல் புதினமான கருக்கிலேயே கருக்கொண்டு விட்டது. என்பதற்குச் சான்றாகச் சில இடங் களைப் பார்க்க முடிகிறது. (ப.31, 37, 38) அப்பொழுது அது குறித்துப் பேச யாரும் முன்வரவில்லை. பாமாவின் இத்தகைய போக் குத் தவறு என்பதில் நமக்குள் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இத்தகைய கவனக்குறைவு (சாதிச் சார்பு) விபரிதத்தை உண்டு பண்ணும் ஆபத்து நிறைந்தது என்பது தலித் ஆர்வலர்கள் அனைவரும் அறிந்ததே. எனவே பாமா இனி மேல் இத்கைய தவறுகளைத் தவிர்க்க வேண்டும் என்பதே தலித் ஒற்றுமையை விரும்பும் அனை வரின் விருப்பமாகும்.

காலங்காலமாகச் சாதிச் சண்டைகள் தமிழ கத்தில் நடந்த வண்ணம் உள்ளது என்றா லும் அதனைப் பற்றிய பதிவுகள் இலக்கி யங்களைப்



படிப்பகம்

www.padippakam.com

பொறுத்தவரை புறந்தள்ளப் பட்டு வந்துள்ளன. சமூக நிகழ்வுகளின் எதார்த்தங்க ளைப் பதிவு செய்வது தலித் இலக்கியங்களின் உயிர்நாடியாக உள்ளது. மறைக்கப்பட்டு வந்து இச்சம்பவத்தைப் பதிவு செய்ததின் மூலமாக தலித் இலக்கியத்தின் மற்றொரு தளத்திற்கு அடித்தளமிட்டிருக்கிறார் பாமா. இதனைத் தளமாகக் கொண்டு இனிவரும் காலத்தில் 'தலித் ஒற்றுமையை' மையங்ககொண்ட படைப்புகளைப் படைக்கலாம். உள்முரண்பாடுகளை அலசி ஆராய்ந்து தீர்வு தரலாம்.

சாதி ரீதியான அடக்குமுறைகள் தலித் மக்களிடமும் கடைபிடிக்கப்படும் பொழுது அதனைச் சுட்டிக் காட்டுவது சமூக அக்கறை கொண்டவர்களின் கடமையாக உள்ளது. சாதியொழிப்பை முன்னிலைப்படுத்தியுள்ள தலித் மக்களிடம் தோன்றும் உள்முரண்பாடுகளைப் பேசாமல் அமுக்கப் பார்ப்பது கூட உண்மைக்குப் புறம்பானதே. அது தலித் இலக்கை அடைய எவ்வகையிலும் சாத்தியமாகாது. உள்முரண்பாடுகளைப் பேசியதற்காக வன்மத்தை தலித் விரோத நாவல் என்று கூறமுடியுமா? தலித் ஒன்றுமையை பாமா விரும்புகிறார் என்பதற்குச் சான்றாக வன்மத்திலேயே ப. 94-ல் நல்லதம்பி என்னும் பள்ளர் பேசுவதும், இயல் பதினொன்று முழுவதும் நல்லசான்று. இறுதியில் பாமா தலித் ஒன்றுமையுடனேயே இந் நாவலை முடித்துள்ளார் என்பதனுடன் தலித் அரசியலின் வெற்றியை காளையனின் வெற்றி மூலம் நிரூபித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிகழ்வுகளைப் பதிவு செய்த இந்நாவல்களை 'தலித் விரோத நாவல்கள்' என்று சுட்டிய கட்டுரையாளர், இமையம் எழுதிய 'கோவேறு கழுதைகள்' என்னும் நாவலை அத்தகையதென தனது கட்டுரையிலோ, 'இமையத்தின் படைப்புலகம்' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொழுதோ ஏன் அடையாளப் படுத்தவில்லை. இமையம் அவரின் நண்பர் என்பதாலா? (நண்பரென இமையத்தின் படைப்புலகம் - மதுரையில் கட்டுரையாளரே கூறியது.) இந்நாவலில் தலித் மக்களின் பண்பாடு இழிவான தாக்கப்பட்டுள்ளது. ஆதிக்க சாதிகளைப் பற்றிய குறிப்பே இல்லாமல் பறையர்களே ஆதிக்க சாதியினர் என்று அடையாளப் படுத்தியுள்ளதும். மற்ற மதம்; சாதியை சார்ந்த மக்களுக்கு வீரத்தின் மூலமாகவும், பொருளாதார வசதியின் மூலமாகவும் வரும் நிலம் பறையர்களுக்கு வரும் பொழுது பெண்களைக் கூட்டிக் கொடுத்து வந்ததாகப் (அழகனின் நிலம்) பதிவு செய்துள்ளதையும் என்னவென்று கூறுவது. கோவேறு கழுதைகள் பேசிய உட்சாதி முரண்பாடுகள் எவ்வகையில் முன் நகர்வதாக அமைந்துள்ளது. இது கட்டுரையாளரின் பார்வையில் படாத விஷயமா? எனத் தெரியவில்லை.

அறிவு ஜீவிகளின் பார்வைகள் உறவுகளுக்குள் வரும் பொழுதும் தம்மீது விழும்போதும் குறுகிவிடும் போல் உள்ளது. இதற்குச் சான்று தான் கட்டுரையாளர் கோவேறு கழுதைகளை தலித் விரோத நாவல் எனக் குறிப்பிடாததும், மற்றவர்களின் படைப்புகளுக்கு முன்னுரை; அணிந்துரை வழங்கும் பொழுது கலகக்குரல் இல்லை, தலித் விடுதலைக்கான சாத்தியங்கள் அலசப்படவில்லை, வீரியமற்ற படைப்பு, கழிவிரக்கம் கொள்ளச் செய்யும் படைப்பு என்றெல்லாம் குறிப்பிட்ட ராஜ் கௌதமன் 'சிலுவைராஜ் சரித்திரத்தை' எந்த நோக்கத்திற்காக எழுதியுருக்கிறார் என்ற வினாவுமாகும். சாதியாலும், பொருளாதாரத்தாலும், பண்பாட்டாலும் இழிவுபடுத்தி தலித்தை அடிமைப்படுத்தியுள்ள தரித்திரத்திற்குத் தமது சரித்திரம் மூலம் கௌதமன் கூறும் தீர்வு என்ன? கலகக்குரல்கள் அவதின் சரித்திரத்தில் காணாமல் போனதின் மாயமென்ன? தொடரலாம் என்று முடித்துவிட்டால் மட்டும் தலித் பிரச்சினையை; தலித் விடுதலையை இவரின் சரித்தரத்தில் தொடக் கூடாதா? இளமையில் இவருக்கு எந்தச் சிக்கலும் எழும்பவில்லையா? கௌதமன் வாழ்ந்த வாழ்வை சில தலித்துகள் வாழ்ந்திருக்கலாம்; வாழ்ந்துவிடலாமென்பதும் கூட எதார்த்தமே. எனினும், பாமாவிற்குக் கிடைத்த அனுபவங்களில் கால் பங்குகூட கௌதமனுக்குக் கிடைக்காமல் போனது ஆச்சர்யம்தான். அறிவு ஜீவிகளின் உபதேசம் ஒருவேளை ஊருக்குத்தான் போலிருக்கிறது.

இறுதியாக நாம் கூறுவது நிகழ்ந்தனவெல்லாம் வரலாறாக்கப்படவில்லை. வரலாறாகப் பதிவு செய்யப் பட்டவையெல்லாம் உண்மையை மட்டுமே மையமாகக் கொண்டவையும் அல்ல. நிகழ்வுகளைப் பதிவு செய்யும் பொழுது படைப்பாளியும்; விமர்சகனும் ஒவ்வொரு அரசியலுடனேயே ஒன்றைப் படைக்கிறான்; விமர்சிக்கிறான், எனவே கருத்தியல் சார்பு அவனையும் மீறி விழுவது எதார்த்தமாகிறது. இம்மீறலுக்கு சுமதியும், பாமாவும், இமையமும், அ. ராமசாமியும், கௌதமனும் விதிவிலக்கல்ல என்பதையே இப்பொழுதைய நிகழ்வுகள் காட்டுகின்றன. இதனையும் மீறி மேலே கண்ட நாவல்கள் நிகழ்ந்தன அல்ல; வரலாறு சொல்லப்படுவன எனச் சொன்னால் நிச்சயமாக அது வரலாற்றுப் பிழைதானேயொழிய வேறெதுவாக இருக்க முடியும்.!

●



படிப்பகம்

www.padippakam.com

# சந்தேகங்களின் தொகுப்புகள் பெருகட்டும்...

■ அ. ராமசாமி

எழுத்து மட்டுமல்ல, எல்லா விதமான கலைச் செயல்பாடுகளும் ஒருவிதத்தில் மனிதனின் அனுபவங்களாகவும், அனுபவங்களின்மேல் எழும் நம்பிக்கைகளாகவும்தான் உள்ளன. அதேபோல் விமரிசனங்கள், அவற்றின்மேல் எழுப்பப்படும் சந்தேகங்களாகவும் சந்தேகங் களுக்கான காரணங்களைத் தொடுப்பதுமாகத் தான் இருக்கின்றன. விமரிசனங்களின் மேல் சங்தேகங்கொள்ள கூடுதலாகவே சாத்தியங்கள் இருக்கின்றன. அ. ராமசாமியின் மதிப்பீட்டின் மேல் சந்தேகங்கள் கொள்ள பழனிச்சாமிக்குக் காரணங்கள் இருக்கின்றன.

கதாபாத்திரங்கள் அவர்கள் இயங்கிடும் பிரதேசம், அதற்கான காலம் என நிகழ்ச்சிகளை உருவாக்கும் நாடகம், நாவல் போன்றன ஒருவிதத் தில் வரலாறுதான். கவனம் ஒரு வரலாறுதான். படைப்பாளியின் பார்வையில் படைப்பில் இடம் பெறும் நிகழ்வுகள் எல்லாமே நடந்தவை களாகக்கூட இருக்கலாம். இவைகள் தவிர இன்னும் பல நடந்திருக்கக்கூடும், அவர்கள் அறியாமல். நடந்த எல்லாவற்றையும் பதிவு செய்வது ஒரு படைப்பாளியின் வேலையும் அல்லதான். ஆனால் பதிவுகள் அந்தப் படைப் பாளியின் கோணத்தில்தான் வாசகனிடம் வந்து சேர்கிறது என்பது விளக்க வேண்டிய ஒன்றல்ல.

தன் வரலாறாக எழுதப்பட்ட கருக்காக இருந்தாலும் சரி, *சிலுவைராஜ் சரித்திரமாயினும்* சரி படைப்பாளியின் கோணம் இருக்கத்தான் செய்கிறது. பிரக்ஞைபூர்வமாக சொல்லுவதிலும் சொல்லாமல் தவிர்ப்பதிலும் வேறுபாடுகள் இருக்கலாம். *பாமாவிடம்* எல்லாவற்றையும் சொல்லிவிடவேண்டும் என்ற பிரக்ஞை கூடுத லாக இருந்திருக்கிறது; *ராஜ்கௌதமனிடம்* சொல்லாமல் தவிர்ப்பது குறித்த பிரக்ஞை கூடுதல். அதுதான் வேறுபாடு. அனுபவங்கள் எல்லாவற்றையும் சொல்லாமல் விட்டது ஏன் எனக் கேள்விகள் எழுப்பலாமேயொழிய சொல் லித்தான் ஆகவேண்டும் எனக் கட்டளையிட முடியாது. தன் வாழ்க்கையின் எந்தெந்தப் பகுதி களையெல்லாம் சொல்ல வேண்டும்; எவையெல் லாம் மறைக்கப்பட வேண்டும் என்பது படைப் பாளியின் நம்பிக்கை, நோக்கம், விருப்பம் சார்ந் தது. கௌதமன் கவனமாக இருந்திருக்கிறார் என் பதை சிலுவைராஜ் சரித்திரத்தில் காணமுடி கிறது. கவனமாக எழுதப்பட்டவைகளே சிறந்த எழுத்துக்கள் என்று நம்புவதும், வாசகர்களின் பாடுகள்.

*பாமாவின் வன்மத்திலும், சுமதியின் கல்மண்டபத்திலும்* சொல்லப்படுவனவும் படைப்பாளிகளின் கோணத்தில் சொல்லப் பட்ட வரலாறுகள். அவர்களின் எண்ணப்படி - மனச்சாட்சிப்படி உண்மைகளும் கூடத்தான். ஆனால் இந்தப் படைப்பாளிகள் சார்ந்த சாதி மற்றும் வெளிவரும் காலம்சார்ந்து இவை களுக்கு வேறு நோக்கங்கள் இருக்கக்கூடும் என்பது விமர்சகனின் சந்தேகம். இவ்விரு படைப்பாளிகளுக்கும் உண்மையில் அந்த நோக் கங்கள் இல்லையென்றாலும் ஒரு குறிப் பிட்ட சூழலில் அவர்களது படைப்புகளுக்கு வெவ் வேறு நோக்கங்கள் வந்து சேர வாய்ப்புகள் உண்டு என்பது எனது வாதம்.

வெங்கட் சாமிநாதன், சுமதியின் நாவலை முன்வைத்து இடஒதுக்கீட்டை விவாதிக்கும் பொழுது (கணையாழி) கல்மண்டபம் இதற் காகத்தான் எழுதப்பட்டுள்ளதோ என ஐயப் படுதலை எப்படித் தவறெனச் சொல்லுகிறார் பழனிச்சாமி? அதேபோல் வன்மம் வந்தவுடன் குமுதம் போன்ற பெரும் பத்திரிக்கைகளில், இந்நாவலில் தலித்துக்களிடையேயுள்ள உள்சாதி முரண்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன என



படிப்பகம்

www.padippakam.com

சுட்டிக்காட்டப்பட்டதை மறக்கமுடியுமா? உள் சாதி முரண்பாடுகளைப் பேசவே கூடாது எனச் சொல்ல வரவில்லை. அப்படிப் பேசும்பொழுது சொந்த சாதி ஆதரவு என்பதைவிட அதன் மேலான விமரிசனம்தான் படைப்பாளியிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இமயத்திடம் *கோவேறு கழுதைகளில்* வெளிப்பட்டது சுயசாதி விமரிசனமும் வெறுப்பும். தன்சாதி மனிதர்கள், அவர்களின் துணிகளையெல்லாம் வெளுத்த ஆரோக்கியத்தின் மேல் செலுத்திய அதிகாரத்தை அவர் சரியென நியாயப்படுத்தவில்லை. (எழுத்தாளனும் விமரிசகனும் நண்பர்களாக மாறுவதற்கு இதுவே கூட காரணமாகி விடலாம். இமயத்துடனான நட்பு அப்படி ஏற்பட்டதுதான்.) *சிவகாமியின் பழையன கழிதலும், ஆனந்தாயி* நாவல்களின் வெளிப்பாடுகளும் சொந்தச் சாதிக்காரர்களின் மேல் பச்சாதாபங்கள் அல்ல. விமரிசனங்கள். ஆண்கள்-தந்தையர்கள் குடும்பத்துப் பெண்கள் மேல் செலுத்தும் அதிகாரம் குறித்த விமரிசனங்கள். ஆனால் சுமதி தன் சொந்த சாதி மனிதர்களிடம் பச்சாதாபம் ஏற்படும்படி எழுதவில்லையென பழனிச்சாமி நம்பினால் அவரது நம்பிக்கை வாழ்க என்றுதான் கூறத்தோன்றுகிறது.

அதேபோல் வன்மத்தில், இரண்டு சாதிகளும் - பள்ளர், பறையர் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டியவர்கள் ஆதிக்க சாதியினரான ரெட்டிகளும் நாயக்கர்களும்தான் என்கிற குவிமையம் விலக்கப்பட்டு இவர்களுக்குள்ளேயே கலவரம் நடக்கிறதே என்னும் ஆதங்கம் மட்டுமா பாமாவால் முன்வைக்கப்படுகிறது? அதிகம் பாதிக்கப்பட்டவர்களாகச் சித்தரிக்கப்படுபவர்கள் பறையர்கள்தான் என்பது சாதாரணமான முதல் வாசிப்பிலேயே வெளிப்படத்தானே செய்கிறது. பள்ளர்கள் அதிகம் முரண்டு பிடிப்பவர்களாகவும், புரிந்து கொள்ள மறுப்பவர்களாகவும் தானே பதிவு செய்யப்பட்டுள்ளனர். பறையர் சாதிப் பெண்களின் வலியும் துயரமும் பதிவு செய்யப்பட்ட அளவுக்கு பள்ளர்குலப் பெண்களின் வலியும் துயரமும் பதிவாகாமல் போகக் காரணங்கள் என்னவாக இருக்கமுடியும்...? பாமாவுக்குள் இருந்த உள்நோக்கம் என்று சொல்ல வரவில்லை. இந்த இடங்கள் எல்லாம் சொந்த சாதியின் பக்கம் சார்ந்துவிடாமல், விமரிசனம் செய்திட வாய்ப்புள்ள இடங்கள் என்பதுதான் சுட்டிக் காட்ட விரும்பியது. அந்த வகையில்தான் வன்மம் தலித் விரோதத்தன்மையின் அருகில் இருப்பதாக நான் கருதுகிறேன். இந்தச் சந்தேகம் அதிகப்படியானதாகத் தோன்றியிருக்கலாம். எனக்கும்கூட இப்பொழுது அப்படித்தான் தோன்றுகிறது.

ஆனால் சிங்கப்பூர் தமிழ்க்கவியும் நாடகாசிரியருமான *இளங்கோவனின் ஊடாடி* நாடகம் குறித்து நான் சொன்ன எதுவும் அதிகப்படியானவையல்ல. அதில் சொல்லப்படுவது, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் குடியேறி வாழ்ந்து வருகின்ற தலித்துகளின் வரலாறு; கவனம் ஒரு வரலாறுதான். இந்த வரலாற்றைச் சொல்லும் இளங்கோவனின் கோணம், தமிழ்நாட்டிலுள்ள பாமரனின் - தன்னைக் கடவுள் உயர்சாதி அடுக்கில் இடம் பெறச் செய்திருக்கிறான்; சேரியிலுள்ளவர்களை அழுக்கானவர்களாகவும் குடிகாரர்களாகவும் படைத்து விட்டான்; அவர்களை மேம்பட்ட மனிதர்களாக மாற்றுவது இயலாத காரியம் என நம்பும் ஒரு பாமரனின் பார்வையில் இருக்கிறது. இந்தப் பார்வை உள்நோக்கம் கொண்டது. இதற்கு முன்னுரையெழுதிய ந. முத்துச்சாமியும், செ. ரவீந்திரனும் அதனைச் சுட்டிக்காட்டாமல் செல்லும் பொழுது அவர்களுக்கும் உள்நோக்கம் வந்து விடுகிறது என்பதும்தான் நான் சொல்ல விரும்பியது. நான் விரும்பியதை என் வார்த்தைகள் தெளிவாக்காமல் போயிருக்கலாம்.

இந்த நாடகப் பிரதி கடைகளுக்குக்கூட வரவில்லை என்கிற கேள்வி நியாயமான ஒன்றுதான். இதுவரை வரவில்லை; சிங்கப்பூரிலிருந்து இங்கு விற்பனைக்கு வரும் என்று உறுதியாகவும் கூறமுடியாது. ஆனால் இந்த நாடகத்தைச் சென்னையிலிருந்து இயங்கும் *கூத்துப்பட்டறை*யென்னும் நாடகக்குழு சென்னையில் மேடையேற்ற முயற்சி செய்தது என்பதையும் அதற்கு தலித் சிந்தனையாளர்கள், செயலாளிகளிடமிருந்து எதிர்ப்பு கிளம்பிட இருந்தது என்பதையும் நான் அறிவேன். பிரதியாக வருவதைவிட மேடைநிகழ்வாக வந்தால் அதன் தாக்கம் எவ்வாறிருக்கும் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

தலித் எழுத்தாளர்கள் சொந்த சாதிகளின் மீது விமரிசனம் செய்பவர்களாக இருக்க வேண்டும் எனச்சொல்லும்பொழுது தலித் அல்லாத சாதி எழுத்தாளர்கள் எப்படி எழுதுவது என்று யாருக்காவது கேட்கத்தோன்றும். தலித் அல்லாதவர்கள், அவர்கள்-பிராமணர்களாக இருந்தாலும் சரி, பிராமணர்களையே எல்லாவற்றிற்கும் காரணமாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டிருக்கும் இடைநிலைச் சாதியினராக இருந்தாலும் சரி சொந்த சாதிகளை விமரிசனம் செய்தால் மட்டும் போதாது. சுயசாதி எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும். தலித்துக்களின் துயரத்தை அவர்களை விடவும் அசலாகப் பதிவு செய்ய எம்மால் இயலும் எனப் போட்டி போடுவதை விட்டு



படிப்பகம்

www.padippakam.com

விட்டு தங்கள் சாதி மனிதர்களிடம் தங்கியுள்ள மேட்டிமைத் தனத்தைக் களைவது எப்படியென யோசிக்கலாம். தங்கள் வீட்டுப் பெண்கள், மாறிவரும் நகர நாகரீகத்திற்குத் தக்க மாறுவது எப்படியெனக் கதையெழுதுவதை விடவும், அடுத்த வீட்டில் வாழும் குடும்பத்தினருடன் சாதிவேறுபாடு காட்டாமல் பழகுவது எப்படியெனக் கதை எழுத முயற்சி செய்யலாம்.

மனிதனின் வாயில் மலத்தைத் திணிப்பதைத் தங்களுக்கு நேர்ந்த துயரமாகத் தலித் எழுதும் பொழுது வெளிப்படுவது இயலாமையாகவும் ஆவேசமாகவும் இருக்கும். அதைவிடவும் அதனைச்செய்த ஆதிக்கசாதி எழுத்தாளன், குற்றவுணர்வும் அச்சமும் வெளிப்பட எழுதும் கதைதான் இன்றைய அவசரத்தேவை என நினைக்கிறேன். இனமரபுப் பெருமைகளைப் பேசிக்கொண்டிருக்கும் மண்சார்ந்த அடையாளங்களை எழுதும் எழுத்தாளர்கள், தங்களின் மூதாதையர்கள் சேரி மக்களுக்குச் செய்த துரோகத்தை எழுத முன்வர வேண்டும்.

தலித்துக்களாக உணராத நிலையிலேயே கூட தலித் சாதிகளில் பிறக்க நேர்ந்த டி. செல்வராஜ்வும் (மலரும் சருகும்), பூமணி (பிறகு, வெக்கை) போன்றவர்கள் தங்கள் நாவல்களில் பல்வேறு சாதி மனிதர்களை அவரவர் இயல்புகளோடு உலவ விட்டுள்ளனர். ஆனால் இடைநிலைச்சாதி எழுத்தாளர்களும் (கி.ரா., நீலபத்மநாதன், நாஞ்சில் நாடன், சி.ஆர். ரவீந்திரன்), பிராமண எழுத்தாளர்களும் (சி.சு. செல்லப்பா, தி. ஜானகிராமன்) போன்றவர்கள் தங்கள் குல மனிதர்களுக்குள்ளேயே நின்று கொள்கின்றனர். எல்லையைச் சுருக்கிக் கொள்வதுகூட தப்பித்துக் கொள்வதற்கான வழிகளில் ஒன்றுதான். அவர்கள் உண்மையான வரலாற்றையெழுத விரும்பியிருந்தால் மனிதாபிமானத்தோடு கூடிய குலப் பெருமைகளை எப்படியெழுதியிருக்க முடியும். சாதியபிமானம் நிரம்பிய கீழ்மைகளையல்லவா எழுதிக் குவித்திருக்க வேண்டும்.

தனிமனித சுதந்திரத்தையும் சமூகத்தில் வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்பதையும் முன்மொழிந்த நவீனத்துவத்தை உள் வாங்கியதிலேயே இந்திய சமூகம் ஏராளமான தவறுகளைச் செய்திருக்கிறது. அந்தத் தவறுகள் முதலில் களையப்பட வேண்டும். அதுவரை சந்தேகப்படுவதைத் தவிர்க்க வேண்டியதில்லை.

சந்தேகங்களின் தொகுதிகள் பெருகுவதாக.!!

■ பாரதி நிவேதன்

# நமக்கான விருட்சம்

பேருந்தில் தனியிடம் தாவும் தனத்தில்
முதலைகள் குடியேறிய நாளின்பின்

கைக்குலுப்புகள் தோள்வருடல்கள் கீழாக
நாய் சேந்தின குழியில்
அசல் முகத்தின் மரணம்

மரப்பட்டைதள்ளி துலங்கா மனசை
வழிநடத்தும் ஆக்டோபஸ்கள்
இட்டுப்போகும் உயிர்ப்புழுக்கை

கழிவறைக் கொக்கோகத்தை செயலூக்க
கருப்பு நாற்றுகள் குதறப்பட்டு.
காவலிலிருந்தும்.

அ வாளின்
கு யுக்தியே
நி கழலை என உடைப்பது

கடிகாரம் முன்மொழிய இதயம் வழிமொழிய
அந்தியில் தோய்ந்த சிவப்பை
பூமியிலிருந்து திருடப்பட்டதாக
தொட்டு சுழற்றித் தெளிக்கும் விருட்சம்.


**புதிய கோடாங்கி நடத்தும்**
**தலித் இளைஞர் விழிப்புணர்ச்சி முகாம்**

நாள்
28-02-2004

இடம்
பட்டமந்திரி NCTPS, சென்னை - 120.

நிகழ்ச்சி ஏற்பாடு
**சமூக நற்பணி இயக்க நண்பர்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

# செய்தி விமர்சனம்

■ நிகழ் அய்க்கண்

"தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு தேவை"

- வாஜ்பேயி பேச்சு

- (நன்றி : தினமணி : 20.12.2003)

*(தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில், "அரசு வேலைகளில் இடஒதுக்கீடு அளிக்க முடியும் என்றால் தனியார் துறையில் ஏன் முடியாது? இதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தனியார் துறையில் நிலவும் பாரபட்சமான நிலைமையை மாற்ற வேண்டும். இதற்கான சட்டம் இயற்றி கட்டாயப்படுத்துவது சரியாக இருக்காது. ஆனால் சமூகத்திலிருந்து விலகி நாம் தனித்து வாழ முடியாது என்பதை தனியார் நிறுவனங்கள் உணர வேண்டும்" என்றிருக்கிறார்.)*

பொருளாதார ரீதியில் நலிந்த முற்பட்ட பிரிவினரில் உள்ள ஏழைகளுக்கு 'இட ஒதுக்கீடு' எனும்போது மட்டும், ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, ஆராய கமிட்டிகளும் அமைத்து, அரசியல் சட்டத்தினை திருத்தும் அளவுக்கு வந்தாகி விட்டது. ஆனால் அரசியல் சட்டத்தின் மூலம் தலித் மக்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினை தனியார் துறைக்கும் விரிவுபடுத்த மனமின்றி தனியார் துறை முதலாளிகளுக்கு அறிவுரை வழங்குவது ஏற்புடையதாக இல்லை. மேலும், பல அரசுத்துறைகளில் தலித் மக்கள் இட ஒதுக்கீட்டின் மூலம் நுழைய முடியாத நிலை இருக்கிறது. (உம்: பாதுகாப்புத்துறையில் உயரதிகாரம் கொண்ட பதவிகள், உயர் தொழில் நுட்பம் சார்ந்த பதவிகள்)

தேர்தலில் வெற்றிபெற தலித்மக்களின் வாக்குகள் இவர்களுக்குத் தேவையாய் இருக்கிறது. பிரதமரின் வாக்கிலோ தடுமாற்றம் இருக்கிறது.

"அரசியல்வாதிகள் சமுதாயத்தின் புற்று நோய்கள்"

- தேர்தல் கமிஷனர் லிங்டோ

- (நன்றி : தினமணி : 25.12.2003)

*"இந்து சமுதாயத்தின் சாதி அடிப்படை தான் தனது அரசு கட்டமைப்பு வேறுபட்டதாக, தனது சமூக கட்டமைப்பு வேறுபட்டதாக, தனது சமூக கட்டமைப்புக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று கோருகிறது"*

*-டாக்டர் அம்பேத்கர், தமிழ்தொகுதி 17/பக்: 45*

இந்தியாவிலுள்ள ஆதிக்கச் சாதி அரசியல்வாதிகள் அரசியல் சட்டத்தை பேணிப் பாதுகாப்பதற்குப் பதில் 'மநு' சட்டத்திற்குள் அடையாளப்படுத்துகிற போக்குதான் இங்கே நிலவுகிறது. அனைத்து அதிகாரங்களையும் தக்கவைத்துக் கொண்டும், நீதி-நியாயம்-நேர்மைக்கு எதிராகவும் ஆதிக்கச் சாதியினர் இருந்து வருகின்றனர்.

சமூகத்தை சாதி ரீதியில் பிளவுபடுத்தி சுதந்திர-சமத்துவ-சகோதரத்துவத்தை மறுப்பவர்களாக இந்த புற்றுநோய் அரசியல்வாதிகள் இருந்து வருகிறார்கள்.

அரசியல் சட்டத்தினை முறையாக செயல்படுத்துவதில் அரசு அதிகார வர்க்கத்தினருக்கு முக்கிய பங்குண்டு. இவர்களிடமும்கூட இந்த புற்றுநோய் பரவியிருப்பதுதான் கூடுதல் சோகம்.!

மத்திய அரசு பணிகளில் 55,500 பதவிகள் ரத்தாகும்.

- (நன்றி : தினமணி : 24.12.2003)

அத்தியாவசிய பணிகள் அடங்கிய துறைகளைத் தவிர பிற துறைகளுக்கு 1984 முதல் ஆளெடுக்கவும் பணியிடத்தை உருவாக்கவும் தடை இருக்கிறது. ஆனால் மேல் நிலை அதிகாரிகளுக்கான பதவிகள் மட்டும் விதிவிலக்கு. காவு கொடுக்கப்படுவதும் நான்காம் நிலை ஊழியர்களே. செலவுகளை குறைப்பதற்கு அரசு பணிகளைவிட வேறு வழியே இல்லையா?!.

பன்னாட்டு கம்பெனிகளுக்கு சமூக நீதி பற்றிய அக்கறை கிடையாது. வர்ண-தர்ம அடிப்படையில் பார்ப்பனிய-சத்திரிய-வைசியர்களுக்கும் சமூக நீதி பற்றி அக்கறை கிடையாது.

அன்னியச் செலவாணி கையிருப்புகள் ஒருபோதும் இருந்திராத அளவாக 95



படிப்பகம்

www.padippakam.com

பில்லியன் அமெரிக்கன் டாலர்கள், பங்குச் சந்தைகள் 3 ஆண்டுகளில் உயர்நிலை, அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 3 ஆண்டுகளில் மிக உயர்வு எனவும், பளபளவென பிரகாசிக்க இதுபோல ஒரு மேலான காலம் இந்திய மக்களுக்கு இருந்த தில்லை என ஊடகங்களில் அரசு விளம்பரம் செய்கிறது. இதுதான் 'வளர்ச்சி' என கட்ட மைக்கப்படும்போது, சமூக ரீதியில் அடித் தளத்தில் உள்ள மக்களுக்கு இது வீழ்ச்சி தான்.

*தி.மு.க. தலைமையில் முற்போக்கு அணி - (நன்றி தினமணி: 27.12.2003)*

தேசிய முன்னணி - ஐக்கிய முன்னணி - ஐக்கிய தேசிய முன்னணி - தேசிய ஜனநாயக கூட்டணி - மதச்சார்பற்ற அணி - மத நல்லிணக்க அணி - முற்போக்கு அணி -

இப்படியாக தேசியம் - முற்போக்கு - ஐக்கியம் - ஐக்கிய தேசியம், இவர்கள் பேசும் ஜனநாயகம் எதுவும் தலித் மக்கள் மீது தினமும் நிகழ்த்தப்படும் வன்கொடுமை களின் எண்ணிக்கை அளவு குறைத்ததாக பதிவில்லை. மலமும்-சிறுநீரும்-செருப்பும் தலித் மக்களின் அவலத்தை உணர்த்திய வண்ணம் இருக்கிறது. சாதி தீண்டாமையை விட மத நல்லிணக்கம் பற்றிய உரையாடலே அதிகம் கேட்க-படிக்க முடிகிறது.

அரசியல் ஜனநாயகத்தின் ஊற்றே சமூக-பொருளாதார முன்னேற்றத்திலிருந்துதான் உருவாக்கம் பெறுகிறது. ஆனால், இங்கே சாதி-தீண்டாமைக் கொடுமையின் விளை வால் தலித் மக்கள் அரசியல்-சமூக-பொருளாதார தளத்திலிருந்து விலக்கியே வைக்கப்படுகின்ற நிலை.

கூட்டணிகள்-முன்னணிகள் ஆதிக்கச் சாதியினர்களின் நலன்களை முன்னிருத்தி, தலித் மக்களுக்கு அதிகாரத்தில் எவ்வித பங்கும் இன்றி, தலித் மக்களாகவே இந்த ஜனநாயக அமைப்பில் நிலை நிறுத்த முயன்றிருக்கின்றன, முயலுகின்றன.

முற்போக்கு X பிற்போக்கு; மதச்சார்பு X மதச்சார்பற்ற; மதப்பிணக்கம் X மத நல்லிணக்கம் என்பதெல்லாம் வெற்று வார்த்தையாய் அர்த்தமிழந்து உலவும் வேளையில்...! முற்போக்கு அணி?!

●

# இன்றில் வழிந்த நேற்று

■ ப்ரதிபா ஜெயச்சந்திரன்

புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன
துணிகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.
மேசை மேல் தூசு படிந்துள்ளது.
காப்பி மண்டியுடன் காலி தம்ளர்கள்
மின் விசிறி நொண்டி இரைச்சலுடன்
சுற்றிக் கொண்டிருக்கிறது.
கண்ணாடி போத்தல்கள் வரிசையாய் பரணில்
என் பங்கென்று எதுவும் இங்கு இல்லை.
நேற்றின் -
குழந்தைகளின் இரைச்சல்கள்
சகதர்மிணியின் அயல்விழிப் பார்வீச்சு
இரைச்சல்கள், பார்வைகள் -
இடத்தின் இருத்துதலுக்கான
தேர்வை நிர்ணயித்த மனமுடிச்சு! -
வெளியேறத் தயங்கி உரிமை கூரும்
வெளியேறித் திரும்பலில் உப்புச் சிலையாய்!
மீண்டும்
உள்ளிட்டுத் தாழிட்ட கால்கீழ் பெருந்துளை
நிலைவிட்ட கணம் இறங்கி மடியலாம்
எப்போதும்.
நேற்றின் காற்றை உள்ளிழுத்து
இயக்கம் எய்த
புதியதாய்ப் பேருருளை சுவடுகளின்றி.
சுவடுகளற்ற பாதைப் பயணம் சுயமரணம்.
கட்டியங்காரனற்ற மரண வாயில்.
அறைகள் திறக்க
திசையளக்கும் கால்கள்
பீங்கான் கிண்ணத்துச் சூடான காப்பியின்
இதமான கசப்பிய குரல்வளையுடன்
உள் இறங்கி மறைந்தன. ■

## அடுத்த இதழில்...

- கே.ஏ. குணசேகரனின்... **'மழி'** - நாடகம்
- கா. செந்திலின்... **'பள்ளிக் கூடம்'** - சிறுகதை
- காளிமகனின்... **'ஆடும் பெரியாடும்'** - நூல்மதிப்புரை
- ஜே. மோஹனின்... **'கழுவிலேற்றும் வழக்கம் சோழர் ஆட்சியின் கொடூர வரலாறு'**



படிப்பகம்

www.padippakam.com

# தீர்வை நோக்கி...

தலித் - தேசியம்: 9

■ கௌதம சன்னா

தேசிய இனம் பற்றின பல்வேறு பார்வைகள், அவை முன்வைக்கப்பட்ட விதங்கள் என்பவைகளைப் பார்க்கும் போது, பல்வேறு சிக்கல்களைக் காண்கிறோம். குறிப்பாக இதில் இந்திய வழிபட்ட ஒரு பார்வை என்று பார்க்கும் போது இதில் முன்வைக்கப்பட்ட அம்பேத்கரின் கருத்துக்கள் கோட்பாட்டு அடிப்படையில் அணுகக் கூடியதாக இருக்கலாம். ஆனால், அதை நடை முறையில் உரசிப் பார்ப்பதற்கான வாய்ப்பினை பார்க்கவேண்டும். தேசிய இனத்தினை அம்பேத்கர் இரண்டு வகையாக பிரித்திருந்தார் அவை

1) சமூக உணர்வு அடிப்படையிலான தேசிய இனம்
2) சட்ட மற்றும் அரசியல் உணர்வு அடிப்படையிலான தேசிய இனம் (அ.எ.பே. தொ. 1:185)

இந்த இரண்டு பிரிவுக்கும் இடையிலான வேறுபாட்டை மக்கள் அறியாமல் குழப்பிக் கொள்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். மக்கள் பேசுவது சமூக உணர்வு அடிப்படையிலான தேசிய இனம் பற்றித்தான் என்றாலும், இரண்டாம் வகைப்பற்றி குறிப்பிட வேண்டியது அவசியம், ஏனெனில், அதிகார நிர்வாக வசதிக்காக கட்டமைக்கப்படும் இவ்வகை தேசிய இனம் எப்போதும் ஆபத்து நிறைந்ததாக இருக்கிறது.

இந்தவகை தேசிய இனம் அரசியல் ரீதியில் பெரும்பான்மைத் தன்மையுடன் பேரினவாத அடிப்படையைக் கொண்டிருப்பதோடு, இதன் வரலாற்று தன்மையும் மிகவும் தற்காலிகமானதாகும், ஆனால் இது உருவாக்கும் பொது மாயையை எளிதல் விலக்க முடியாததாக இருக்கிறது. எனினும், அம்பேத்கர் முன்னுரிமை அளிப்பது சமூக உணர்வு அடிப்படையிலான தேசிய இனத்துக்குத் தான் என்பது தெளிவு. இது, இப்பிரச்சினையின் அடிப்படை அலகை விளக்குவது என்பதை கொண்டு, இதுவரை பார்த்த வறையறைகளை சுருக்கமாகத் தொகுத்துப் பார்ப்போம்.

இதுவரை விவாதித்த வரையறைகளில் காலாவதியானவையும் உண்டு. ஏற்கெனவே அங்கீகரிக்கப் படாதவைகள் புதிய வேகத்துடன் எழுந்தவையும் உண்டு. மேலும், எதிர்கால வாய்ப்பு உள்ளவையும் உண்டு, இதில் காலாவதியான இனக் கோட்பாடான 'தூய இன வாதம்'என்பது மலை யேறி பல காலம் ஆகிறது. அதற்கு இனி எந்த வருங்காலமும் இல்லையென்பதால் அதை விவாதிப்பதில் இனி பயனும் இல்லை.

தேசிய இனமான அங்கீகரிக்கப்படாமல் இருந்த 'நிறவேறுபாடு கொள்கை' தனக்கான அங்கீகாரத்தைப் பெற்று ஒரு நூற்றாண்டு ஆகிறது. குறிப்பாக மாக்ஸீய சிந்தனையாளர்கள் கொடுத்த கோட்பாட்டு அங்கீகாரத்தையே இது குறிக்கிறது. எனினும் மாக்க்ஸீய அடிப்படையிலான கோட்பாடுகளுக்கும் ஏறக்குறைய இதே அளவு வயதுதான் ஆகிறது என்பதால் இது இன்னும் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. அதோடு, இந்த நிற இனவாதம் உலகின் பண்பாட்டு அடிப்டையிலான இனங்களை கணக்கில் எடுத்துக் கொள்வதற்கான மார்க்ஸீய அடிப்படையை வழங்கியது என்பது கூடுதல் சிறப்பு.

அடுத்து, மொழி, பண்பாடு, மதம் ஆகியனவைகளைப் பார்க்கம் போது, அவை, தனித்தனியாகவும் கூட்டாகவும் இயங்கும் நிலை உலகெங்கும் இருக்கிறது. இதில் முக்கியமானவை. இவ்வடையாளங்களைப் பெற்றவை தங்களை தேசிய இனமாக கருதி எழும் தேவை. இது இல்லை எனில் அந்த அடையாளங்களை கொண்டிருந்தாலும் அதில் பயனேதுமில்லை.

இதில் உள்ள மற்றொரு சிக்கல், தன்னை தேசியமாக கருதிக் கொள்கிற, ஒரு இனத்துக்கு கிடைக்கின்ற வரலாற்றுச் சூழல், அதாவது பிற இனங்களோடும், அதன் பிரச்சினைகளோடும் அது கொண்டிருக்கின்ற தொடர்பு ஆகியன அதை எளிதில் உசுப்பிவிடக்கூடியவை, இது வாய்க்கவில்லையெனில் அதற்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும். ஒருவகையில் இனங்களுக்கு இடையிலான சுமூகமான உறவினால் பிரச்சினையின்றி இருந்து, நாளடைவில் மற்றோர் இனத்தின் பாதிப்பில் அதனுள் கரைந்து, காணாமல் போய் தனது அடையாளங்களை இழந்தவைகள் உண்டு. பண்டைய வரலாற்றில் இதற்கு நிறைய சான்றுகள் உள்ளது.

எனவே, இன அடையாளங்களை காணும் போது அது முதலாண்மை சமூக காலகட்டத்தில் வெளிப்பட்டதென்பதை ஏற்றுக்கொண்டாலும்



படிப்பகம்

www.padippakam.com

அது போதுமானதல்ல, ஏனெனில் அடையாளங்களை வரையறுப்பதற்கான வரலாற்றுப் பார்வையை முழுமையாக வழங்கவில்லை. அதனால் தான் இனம் என்பது மனித குலம் தோன்றிய ஆரம்பகால வரலாற்றிலிருந்து அணுகப்பட வேண்டும் என்பது அவசியமாகியிருக்கிறது.

எனவே இக்கட்டுரையானது, இதுவரை வந்த கருத்துக்களின் சுருக்கம்தான் என்பதால் இனி, எதிர்வரும் கேள்வி முக்கியமானது. அதாவது, தேசிய இனத்தை அடையாளப் படுத்தும் வரையறைகள் எல்லாம் சரிதான், ஆனால் பிரச்சினை என்று ஆரம்பித்தப் பிறகு அதற்கு தீர்வு தான் என்ன? இது எளிதில் முடித்து விடக்கூடிய சங்கதியல்ல, இப்பிரச்சினை குறித்து விவாதித்த சிந்தனையாளர்கள் அத்துனைப் பேருமே அதற்கான தீர்வினைக் குறித்து தீர்க்கமாகவே விவாதித்திருக்கிறார்கள். பல நேரங்களில் அவர்கள் முன் வைத்த தீர்வுகள் துல்லியமானதாகவும், தீர்க்க தரிசனத்தோடும் இருந்தன. இன்னும் சில இடங்களில் அவர்களால் தீர்வினை சொல்ல முடியாமல் அப்பிரச்சினையின் வரலாற்றுப் போக்கில் விட்டுவிட்டதும் நடந்திருக்கிறது. எனினும் நிகழ்கால பிரச்சினைகளுக்கான தீர்வு ளுக்கு கடந்தகால ஆன்மாக்களிடம் கையேந்திக் கொண்டிருக்க முடியாது. அவர்களது அனுபவத்திலும், மேதமையிலும் கூறிய கருத்துகள் ஒளிதரும் கைவிளக்கு என்பதில் ஐயமில்லை. அவர்கள் முன்வைத்த தீர்வுகளை காணுவது அவசியம், அதற்கு முன், முன்பு குறிப்பிட்ட தேசிய இன அடையாளக் கூறுகளோடு கீழ் கண்டவைகளின் அடிப்படையில்தான் தீர்வுகள் முன்வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| ஒடுக்கும் தேசிய இனம் (பேரினவாதம்) | ஒடுக்கப்படும் தேசிய இனம். (இனவாதம்) சிறுபான்மை இனம். (பண்பாடு - மதம், மொழி) |

இவைகளின் அடிப்படையில் முன்வைக்கப் பட்டவை எல்லாம், எல்லாக் காலத்துக்கும் பொருந்தியனவாக இருக்குமா என்பதை ஆராய வேண்டும். பிரச்சினை என்று பார்க்கும் போது, அப்பிரச்சினையானது தோன்றும் போதே, அது தனக்கான தீர்வினையும் உள்ளுறையாகக் கொண்டுதான் தோன்றுகிறது. இத்தீர்வானது நம் பார்வைக்கு நல்லதோ, தீயதோ அதை தீர்மானிக்கக் கூடியவை அப் பிரச்சினைக்குட் பட்டவைகள்தான். இதில் மூன்றாம் நபரின் விருப்பம் என்பதை தேவையற்றது. ஆனால் தீர்வு என்பது இருந்தேத் தீரும். பிரச்சினையை சரியாக ஆய்வுக்குட்படுத்தும்போது, தீர்வினையும் சரியானபடி அடைந்துவிடமுடியும். ஆனால், இதை ஒரு சார்பாக அணுகுவோமானால் எதிரான திசையில் கூட போய்விடக் கூடிய சாத்தியமாமும், இருக்கிறது.

தீர்வு என்று வந்த பிறகு அதற்கான சோதனைகள் இருக்கிறது. அதாவது, தீர்வுக்குட்பட்ட பிரச்சினையானது அதன் விதிபடியான இயக்கத்தினுடே வெளிபடத்தும் தீர்வு. இது எல்லா நிலையிலும் நாம் விரும்பியபடி வாய்க்கும் என்பதை உறுதிசெய்ய முடியாததல்லவா! ஏனெனில் விரும்பக்கூடிய தீர்வானது "லட்சியத் தீர்வாக" இருக்கும் பட்சத்தில், இது விதியை கவனத்தில் கொள்ளவில்லையெனில் லட்சியத் தீர்வினால் பயனேதுமில்லை. எனவே, லட்சிய தீர்வினை சொல்லமுடியாமல், அதனை செயல் படுத்தத்தக்க அளவில் கொள்ள முடியவில்லை எனில் அதற்கு அடுத்த நிலையில் சிறந்த தீர்வினை சொல்ல முடியும். இப்படிப்பட்ட சிக்கல் எழும்போது, "சிறந்த தீர்வினை" கையாள்வதற்கான இரண்டு வழிமுறைகளை அம்பேத்கர் முன்வைத்தார்.

> (அ) லட்சியத் தீர்வுக்கு மிக நெருக்கமாக இருக்கும் மிகச் சிறந்த தீர்வாக அது இருக்க வேண்டும்.
>
> (ஆ) லட்சியத் தீர்வாக தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் ஆற்றலை அது பெற்றிருக்க வேண்டும்.
>
> (மேலது: பக்157)

ஆனால், தீர்வுகளை முன்வைத்தவர்கள் எல்லோரும் லட்சியத்தீர்வினை முன்வைக்க வில்லை. அவர்கள் முன்வைத்ததெல்லாம் ஆய்வின் அடிப்படையிலான சிறந்த தீர்வுகளைத் தான், இச்சிறந்த தீர்வுகளைத்தான் பல இயக்கங்கள் தங்களது லட்சியத் தீர்வுகளாக வரித்துக் கொண்டன. அதனால், பிரச்சினையின் கனம் கூடுதலாக பரிணமித்துவிட்டது. எனவே, தீர்வுகளை ஆய்வுக்கு உட்படுத்தும் போது, இந்த கருத்துக்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். மேலும் தீர்வுகளுக்கு இருக்கக்கூடிய நடைமுறைச் சாத்தியம், எவ்வளவுதான் சிறந்த தீர்வாக இருந்தாலும், அதற்கு நடைமுறை சாத்தியம் இல்லையானால், அடையக்கூடிய லட்சியத் தீர்வாகவே என்றைக்கும் அது நிலைத்து நிற்கும்.

இனி, தீர்வுகளைப் குறித்து பேசுவோம், அதை உரசிப்பார்ப்பதற்கான நடைமுறைக் கல்லோடு.

- தொடரும்.



படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்

■ சிவகாமி

# தலித் குடிகளின் மறுக்கப்பட்ட வரலாறு

ஜாதியைஅழித்தொழிக்கும் தலித் படைப்பு எனத் தொடங்கி தமிழக தலித் வரலாற்றைக் கட்டமைக்க டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் புதிய வரலாற்றுக் கோட்பாடுகளை உள்ளடக்கி, களப்பிறர் காலத்தை ஆதாரமாகக் கொண்டு, சொல்லறிவியலைக் கையாண்டு எழுதப்பட்டுள்ளது இந்நூல். ஆசிரியருக்கு பாராட்டுகள்.

தலித் வரலாறு குறித்து இவர் ஏற்கனவே ஆங்கிலத்தில் நூல் ஒன்றும் எழுதி உள்ளார். "நான் மிகச் சிறந்த வரலாற்றியலனின் மரபில் வழி நடத்தப்படுகிறேன். அத்தகைய சிறந்த வரலாற்றியலன் எல்லா இலக்கிய திரட்டுகளையும் குரூரமானதாகவே கணிக்கிறான்.... புனிதம், தீட்டு என்று பேதப்படுத்தாமல், உண்மையைக் கொணர்ந்ததெடுக்க வேண்டும் என்கிற முனைப்புடன் ஏற்புடையதாக இருக்கும் ஆதாரங்களை (இலக்கியம் உட்பட) ஏற்புடையதாக இருக்கும் ஆய்வு நிபுண விதிமுறைகளால் ஆய்ந்தறியப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படும் திறனுடையவனாக இருக்கிறான். இத்தகைய மரபைக் கையாள்வதில், குறிப்பாக ஹிந்துக்களின் புனித இலக்கியத் திரட்டுக்கான மதிப்பை மதிப்பீடு செய்வதில் ஒரு ஆராய்சியாளர் என்கிற விதத்தில், நான் பாரபட்சம் பார்க்கமாட்டேன்" என்ற அம்பேத்கரின் நடுநிலையோடு.

"வரலாற்றியலரின் கடமை என்பது, தவறானவையிலிருந்து உண்மையானவற்றை பிரித்தெடுப்பதும் மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாதவை எனப்படுபவைகளிலிருந்து சந்தேகத்துக்கு உரியனவற்றை பிரித்தெடுப்பதும் ஆகும்.... தன்னை மற்றவர்கள் கண்ணோக்கும் முன்பே, ஒரு ஆராய்ச்சியாளன் தன்னை நீதிக்கு முன்னால் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நேர்மையினை கைக்கொள்ள வேண்டும்.

தலித் வரலாற்றை எழுதும் ஆசிரியர் ஜே. மோஹன் புத்தம்மத்தின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியோடு அதை தொர்புபடுத்துகிறார்.

*தீண்டாமை தோன்றியது என்ற அம்பேத்கரின் கூற்றுப்படி கி.பி. 400வது வருடத்திற்குப் பிறகு என்பதை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தின் வரலாற்றில் களப்பிறரின்(கி.பி 50 - கி.பி 55) வீழ்ச்சியை தீட்டாமையை ஆரம்பமாகக் காண்கிறார்.*

சங்ககால இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தீண்டாமை நிலவியதற்கான சான்றுகள் இல்லை என்பதும், களப்பிறர் வீழ்ச்சியை ஒட்டி எழுந்த இலக்கியங்கள் மட்டும் பௌத்தர்களையும், சமணர்களையும் இழிவாகக் கருதியதும, இவ்விலக்கியங்கள் புகழ் பெற்றிருந்த சோழர்களின் ஆட்சியிலே தீண்டாமை நிலைப் படுத்தப்பட்டதும் கவனத்திற்குரியது . எனவே வரலாற்று ஆசிரியர் மோஹன் களப்பிறர்கள் என்பவர் களப்பறையர்கள் என்பதாகவேக் கொள்ளப்படவேண்டும் என்கிறார். களப்பிறர் ஆட்சியில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லாதது களப்பிறர்களின் புத்தம்மமுமே வரலாற்று ஆசிரியர்கள் அதை இருண்ட காலம் என்று கணிப்பதற்காக நம்புகிறார்.

ஏறக்குறைய 300 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த களப்பிறர்களைப் பற்றிய சின்னமனூர் செப்பேடு, கோரமங்கலம் கல்வெட்டு, பாகூர் கல்வெட்டு இவற்றிலிருந்து பெரிதாக எதுவும் பெறப்படாத நிலையில் இவர்களைக் குறித்த ஆய்வுக்களைத் தேடி இவர்களில் சமகாலத்ததவரான மற்ற தென்னிந்திய அரசுகள், வடஇந்திய அரசுகளின் சான்றுகளையும் ,தேடிச் சென்றிருக்க வேண்டும். அத்தகைய சான்றுகள் எதுவும் இந்நூலில் ஆய்வில் எடுத்துக் கொள்ளப் படவில்லை மாறாக, சோழர் காலத்து இலக்கியத்திலுள்ள தடயங்களே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஒரே விவசாயத் தொழிலை செய்து வரும் பறையர், மள்ளர் இவர்களிலிருந்து அதே விவசாயத் தொழிலைக்களைக் கொண்ட பிற சாதிகள் இந்தியா முழுவதிலும் இருப்பதினால்



படிப்பகம்

www.padippakam.com

தொழில் அல்லாத ஏதோ என்றுதான் இதன் பாகுபாட்டுக்கான அடிப்படைக் கூறாக இருந் திருக்கமுடியும். இது மொழி அடிப்படையிலோ இது இன அடிப்படையிலோ தோற்றிவிக்கப் பட்டது. அல்ல. எனில் மதம், இனம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொள்ளாது வரு வதும், அது இந்தியாவிலுள்ள அனைத்து இடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது என் பதும் பௌத்தம் தோன்றுவதற்கு முன்பாக சாதி இருக்கவில்லை என்பதும் பெத்தர்கள் காலத்தில் சாதி இருந்ததில்லை என்பதும் பௌத்த வீழ்ச்சியும் தீண்டாமையின் தோற்றமும் ஏறக் குறைய ஒன்றாக இருக்கும்பட்சத்தில் பூர்வ பௌத்தர்களே தீண்டாமைக்கு ஆளாகி இருக்கக் கூடும் என்ற கருத்து உண்டாகிறது. களப்பிறர் காலத்தில் தமிழ் அல்லாத மகட பாஷை ஆட்சி மொழியாக இருந்தது என்பதையும், அவர்கள் காலத்தில் புத்தம் தழைத்தோங்கியது என் பதையும் தீண்டாமை கொடுமை இவர்கள் வீழ்ச்சியை யொட்டி தமிழுலகத்தில் தோன் றியது என்பதையும் கருத்தில் கொண்டு ஆசிரியர் மோஹன் களப்பிறர்களை, களப்பறையர்களாக வரையறுக்கின்றார். இதற்கான ஆதாரங்களை படமொழி இலக்கியங்களிலிருந்து, களப்பிறர் களின் சமகால பிற வரலாற்று ஆய்வுகளில் இருந்தும் பெறப்படவேண்டிய ஒன்று. அது இந்நூலில் முழுமையாக இல்லை என்றாலும் நமது ஊகங்களை வலுப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. தொர்ந்து " தமிழகத்தில் குறுநில மன்னர்களும், சமூகச் சிதைவும்" என்கிற கட்டுரையும் "கழுவிலேற்றும் சோழர் ஆட்சியின் கொடூர வரலாறு" என்கிற கட்டுரையும் இடம் பெறு கின்றன. தேவாரம் எழுதிய சுந்தரர், சம்மந்தர் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எழுதிய தொண்ட ரடிப் பொடியாழ்வார் ஆகிய ஆழ்வார் - நாயன் மார்கள் எவ்வளவு மோசமான கொலைகாரர் கள் என்பது இவற்றை தினம் கோவிலில் படிக்கும் பூசாரிகளுக்கும், இதன் தனித்துவத்தை பட்டிமன்றங்களில் முழங்கிவரும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் அதிர்ச்சியாக இருக்கலாம். அவர்களைக் கொலை காரர்களாகக் காட்டு கின்ற பல்வேறு தேவார, திவ்வியப் பிரபந்தப் பால்களைக் கொண்ட அந்தக் கட்டுரைஅடுத்த இதழில் இடம் பெறலாம்

பிரிட்டிஷ் ஆட்சிகால தலித் விடுதலைக்கு வித்திட்டதாக அடுத்த இரண்டு கட்டுரைகளும் வெளியாகியுள்ளன. அந்நிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலைப்பெற்றும், தலித் விடுதலை என்பது ஒரு நெடுந்தூரப்பயணம் என்பதை " இருட்டடிப்பு செய்வது ஒளிதான் தலித் பார்வை யில் ஈ.வெ. இராமசாமி என்ற கட்டுரை வெளிப்படுத்துகிறது. இந்நெடுந்தூர பயணத்தில் இந்திய முதல் குடிமகன் தேர்வி" என்ற திரு கே. ஆர் நாராயணன் அவர்களை முன்வைத்து ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இறுதியில் தமிழ்படுத்துதலால் தலித் விடு தலைக்கான வரலாறு எழுச்சி பெறாது என்பதை தற்போதுள்ள அரசியல் தலைவர்களின் குளறு படிகள் மூலம் தெளிவுப்படுத்துகிறார் இந்நூல் மறுக்கப்பட்ட தலித் வரலாற்றில் முக்கியமான நூல் என்பதில் ஐயமில்லை.

இவரது மொழிநடை மாமூலான வர லாற்றுப் புத்தகங்களில் ஆண்டுள்ள உரைநடை தவிர்த்து எழுச்சியும் கொள்வதாக உள்ளது குறிப்பிடத்தக்கது. அங்கங்கே வசைபாடலும் நடக்கிறது. இது வரலாற்றாசிரியர்கள் நெஞ்சங் களைச் சுடும் என்றாலும் தவிர்க்கவியலாது.

தலித் வரலாற்றை அறிந்துகொள்ள நினைக் கும் ஒவ்வொரு தலித்துக்கும் இந்நூல் துவக்க மாக இருக்கும் தொர்ந்து வரலாற்றாதாரங் களைத் தேடி இவரது கடும் பயணம் தொடரட் டும். ●

# கால் கலாச்சாரம்

■ ரவி கெங்கன்

பிறந்த நாட்களின் போதும்
திருமண நாள், பண்டிகை நாள் இன்னபிற -
விசேஷ தினங்களின் போதும்
பொன்நகைகள் புதுசாய் அணிகையில்
புதுப்புடவை கட்டுகையில் - என
காரணங்கள் வைத்திருக்கிறாள் பற்பல.
கிழக்கு முகமாக நிற்க வைத்து -
காலில் விழுகிறாள் ஆசிகள் வேண்டி.
அதனதன் பிறந்த நாளின் போது
பிள்ளைகளும் காலில் விழுந்தெழுகின்றன
அவள் செய்கையின் தொடர்வினையாக.
கட்டுச்சாரதம், பிள்ளைகளின் மாற்றுத் துணி,
லஞ்ச் பேக், ஸ்கூல் பேக் , ஆபீஸ் பேக்
காலுறைகள், கழுத்துப்பட்டி, கவர்பால்,
பீரோச்சாவி, டிராயர் சாவி, ஆபீஸ் சாவி,
உள் சாவி, வெளிச்சாவி, வேலைக்காரி அதம்
என ஒரு கூத்துக் கலைஞன் போல்- இருவரும்
ஆபீஸ்போகும் அல்லோல கல்லோலங்களில்
குதித்தாடி - புடவையை தட்டுச் சுற்றாய்
சுற்றினபடி - பின்புறமாய் திரும்பி நின்று
"ஃமே புடவையை கொஞ்சம் இழுத்து விடுங்க"
எங்கையில் அவள் புறங்காலில் நானும்
விழுந்தெழுகிறேன் தினம்.
கலாச்சாரமா? அநாச்சாரமா என்றறியாமலே!



படிப்பகம்

www.padippakam.com

# எதுக்கு பொய் சொல்லனும்

■ நீலவன்



நாங்க சின்னப் புள்ளைங்களா இருக்கும் போதே எங்கம்மா செத்துடுச்சி. எனக்காவது கொஞ்சம் வெவரம் தெரியும். எந்தம்பிக்கு ரெண்டு வயசுதான். எங்கப்பா வெசனப்பட்டாரு. அம்மா இருந்த வரைக்கும் அவரு ஒரு எடத்து ஆளு இல்ல. அவருக்கு பொறுக்கல்-னு பட்டப்பேர் வச்சிருந்தாங்க இனிமே இந்த ரெண்டு புள்ளிவுலயும் எப்படி காப்பாத்தறதுன்னு தெகச்சி போயிட்டாரு. கரும காரியம் முடியங் காட்டியும் சின்னம்மாக்காரி எங்கள கொடும பண்ண ஆரம்பிச்சிட்டா. நாங்க அவங்க வீட்டு வேலக்காரங்க மாரி கஷ்டப்படுத்துனா. அப்பாவுக்கு பொறுக்கல. பதனாராம் நாளு முடிஞ்சதும் எந்தம்பிய தோளு மேல தூக்கிக்கிட்டு, எங் கைய புடிச்சிக்கிட்டு நடையை கட்டினாரு. எத்தனையோ பேரு சொல்லிப் பாத்தாங்க. அந்த ஆட்ல ஈர இல்லன்னுட்டாரு. எம் புள்ளைகல காப்பாத்த எனக்குத் தெரிமுனு நடந்தாரு.

அந்தூருக்கும் எங்கூருக்கும் ரெண்டு மைலு தான் இருக்கும். ஒரு வீட்ல பண்ண வேலக்கி சேந்தாரு. அவங்க மாட்டுக் கொட்டாவ ஒட்டுன மாதிரி எங்குளுக்கு தங்க எடம் தந்தாங்க.

அங்க நாங்க நல்லாவே இருந்தம். அம்மா நெனவேஇல்லாம போற அளவுக்கு அப்பா எங்கள வளத்தாரு. கறி இல்லாம ஒருநாளும் நாங்க சோறு சாப்டது கெடயாது. அணி புள்ளயிலருந்து ஆமை கறி வரைக்கும் நாங்க சாப்டாத கறியே கெடயாது.

அந்தூருல நம்ம சனங்களே கெடயாது. சுத்து வட்டத்துல அந்த ஊருக்கார ஆளுவல துந்துமக் காரங்கன்னு சொல்லுவாங்க. ஆனா எங்குளுக்கு அப்படி தெரியல. அப்பாவுக்கு அங்க நல்லபேரு இருந்துச்சி. அவங்க காலால உட்ட வேலய கையால செஞ்சாரு. சின்னப் புள்ளிவோ மொதக் கொண்டு சாமி சாமின்னு தான் கூப்டுவார்.

எங்க மேல எல்லாருமே அனுசரணையா இருந்தாங்க. உட்டா உடு கேட்டா கேளுங்க, அவங்க ஊட்டுக்காரிவோ கொஞ்சங்கூட வேத்தும பாக்ல. நாங்க போயி நின்னம்னா தின்னுக்குட்டு இருந்ததகூட கக்கி கொடுப்பாங்க. அப்பா வக்கிற ரசத்தையும் கொழம்பயும் ஊத்தி நக்கி பாப்பாங்க. நாங்க வக்கிற கொழம்புலாம் ஒன் கை பக்குவத்துல தூரப் போயிடும்னு பெருமையா சொல்லுவாங்க.

தாந்த சனம்னு தெரிஞ்சும் அவங்க புள்ளிவோ எங்களோட வெளையாடுங்க. செல நெரத்துல எங்க ஊட்ல சாப்டு கூட இருக்குதுங்க. எங்களுக்கு எதபத்தின கவலயும் இல்லாம இருந்துச்சி.



படிப்பகம்

www.padippakam.com

தம்பிக்கு கொஞ்சம் வெனவு தெரிஞ்சிது. அப்பா கூட வேலக்கி போக ஆரம்பிச்சான். நானும் வீட்டு வேலைகளை கத்துக்கிட்டன். இப்பக்கோ பொறக்கோனு பெரியவளாக இருந்தன்.

நா பாக்றதுக்கு குடியானிச்சுவ ஊட்டு புள்ளயாட்டம் இருக்கறதா சொன்னாங்க. எங்கம்மா மாரி நானும் நல்லா கலரா இருந்தன். நல்ல நாள் பெருநாளுக்கு புது உடுப்பு கட்னனா குடியானிச்சுவ நெட்டி முறித்து திஷ்டி கழிப் பாலுவோ. வயசுப் பசங்கள்லாம் என்ன நாட்டுக் கட் டைனு கிண்டல் பண்ணினானுவோ.

அந்த நாள மட்டும் என்னால மறக்க முடியாது. அன்னிக்கு அப்பாவும் தம்பியும் வேலக்கி போயிட்டாங்க. எங்க ஆண்ட மவன் தனியா நா(ன்) ஊட்ல இருந்தப்ப உள்ள வந்தான். படல சாத்துனான். நா எதுக்கு சாத்தறன்னன். அவன பாத்தா வெறி புடிச்சவன் மாரி இருந்தான்.

"நீ ரொம்ப அழகா இருக்க. சினிமாவுல வர்ற நடிக மாரி இருக்க"

"என்னை உனக்கு புடிச்சிருக்கா"

"நா ஒன்ன கல்யாணம் பண்ணிக்கிறன்"

பேசிக்கிட்டே இருந்தான். என்ன பெருமயா பேசுனது எனக்குப் புடிச்சிருந்தது. அவன் திடுதிப்னு ஏன் இப்பிடி பேசறான்னுதான் புரியாம இருந்தது.

திடீர்னு கட்டிப் புடிக்க வந்தான். அப்பதான் எனக்கு ஏதோ புரிஞ்சது. "வெளிய போயிரு. கத்துவன்," நான் அழுவறதுக்கும் ஆரம்பிச்சுட் டன்.

அப்ப பாத்து எங்கப்பா உள்ள நொழஞ்சாரு. அந்தப் பையன் வெலவெலத்துப் போயிட்டான். அப்பா அவன எதுவும் திட்டல. "ஒங்க கொலம் வேற, எங்க கொலம் வேற, நாங்க பொயிக்கறதுல மண்ணல்லி போட்றாதீங்க"னு கெஞ்சினாரு. அவன் தலய தொங்கப் போட்டுகிட்டு வெளியே போயிட்டான்.

அப்பா அடிக்கடி வெளியூருக்கு போயிட்டு வந்தாரு. செல சமயம் ரவ்வு ரொம்ப நேரம் ஆயி வருவாரு. அப்பாவுக்கு பக்கத்தூருல கள்ள பொண்டாட்டி இருக்கானு பக்கத்துல பேசிக் கிட்டாங்க. நாங்க அத பெரிசா எடுத்துக்கல. அப்பாதான் எங்கல எப்பவுமே கஷ்டப்பட வச்சதே இல்ல.

ஒரு நா அப்பாவுக்கு குளுரு ஜொரம். வைத்தியர் வந்து பாத்தாரு. அப்பாவுக்கு ஏதோ பொம்பள நோவுன்னு பேசிக்கிட்டாங்க. கயித மூத்திரம் குடிச்சாதான் சரியாவும்னு சொன் னாங்க. கயித மூத்தரத்த குடிச்சிபுட்டு அப்டி என்ன இந்த உசுற வச்சிக்கனும்னு அப்பா சொன் னாரு.

ரெண்டு நாள்ல ஒடம்பு சரியாயிபுட்ட மாரி அப்பா திரும்பவும் வேல வித்திக்கு போக ஆரம் பிச்சார்.

ஒரு நா ராத்திரி சாப்டும்போது அப்பா ரொம்ப வெசனத்தோட பேசுனாரு.

"நா செத்து கெட்டுப் போயிட்டன்னா யாருமா ஒங்குளுக்கு இருக்கா. செவுனேன்னு நாம் மூனு பேரும் மருந்து குடிச்சிட்டு செத்து ருவமா"ன்னாரு.

நா சரிப்பான்னு சொன்னன். ஆனா தம்பி நாம சாவ வேணாம்பா. என்ன வேணா பண்ண வேலயுல உட்டுட்டு ஒன் ஒடம்ப பாருன்னான்.

அதோட அப்பா அந்தப் பேச்ச உட்டுட் டாரு. தம்பிய எங்கூருக்கே அழைச்சிக்கிட்டு போய் ஒரு ஊட்ல பண்ண வேலக்கி சேத்து உட்டு வந்தார்.

அன்னிக்கி அப்பா ஒரு பாட்லு வச்சிருந்தார். நா என்னப்பா அதுன்னன். உடம்பு நோவுக்கு டானிக்குன்னாரு. நானும் செரி உடம்பு சரியில் லாதவர்தானேன்னு இருந்துட்டேன்.

பொயிது இறங்குற நேரம் பாத்து பாட்ல தொறந்து மடமடன்னு குடிச்சாரு. குடிச்ச வுடனே கை காலுலாம் கோண கோணயா புடிச்சி இழுத்தது. நா கோ கொலியோன்னு சத்தம் போட்டு அழவும் பக்கத்துல இருந்தவங்க ஓடியாந்தாங்க.

பாட்ல பாத்துட்டு 'அட பாவி இன்றிவ குடிச்சிப்புட்டான்னே'னு கருவாட்ட கரச்சி வாயில ஊத்துனாங்க. வாந்தி வந்தா நல்லதுன்னு.

தொண்டயில ஒரு மொடறுதான் எறங் குனுது. டக்குனு நின்னுப் புச்சி.

கதறுனன். அலறுனன். உலகமே இருண்டு போனதா தோணிச்சி.

எங்கூர்லயிருந்து சொந்த பந்தமெல்லாம் வந்து கட்டுலுல வச்சி தூக்கிட்டு போனாங்க.



படிப்பகம்

www.padippakam.com

நானும் அடிச்சி பொரண்டுக்கிட்டு ஓடுனன். அந்தூரு ஆளுகலும் வந்தாங்க.

பொணத்த எறக்கனாங்கலோ இல்லயோ, பஞ்சாயத்த கூட்டிப்புட்டாங்க.

கொஞ்ச வருசத்துக்கு முந்தி எங்கப்பா மாரி பொழைக்கப் போன எங்க ஊர் ஆள் ஒருத்தர் அங்க குடியானிச்சுவ கூட கொஞ்சம் சையோத்தி இருந்திருக்கார். இத தெரிஞ்ச ஆம்பளங்க அவரு தூங்கிக்கிட்டு இருந்த கொட்டாவுக்கு தீ வச்சி உசுரோடயே சாவ அடிச்சிப்புட்டாங்கலாம். ஆனா அதுக்கு ஒண்ணும் சாச்சி இல்லாம போனதால போலிசு கேசு எடுபடல.

அத காரணமா வச்சி, எங்கப்பா சாவுல அவங்கள மாட்டிவிட ஊருக்காரங்க நெனச் சாங்க போலிருக்கு.

என்னெ ரெண்டு பேர் வந்து கூப்டு போய் ஊட்டுக்குள்ள உட்டு எப்டி ஆச்சின்னாங்க.

"மருந்துதான் குடிச்சிப்புட்டாருன்னன்."

"இனிம யாருங் கேட்டா அந்தூருகாரங்க அடிச்சி கொன்னுப்புட்டாங்கன்னு சொல்லு"ன் னாங்க

"ஏ பொட்ட, நாங்க சொல்ற மாரி போலிசுக் கிட்ட சொல்லிப்புட்டன்னா, உனக்கு கட்டு கட்டா பணங் கெடைக்கும்"ன்னாங்க.

"உண்ட ஊட்டுக்கு எப்டி ரெண்டகம் நெனக்கறது, முடியாது"னு கதறுனன்.

என்னெ எப்டி எப்டியோ மெரட்டுனாங்க. நீதான் மாப்ள வச்சிக்கிட்டு ஒப்பன கொல்ல வச்சன்னு சொல்லிப்புடுவம்னாங்க.

எனக்கு பதையா பதைச்சிது. அழுவறத தவிர வேற ஒண்ணுமே என்னால பேச முடியல.

அடிவயிரு சுருர்னு சுட்டமாரி இருந்தது. பாவாடை நசநசத்துப் போயிருந்தது. எனக்கு என்ன ஆச்சின்னு நெனச்சி பாக்கக்கூட முடியல. சின்னம்மாவும் மத்தவங்களும் "அவ சொல்ல மாட்டா. மாப்ளைவுல எப்படி காட்டிக் கொடுப்பா. தெருத் தெருவா பிச்ச எடுத்துதான் சாப்டுவா" துப்புன்னு துப்பினாங்க.

நாலு வீட்டுக்கு பத்துப் பாத்திரம் தேச் சாவது கஞ்சி குடிப்பேன். அத வுட்டுட்டு இல்லாதத என்னால எப்டிதான் சொல்ல முடியும்னுட்டன். ஒக்காந்து செத்த அழக்கூட இல்ல. பொணத்த தூக்கிட்டுப் போனாங்க. ●

---

■ வெ. வெங்கடாசலம்

## குணபலன் ஆருடம்

*அவனை*
*நேரிலோ புகைப்படத்திலோ*
*பார்க்க வேண்டிய அவசியமேதுமில்லை*
*கனிந்த பப்பாளி நிறம்*
*கட்டுடல்*
*கூரிய மூக்கு, செவ்வாய்*
*மற்றும் தனவந்தனென*
*சொல்லக் கேட்பதுவே போதுமானது*
*அவன்முன் எதிர்படும் சாமானியன்*
*நின்றவாக்கில் பதற்றமுற*
*சுலோகங்களால்*
*பிராந்தியங்களை சாம்பல் பண்ணுவான்*
*இன்றளவும்*
*அப்படி இருப்பவன்*
*அப்படிதான் இருக்கிறான்*
*பரிகாரம்; சர்வ*
*ரோகங்கள் விலகி*
*தனங்கள் பேருக*
*நாளைக்கு ஒருமுறையேனும்*
*புத்த நாமம்*
*உருப்போடல் உத்தமம்*
*புத்தம் சரணம்.* ●



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வுப் பதிவு -1

நமது நிருபர்

புதிய கோடாங்கி மாத இதழும் - தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பேரவையும் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டம் புதுப்பட்டினத்தில் 'கற்பி' இயக்க மாணவர்களுக்கு பயிற்சி முகாம் ஒன்றினை 3.1.2004 அன்று நடத்தியது.

முகாமின் முதல் அமர்வில் காஞ்சிபுர மாவட்ட தாட்கோ மேலாளர் அவர்கள், தாட்கோ மூலம் தலித் மக்கள் சுயமாக தொழில் தொடங்க ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பற்றியும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்படுத்தித் தருகிற திட்டங்கள் பற்றியும், மாணவர்கள் தொழிற்கல்வி பயில ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பற்றியும் அவரே முன்னின்று விளக்கினார்.

முகாமின் இரண்டாம் அமர்வில் எழுத்தாளர் குடியரசு அவர்கள் இட ஒதுக்கீட்டு முறையின் அவசியம் குறித்தும், அது தொடர வேண்டிய அவசியம் குறித்தும் டாக்டர் அம்பேத்கரின் அயராத உழைப்பு குறித்தும் பேசினார்.

அடுத்துப் பேசிய முனைவர் ஜே. மோஹன் அவர்கள் தலித் சமூகம் வீழ்ச்சியடைந்த காரணங்களையும், மாணவர்கள் தம்மைப் பற்றியும், தம் சமூகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய தேவையையும் உணர்த்தினார். மேலும் பொய்யும்-புரட்டும் நிரம்பியுள்ள இச்சமூக அமைப்பினை மாற்றிட வேண்டிய அவசியத்தையும் மாணவர்களுக்கு விளக்கினார்.

அடுத்துப் பேசிய எழுத்தாளர் கோபு அவர்கள், கல்பாக்கத்தில் தலித் மாணவர்களுக்கென இயங்கி வரும் 'கற்பி' இயக்கமானது மாணவர்களுக்கு அளித்து வரும் கணினிப் பயிற்சி, டியுஷன் வகுப்புகள், நூலகம் அமைத்தல் பற்றி கூறி இன்றைய காலத்தில் இதன் தேவையை வலியுறுத்தினார்.

அடுத்துப் பேசிய நிகழ் அய்க்கண் அவர்கள் செய்திப் பத்திரிக்கைகள் - தொலைக்காட்சி ஊடகங்கள் தலித் மக்கள் மீது திணிக்கும் மேலாதிக்கத்தையும், வன்முறையையும் கோடிட்டுக் காட்டினார்.

பிற்பாடு பேசிய கௌதம சன்னா அவர்கள், மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட வினாத்தாள்களுக்கு அவர்கள் அளித்த பதில்களை ஆய்வு செய்து நிறை-குறைகளை சுட்டிக் காட்டினார்.

நிறைவுரை ஆற்றிய எழுத்தாளர் சிவகாமி அவர்கள் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி, வாழ்க்கைக்கான கல்வியாக இங்கு இல்லை எனவும், சாதி-தீண்டாமை-பாலியல் வன்கொடுமைகளை களையும் வழிமுறைகள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும் எனவும், கல்வி-கலாச்சாரம் இவைகள் கோயிலின் மூலமே கட்டமைத்துத் திணிக்கப்படுவதை விரிவாக எடுத்துரைத்தார்.

வழக்கறிஞர் வெங்கடேஷ் நன்றி கூற முகாம் நிகழ்வுகள் நிறைவடைந்தன. இம்முகாமினை எழுத்தாளர் கோபு, வழக்கறிஞர் வெங்கடேஷ், சந்திரன், சௌந்திரபாண்டியன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சுமார் 60-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ-மாணவியர்களும், இளைஞர்களும் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

# நிகழ்வுப் பதிவு -2

11.1.2004 ஞாயிறு அன்று சென்னை துரைப்பாக்கத்தில் புதிய கோடாங்கி மாத இதழ்-தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பேரவை - இந்தியன் இலவசக் கல்வி நிலையம் ஆகியவை இணைந்து பெண்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றினை நடத்தியது. முகாமில் காஞ்சிபுரம் மாவட்ட தாட்கோ மேலாளர் அவர் கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைப்பது பற்றியும், சுயஉதவிக் குழுக்களுக்கு தாட்கோ மூலம் கிடைக்கும் கடன் வசதிகள் குறித்தும், பொருளாதார மேம்பாட்டுக்காக தொழில் தொடங்க ஏதுவாக உள்ள திட்டங்கள் குறித்தும், தொழில் நுட்ப - வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சி பெற ஏற்படுத்தியுள்ள வழி முறைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்த அமர்வாக, தமிழ்நாடு SC/ST அரசு ஊழியர் அமைப்பின் செயலர் ஆறுமுகம் அவர்கள், ஒற்றுமையின் தேவையையும், கல்வி பயில வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். பின்னர் பேசிய வழக்கறிஞர் மழைமேனி பாண்டியன் அவர்கள் தலித் மக்களிடையே விழிப்புணர்ச்சியின் அவசியம் குறித்து பேசினார். அடுத்து உரையாற்றிய முனைவர் மோஹன் அவர்கள் சாதி-தீண்டாமை மூலம் வறுமையில் உழலும் தலித் மக்கள் நகரத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ள அவலத்தையும், பண்டைய காலத்தில் தலித் மக்கள் அரசர்களாக வாழ்ந்த வரலாறு உண்டு எனவும் பேசினார். அடுத்து உரையாற்றிய குடியரசு அவர்கள் தலித் மக்கள் வாழுமிடத்தில் உழைப்பு இருப்பதையும், தலித் மக்களை நகரப்பகுதியிலிருந்து தூய்மையை காரணம் காட்டி திட்டமிட்டு இடம் பெயர்த்து கல்வி வேலைவாய்ப்பின்றி ஆக்கிவிடுவதையும் எடுத்துரைத்தார்.

இறுதியாக உரையாற்றிய எழுத்தாளர் சிவகாமி அவர்கள், தலித் மக்கள் கல்வி பயில வேண்டியதன் அவசியம் குறித்தும், தலித் மக்களை விரட்டுவதில் பிற சாதியர் அனைவரும் ஒருங்கிணைந்தே செயல்படுகின்றனர் எனவும், தலித் மக்கள் சுயமேம்பாடு அடைய வேண்டியதன் அவசியம் பற்றியும், பெண்கள் பாலியல் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வின் தேவைப் பற்றியும்; பெண் குழந்தைகள் மீது பெற்றோர்கள் ஆழ்ந்த பற்றுதலுடன் இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

இம்முகாமிற்கு 50-க்கும் மேற்பட்ட மகளிர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமினை இந்தியன் இலவச கல்வி நிலைய பொறுப்பாளர் ராமச்சந்திரன் ஒருங்கிணைத் திருந்தார். பல்வேறு SC/ST அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகள், WORLD VISION அமைப் பினர், எழுத்தாளர் நிகழ் அய்க்கன் ஆகியோர் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

## நிகழ்வுப் பதிவு -3

கடந்த 9.1.2004 வெள்ளியன்று திண்டிவனத்தில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ் தேச பொது உடைமைக் கட்சி, திராவிடர் கழகம், முஸ்லீம் மக்கள் கழகம், நகரக் கல்வி மக்கள் மேம்பாட்டுக் குழு, மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாத், மக்கள் கண்காணிப்பகம் சார்பாக, திண்டிவனம் காவல் நிலையத்தில் நிர்வாணம் ஆக்கப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளான கூட்டேரிப்பட்டு பள்ளிவாசல் மதகுரு (இமாம்) எஸ்.எஸ். முகமது அசன் புகார் மீது சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடவும், திருக்கோயிலூர் டேனிஷ் மிஷன் பள்ளியில் மாணவிகள் கையெலும்பு முறியும் அளவுக்கு பிரம்பால் அடித்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிய பெற்றோர் - த.மு.மு.க பொறுப்பாளர்கள் மீது போடப்பட்ட பொய்வழக்குகளை திரும்பப் பெறவேண்டியும், பழங்குடியினரான மயிலம் வெள்ளை, மொடையூர் கன்னியப்பன், கீழ்சிவிரி சிவகாமி ஆகியோர் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய குற்றவாளிகளை எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989-ல் கைது செய்யக்கோரியும் திண்டிவனம் புது மசூதித் தெருவில் இருந்து பேரணி புறப்பட்டு காந்தி சிலை வந்தடைந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. த.மு.மு.க மாநில செயலர் தமிம் அன்சாரி, பேரா. கல்விமணி மற்றும் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தோர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

## அறிவிப்பு

புதிய கோடாங்கிக்கு சந்தா முதலியவற்றை காசோலை/வரைவுக் காசோலையாக அனுப்புபவர்கள் இனிமேல் ஆசிரியரின் பெயரில் அனுப்பாமல் **'புதிய கோடாங்கி'** (PUTHIA KODANGI) என்ற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆண்டுச் சந்தா முடிவடைந்தோர் சந்தாவை தவறாமல் அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

– ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாக்கம் வகுப்புவாதம் தலித்துகள்

*ஜெர்மனியில் நடைபெற்ற தலித் அரங்கத்தில்*
*அசோக் கே. பார்தி*
*அவர்களால் வாசிக்கப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்*

தமிழில் **ராஜா**

**தலித் என்பவர் யார்?**

தலித் என்னும் வார்த்தை சமஸ்கிருதத்திற்கும் முந்தையதான பாலி மொழியிலிருந்து தோன்றிய சொல். இதற்கு புறக்கணிக்கப்பட்டவர் என்று பொருள். ஹரிஜன் என்றால் கடவுளின் குழந்தைகள் என்ற காந்தியின் வாதத்திற்கு எதிர்மாறான இந்த பதத்தை முதன் முதலில் உபயோகித்தது புரட்சிகர தலித் இளைஞர்களை உள்ளடக்கிய தலித் சிறுத்தைகள் அமைப்புதான். அட்டவணைச் சாதியினர், பழங்குடியினர், நவீன புத்த மதத்தினர், நிலமற்ற ஏழை விவசாயிகள், பெண்கள் மற்றும் அரசியல்-மத ரீதியாக சமூக-பொருளாதார அளவில் சுரண்டப்படுபவர்களை தலித்துகளாகக் கருதியது இந்த அமைப்பு.

தலித் என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட சாதியைக் குறிப்பதல்ல என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக, அது இந்துத்துவத்தின் அடிப்படையான, கொடூர பிராமணியத்தின் கைகளில் சிக்கித் தவித்தவர்களின் ஒன்று சேர்தலைக் குறிக்கிறது. மனிதத் தன்மையில்தான் தலித்துகளுக்கு நம்பிக்கையே தவிர கடவுள், மறு பிறப்பு, ஆன்மா, வேறுபாடுகளைக் கற்பிக்கும் வேதங்கள், விதி, சொர்க்கம் முதலியவற்றில் இவர்களுக்கு சுத்தமாக நம்பிக்கை கிடையாது. ஏனென்றால் இவைதான் அவர்களை அடிமைப்படுத்தின.

ஆனால் இன்றைய நடைமுறையில் தலித் என்றால் தீண்டத்தகாதவர்கள் மட்டும்தான் என்று குறுகிய அளவிலேயே பொருள் கொள்ளப்படுகிறது.

**சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் தலித்துகள்:**

1991-ஆம் ஆண்டின் மொத்த மக்கட்தொகையில் அட்டவணைச் சாதியினர் 16.48 சதவீதத்தையும், பழங்குடியினர் 8.08 சதவீதத்தையும் ஆக்கிரமித்தனர். மொத்தத்தில் 24.56 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ள இவர்கள் எண்ணிக்கையில் மட்டும் முக்கியத்துவத்தைப் பெறவில்லை. பிராமணிய/இந்துத்துவ அமைப்புகளின் பல நூற்றாண்டு அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவதற்காக இன்றும் போராடிவரும் இனம் என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

அட்டவணைச் சாதியினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான சமூக அநீதி, கலாச்சார-பொருளாதாரப் புறக்கணிப்பு முதலியவற்றிற்கு ஒரு வரலாற்று மரபு உண்டு. இந்து மத சாதி அமைப்பின் பிரகாரம் பூணூல் அணியும் உரிமையையும் அதன்மூலம் கல்வியறிவு பெறும் உரிமையையும் உயர்சாதியினரே பெற்றிருந்தனர். இவ்வுரிமைகள் உழைக்கும் வர்க்கமாகிய சூத்திரர்கள், ஆதிசூத்திரர்கள் மற்றும் ஒதுக்கப்பட்டோருக்கு அதிகாரபூர்வமாக மறுக்கப்பட்டன. சமூகம், பொருளாதாரம், அரசியல், நிர்வாகம் முதலிய அனைத்துப் பிரிவுகளிலும் உயர்சாதியினருக்கு பல்வகை சலுகைகளும் அதிகாரங்களும் இருந்து வந்தன. வேதாகமங்களும் இதை ஆமோதித்தன.

பிரிட்டனின் காலனியாதிக்கம் தொடங்கும் வரை இந்நிலை நீடித்தது. ஆனால் ஆங்கிலேயர்களின் காலடி பட்டதும் பொருளாதார கட்டமைப்பில் சில அடிப்படை மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. முதலாளித்துவத்துக்கான விதையும் ஊன்றப்பட்டது. முதன் முறையாக குற்றமும், தண்டனையும் சாதி மற்றும் சமூக அந்தஸ்திலிருந்து பிரிக்கப்பட்டு பொதுவாக்கப்பட்டது. சட்டரீதியான குடிநில உரிமையும் நீதிமன்றங்கள் மூலம் நிலைநிறுத்தப்பட்டன. இவற்றின் காரணமாக ஒவ்வொரு சாதியிலும் தனிநபர்களால் கல்வி பெறவும், சிறிய அளவில் நிலச்சேர்க்கை கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

ஆனாலும் இவற்றின் பயனாளிகள் உயர்சாதியினரிடையேதான் அதிக எண்ணிக்கை யில் இருந்தனர். கீழ்ச்சாதியினரின் முன்னேற்றத்திற்கும், மாற்றத்திற்கும் சட்டங்கள் சில வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த போதிலும், அடிமட்டத்தில் உள்ளவர்களுக்காக அது எந்தவித



படிப்பகம்

www.padippakam.com

சிறப்புச் சலுகைகளையும் அளிக்க வில்லை. எனவே காலனியாதிக்கம் உருவாக்கிய நடுத்தர மற்றும் உயர் வர்க்கத்தில் பெரும்பாலும் உயர்சாதியினரே இடம் பெற்றனர். சுதந்திர இந்தியாவும் காலனியாதிக்கம் உருவாக் கிய, உயர்சாதியினரின் முழு ஆதிக்கத்தைக் கொண்ட அதே சமூக, சட்ட, நிர்வாக வடிவமைப்பு களையே சுவீகரித்தன. புதிதாக உருவாகிய பொருளாதார மற்றும் சமூக அமைப்பில் உயர்சாதியினரின் கையே ஓங்கியிருக்கிறது.

**அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறு வதற்கான போராட்டம்:**

சாதியாதிக்கம் மிகுந்த சமுதாயத்தில் தீண்டத்தகாதார்களும், புறக்கணிக்கப்பட்ட பிரிவினரும் மரியாதையுடன் கூடிய மனித இருப்பைப் பெறுவதற்காக தலித் இயக்கம் கடந்த நூற்றைம்பது ஆண்டு காலமாக போராடி வருகிறது. இவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் ஆரம்பம் முதற்கொண்டு போராட்டம், மாற்றங்கள், மாற்று ஏற்பாடுகள் என்பனவற்றைச் சுற்றிச் சுற்றியே வருகின்றன.

தலித் இயக்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட இலக்கைச் சுட்டிக்காட்டியவர் டாக்டர் அம்பேத்கர். சமுதாயத்தில் தீண்டத்தகாருக்கும் சுயமரியாதையுடன் கூடிய ஒரு இடம் வேண்டும், அதன்மூலம் ஒரு கலாச்சார மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற தொலைநோக்குடன் தன் செயலாக்கத்தை ஆரம்பித்த அம்பேத்கர், இதர உழைக்கும் வர்க்கத்தையும் இணைத்து அனைத்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக் கான ஒன்றுபட்ட போராட்டத்தில் ஈடுபட்டார். தங்களுடைய வலிமையில் தங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டாலொழிய, தீண்டத்தகாதார் மற்றும் புறக்கணிக்கப்பட்டோர்களால் தங்கள் 'விதி'யை மாற்றிக்கொள்ள இயலாது என்றார் அம்பேத்கர். சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய வற்றை ஆதரிக்கும் 'ப்ரபுத்த சமாஜ்' அமைய வேண்டும் என்றும் விரும்பினார் அம்பேத்கர்.

**அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் தலைமை:**

அம்பேத்கருக்குப் பிந்தைய தலைமை அவரின் சமூக-கலாச்சார மாற்றப் பார்வைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் தன் கவனத்தைக் குவித்தது. இதை இந்துத்துவா அமைப்புகள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண் டன. தலித் தலைவர்களையும், தலித் அதிகார மையங்களையும் அவை தங்கள் வயப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தன. இந்துத்துவாவின் வெறித்தனத்திற்கெதிராக போராட்டங்களில் ஈடுபட்டு பாராட்டப்பட்ட பி.பி. மௌர்யா, சங்ப்ரியா கௌதம், கன்ஷிராம், மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான் ஆகிய அனைவரும் ஏதாவதொரு சமயத்தில் இந்துத்துவா அமைப் பின் கூட்டாட்சியாளராக செயல்பட்டுள்ளனர். குஜராத் படுகொலையின் போது இந்தத் தலைவர்கள் எல்லாம் இந்துத்துவா அமைப்பு களோடு தோளோடு தோள் நின்றனர்.

**அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் அமைப்புகள்:**

அரசியலுக்கு அப்பால் உள்ள தலித் அமைப்புகள், தங்களுடைய இலக்கை ஒதுக்கீடு பெறுதல், வன்கொடுமைகளை எதிர்த்தல், அம்பேத்கர் மற்றும் தலித் இயக்கத்தின் சமூக-அரசியல் மதத் தலைவர்களுடன் தொடர்புடைய நாட்களை விழாப்படுத்துதல் என்ற அளவி லேயே நிறுத்திக்கொண்டன. தலித் மற்றும் இதர ஓரங் கட்டப்பட்ட பிரிவுகளை மேலும் ஓரம் கட்டு வதையே தனது குறிக் கோளாகக் கொண்ட அரசாளும் உயர்வர்க்கத்தினரின் புதிய தாராள மயக் கொள்கையின் பயங்கரத்தை இந்த அமைப் புகள் புரிந்து கொள்ளவில்லை. தலித் பெண் களின் பிரச்சினைகளை முன்வைக்கவும் இவர் களால் முடியவில்லை. தலித் இயக்கமும் அதன் தலைமையும் சுற்றுப்புறச்சூழல், பெண்கள் பிரச்சினை போன்ற தற்காலத்திய தேசிய இயக்கங்களிலிருந்து விலகி தனித்து நிற்கிறது. இதன் காரணமாக அரசியல், சமூக இயக்கங் களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை இழந்து வருகிறது.

**புதிய தலித் அமைப்புகள், தலித்துகளின் எழுச்சி:**

தலித் இயக்கத்தின் மகிழ்ச்சியடையத்தக்க ஒரு அம்சம் தங்களுடைய தலித் தொலை நோக்குப் பார்வையைக் கைவிடாமல், அதே சமயத்தில் மதசார்பற்ற, சமத்துவ, குடியாட்சி இயக்கத்தின் முக்கிய வர்க்கமாகவும் விளங்கிய செயல்வீரர்களை அது கொண்டிருந்ததுதான். இந்தத் தலைமை எழுச்சிமிகு தலித் உணர்வு களை, சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூக வடிவமாக மாற்றியமைப்ப தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இந்த புதிய தலைமை தலித்துகளின் சமூக-உளவியல் மாற்றத்தையும், சகோதரத்துவம்-சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அமைப் பினை தோற்றுவிக்கும் வகையில் தங்களுக்கான சமூக, கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்களை அபி விருத்தி செய்வதையும் வற்புறுத்துகிறது.

இந்த இடத்தில் மற்றொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். தலித்துகளின் போராட் டம் சுயமுயற்சியாக இருக்க வேண்டும் என்ற



படிப்பகம்

www.padippakam.com

போதிலும், கூட்டு நடவடிக்கையும் அதற்குத் தேவையாக உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது. அதிகார மற்றும் ஆதிக்கப் பிரிவுகளின் ஆதரவும் ஓரளவிற்கு இதற்குத் தேவையாக உள்ளது.

II

**சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆற்றலளிக்கும் செயல்பாடுகள்:**

சுதந்திர இந்தியாவின் தலித்துகளுக்குக் கிடைத்த வலிமை மிகு ஆயுதம், ஆற்றலளித்தலின் முதல்படி அரசியல் சாசனம். இதனடிப் படையில் தலித்துகளின் சமூக பொருளாதாரச் சுரண்டலைத் தடுப்பதற்கு பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

உடன்பாட்டு நடவடிக்கைக் கோட்பாடு வேலை, கல்வி, அரசியல் மற்றும் இதர பிரிவுகளில் தலித்துகளின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தது. அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக சலுகைகளும், நிதியும் கணிசமாகக் கிடைக்கும் வண்ணம் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன.

**தலித்துகளின் முன்னேற்றம் - ஒரு மதிப்பீடு:**

1922-இல் 1.27 சதவீதமாக இருந்த தலித்துகளின் கல்வியறிவு 1991-இல் 37.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. பல்கலைக் கழக அளவில் எடுத்துக் கொண்டால் 1922-இன் 0.10 சதவீதம் 1986-இல் 7.08 சதவீதம் என உயர்ந்துள்ளது. 1961-இல் 3.29 சதவீதம், 3.16 சதவீதம் என்றிருந்த அட்டவணைச் சாதி பழங்குடிப் பெண்களின் கல்வியறிவும் 1991-இல் முறையே 23.76 சதவீதம், 18.19 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே வாழும் தலித்து களின் அளவு 1977-78இல் 64.6 சதவீதம். ஆனால் 1993-94இல் இது 48.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. மத்திய அரசாங்கத்தில் பணி புரியும் அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கையோ 1961-இன் 3 சதவீதத்திலிருந்து 1992-இல் 10 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**தலித்துகளின் அடையாள உணர்வு:**

சுதந்திர இந்தியாவில் தலித்துகளின் உணர்வு மாற்றங்கள் ஒரு குறிப்பிடத்தகுந்த அம்சமாகும். ஆதிக்க சாதியினரின் கொடுமைகளை எதிர்க்கு மளவிற்கு அவர்களுடைய தைரியமும், நம்பிக் கையும் வளர்ந்தது. புதிதாக சம்பாதித்த இந்த அடையாளம் கடந்த காலத்தின் தீண்டத்தகாதார் என்ற தன்மையிலிருந்து மாறுபட்டது. இரண் டாயிரம்

*தலித் இயக்கமும் அதன் தலைமையும் சுற்றுப்புறச்சூழல், பெண்கள் பிரச்சினை போன்ற தற்காலத்திய தேசிய இயக்கங்களிலிருந்து விலகி தனித்து நிற்கிறது. இதன் காரணமாக அரசியல், சமூக இயக்கங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை இழந்து வருகிறது.*

ஆண்டு காலமாக தலித்துகள் மேற் கொண்ட முயற்சிகள், கடந்த ஐம்பதாண்டு காலத்தில்தான் பயனளிக்க ஆரம்பித்தன. இதற்கு 1950-இல் உரு வாக்கப் பட்ட அரசியல் சாசனம் முக்கிய காரணம். எனவே தலித்துகளின் சமூக பொருளாதார ஆற்றலளித்தலுக்கு அரசு பல வழிகளில் முயற்சி எடுத்துள்ளது என்பதையும், இம்முயற்சிகள் தலித்துகளின் சமூக-பொரு ளாதார சூழ்நிலை களை அபிவிருத்தி செய்வதில் வெற்றி கண்டிருக் கின்றன என்பதையும் நிச்சய மாகக் கூறலாம்.

III

**இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கை:**

இந்தியப் பொருளாதாரத்தின் தாராள மயமாக்கம் 1980-களில் தொடங்கியது. ராஜிவ் காந்தி 1984-இல் ஆட்சிக்கு வந்த பிற்பாடு இது அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முதல் இருந்து வந்த தொழில்சார் உற்பத்திகள் மீது இருந்துவந்த சில தடைகள் 1985-இல் புதிய பொருளாதாரக் கொள்கையின் தாராளமயமாக்கத்தின் மூலம் நீக்கப்பட்டன.

1991 ஜூலையில் இந்தியா கொடுப்பு இருப்பு (Balance of Payments) சிக்கலில் மாட்டிக் கொண்டது. எனவே நரசிம்மராவ் தான் பிரதம மந்திரியாக பதவியேற்றதும் பன்னாட்டு நிதியம்-உலகவங்கி பார்முலாவை அவற்றின் நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தார். இவை கட்டுமான ஒழுங்குசெய் திட்டங்கள் (Structural Adjustment Programmes) எனவும் அழைக்கப்பட்டன. இந்த நிபந்தனைகளை ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டதன் மூலம் இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கம்/உலக மயமாக்கத்தை நோக்கி முழுவீச்சுடன் செயல்பட ஆரம்பித்தது.

**கட்டுமான ஒழுங்குசெய் திட்டம் - வரலாறு:**

கட்டுமான ஒழுங்குசெய் திட்டம் என்ற பதத்தை உலக வங்கியின் தலைவர் ராபர்ட் மெக்நமாரா 1979-இல் உருவாக்கினார். எண்ணெய்ப் பிரச்சினையால் பயங்கர பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவித்த பன்னாட்டு பொருளாதாரச் சூழலுக்கு நிவாரணியாகக் கருதப்பட்ட கட்டுமான ஒழுங்குசெய் திட்டம், சிக்கல் தீர்ந்ததும் பரணில் ஏற்றப்பட்டது. ஆனால் பன்னாட்டு நிதியம் (International Mo-netary Fund) இதை மீண்டும் கையிலெடுத்து நிரந்தரமாக்கியது.

உலக வங்கியின் கட்டுமான ஒழுங்கு செய்கடனை பிலிப்பைன்ஸ் முதன்முதலாகப் பெற்றது. 1980களின் இறுதியில் இந்தியாவையும் உள்ளடக்கிய எழுபது மூன்றாம் உலகநாடுகள் பன்னாட்டு நிதியம் மற்றும் உலக வங்கியின் ஒழுங்குசெய் திட்டங்களில் பங்கெடுத்து விட்டன.

**கட்டுமான ஒழுங்குசெய் திட்டங்களின் நடவடிக்கைகள்:**

- அதிக அளவில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும்விதமாக நாணய மதிப்பைக் குறைத்தல்.
- பணவீக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காக செலவினங்களைக் குறைத்து அதன் மூலம் அரசின் பற்றாக் குறையைக் குறைத்தல்.
- வர்த்தகத் தடைகளைத் நகர்த்து இறக்குமதிகளைத் தாராளமயமாக்குதல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரித்தும், மூலதன மற்றும் நிதிச் சந்தையினை தாராளமயமாக்கியும் அந்நியச் செலவாணி வருமானத்தைப் பெருக்குதல்.
- அரசுத்துறைகளை தனியார் மயமாக்குதல்.
- தனித்துவ சந்தை இயக்கங்களின் மூலம் பொருளாதார வளர்ச்சி பெறுதல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளின் வணிகம், முதலீடு மற்றும் நிதி ஆகிய பிரிவுகளில் அரசின் வரைமுறைகளை நீக்குதல்.

**புதிய பொருளாதாரக் கொள்கை நோக்கமும் விளைவுகளும்:**

மதிப்புக் குறைவு ஏற்றுமதியை அந்நிய விலையில் குறைவாக்குகிறது; அதனால் சர்வதேசங்களுக்கிடையேயான போட்டி அதிகரிக்கிறது. அதே சமயத்தில் இறக்குமதி இந்திய நாணயத்தில் அதிக விலையானதாகி விடுகிறது. இது புதிய பொருளாதாரக் கொள்கையின் கூற்று.

நாணயத்தின் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்த அம்பேத்கர் "ஏறி இறங்கும் ரூபாயின் வர்த்தகம் மற்றும் தொழில்கள் மீதான விளைவுகளைப் பொருத்த வரையில் அதிகம் விரும்பப் படுவது என்னவென்றால் குறைவான பரிமாற்றம் வர்த்தகம் மற்றும் தொழில்களுக்கு ஒரு புதையாக இருப்பதுதான்" என்றார். இதில் கவனிக்கத் தக்க விஷயம் ஒன்று உண்டு. குறைவான பரிமாற்றத்தின் மூலம் லாபம் ஏற்படுகிறது என்றால், எப்பொழுது? இந்த லாபம் ஏற்றுமதி வர்த்தகத்திற்கானது என்று பெரும்பான்மையான தொழில் விற்பன்னர்கள் கருதுகிறார்கள். குறைவான பரிமாற்றம் மொத்த நாட்டிற்கும் சொந்தமான லாபத்திற்கான ஆதாரம் என்று பெருவாரி மக்கள் கருதுகிறார்கள். ஆனால் அந்த குறைவான பரிமாற்றம் என்பது அதிக உள்ளக விலைகளைக் குறைக்கும். எனவே லாபம் என்பது வெளியிலிருந்து கிடைப்பதல்ல. உள்நாட்டிலிருந்து ஒரு வர்க்கத்தை பலிகடா வாக்கிய மற்றொரு வர்க்கத்தின் மூலம் கிடைப்பது. ஏழைத் தொழிலாளி வர்க்கம்தான் பலிகடா வாக்கப்படுகிறது.

**மதிப்புக் குறைப்பு - நோக்கமும் விளைவும்:**

மதிப்புக் குறைப்பின் முக்கிய நோக்கம் வர்த்தக இருப்பை அதிகரிப்பது. இந்நோக்கம் நிறைவு பெற்றதா என்றால் 'இல்லை' என்பதுதான் பதில்.

1991-92இல் இந்தியாவின் பற்றாக்குறை 2.798 பில்லியன் டாலர். 1989-90இல், மதிப்புக் குறைப்பு மற்றும் பல்வேறு சீர்திருத்தங்களுக்குப் பிற்பாடும், இதன் அளவு 17.841 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு அதிகரித்தது. வெளிநாட்டுக் கடன் மார்ச் 1991-இன் 83.8 பில்லியன் டாலரிலிருந்து 2001 செப்டம்பர் இறுதியில் 100.38 பில்லியன் டாலராக உயர்ந்தது.

இரசாயனப் பொருட்கள், பொறியியல் பொருட்கள், ஆடைகளின் ஏற்றுமதி ஓரளவிற்கு அதிகரித்தது. ஆனால் விவசாயம் சார் பொருட்கள், தாது மற்றும் சுரங்க உற்பத்திப் பொருட்கள், தோல்-தோல் சார்ந்த பொருட்கள், சணல்-தென்னை சார் பொருட்கள், கைவினைப்



படிப்பகம்

www.padippakam.com

**கல்வி விலை உயர்ந்த பொருளாக மாறிவிட்டதால், தலித்துகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். 1993-94 இல் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்தவர்களில் கல்வியை இடையில் நிறுத்தியவர்களின் விகிதாச்சாரம் 37.32%. ஆனால், 1999-2000-இல் இது 40.25 சதவீதத்தைத் தொட்டது**

பொருட்கள் முதலியவற்றின் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. 1990-இல் தோல், தோல் சம்பந்தப்பட்ட பொருட்களின் இந்திய ஏற்றுமதி மொத்த உலக ஏற்றுமதியில் 6.3 சதவீதத்தைப் பெற்றிருந்தது. ஆனால் 1998-இல் இது 29 சதவீத மாகக் குறைந்துவிட்டது. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றான பருத்தியின் ஏற்றுமதி பாதிக்கும் கீழாகக் குறைந்துவிட்டது. கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி நான்கில் ஒரு பங்காகக் குறைந்துவிட்டது.

**பற்றாக்குறை:**

புதிய பொருளாதாரக் கொள்கையின் மற்றொரு நோக்கம் பட்ஜெட் பற்றாக் குறையைக் குறைப்பது அல்லது குறைந்தபட்சம் கட்டுப்படுத்துவது. இது எவ்வாறு நிறைவேற்றப் படுகிறது?

முதல் நடவடிக்கை முன்னேற்றச் செலவினங்களைக் குறைத்தல். மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 60 சதவீதமான (1990-91) இவ்வினம் 1999-2000இல் 51.41 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அதே போல் இந்தியாவின் மூலதனச் செலவினமும் GDP இல் 4.4 சதவீதத்திலிருந்து (1990- 91), 1999-2000இல் ரூ.4,112 கோடியாகக் குறைந்தது. இதன் தாக்கம் விவசாய வளர்ச்சியில் எதிரொலித்தது (1990களில் 3.77%; 1998-99இல் 2.42%).

**உலகமயமாக்கம் - அளவற்ற வளமைக்கு வழி?**

இந்தியாவின் வேலைவாய்ப்புப் பிரிவில் உலகமயமாக்கக் கொள்கைகளின் தாக்கம் எதிர்மறை விளைவைத்தான் உண்டாக்கியுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆரம்ப காலமாகிய 1991-இல் முறைப்படுத்தப்பட்ட பிரிவின் மொத்த வேலைவாய்ப்பு வளர்ச்சியின் அளவு 1.44%. அதற்குப்பின் வந்த காலங்களில் (1996-ஆம் வருடத்தைத் தவிர) இந்த வளர்ச்சி விகிதம் குறைந்து வந்து 1999-இல் (-) 0.19%, 2000-இல் (-) 0.17% என மேலும் மேலும் கீழ் நோக்கியே வளர்ந்துள்ளது. பொதுத்துறை நிறுவனங்களிலும் 1991-இல் 1.52% என்றிருந்த வளர்ச்சி 2000-இல் (-) 0.68% என்ற எதிர்மறை வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. தனியார் துறைகளிலும் இதே நிலைதான்.

## IV

**உலகமயமாக்கத்தில் தலித்துகளின் பாதிப்பு:**

இந்திய வரலாற்றில் அரசியல் சாசனத்திற்குப் பிறகு தலித்துகளின் விடுதலை ஒரு சிறந்த உதாரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலையோ, ஏமாற்றம், ஆழ்துயர், சுரண்டல் என்றுதான் தொடர்ந்துகொண்டு இருக்கிறது. பரிவு காட்டுவதற்குப் பதில் துன்பம் கொடுத்தல், நல் வழிகாட்டலுக்குப் பதில் அதிகாரிகளின் பகிஷ்கரிப்பு என்ற நிலைதான் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் நிலவி வருகிறது.

சமுதாயத்தில் பாதிக்கப்பட்டோர்களின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி மாதிரித் திட்டங்கள் மூட்டை கட்டப்பட்டு, அந்த இடத்தில் உலகமயமாக்கம், தாராள மயமாக்கம், தனியார் மயமாக்கம் என்ற புதிய கோட்பாடுகள் உட்புகுத்தப்பட்டன. இந்தப் புதிய கொள்கை தலித்துகளுக்கு பேரிடியாக விழுந்தது. இதனடிப்படையில் அரசு எந்திரம் சிறியதாக்கப்பட்டு, தனியாரிடமும் சந்தையிடமும் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் செயலாக்கம் ஒப்படைக்கப்பட்டது.

**அரசு எந்திரத்தின் அளவு குறைப்பு:**

அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அனைத்துப் பணிகளிலும் முறையே 15%, 7. 5% ஒதுக்கீட்டை அரசியல் சாசனம் அட்டவணைச் சாதியினருக்கும், பழங்குடியினருக்கும் உறுதிசெய்திருந்தது. இந்தச் சலுகையினை தனியார் மயமாக்கக் கொள்கையும், அரசு/பொதுத் துறை நிறுவனப் பணிகளில் 3% குறைப்பு என்ற ஆணையும் பெருமளவில் பாதித்துள்ளது. இதனால் 1992-இல் 1.127 மில்லியன் என்ற அளவில் இருந்த அட்டவணைச் சாதிப் பணியாளர்கள் (பெருக்குபவர்களைத் தவிர்த்து) 1997-இல் 1. 0136 என்று குறைந்து விட்டார்கள் (10.07% வீழ்ச்சி). சீர்திருத்தத்திற்குப் பிந்தையகாலம் என்று எடுத்துக் கொண்டால் 1992-க்கும் 1999-க்கும் இடையில் அரசுப் பணிகள் 3.14% குறைந்துள்



படிப்பகம்

www.padippakam.com

என. ஆனால் தலித்துகளின் எண்ணிக்கையோ 5. 88%, அதாவது இருமடங்கு குறைந்துள்ளது.

**முறைப்படுத்தப்படாத பிரிவில் வேலை வாய்ப்புகள்:**

விவசாயம், மீன்பிடித்தல், காடு வளர்த்தல், சுரங்கத் தொழில், கல் உடைத்தல், கட்டுமானப் பணிகள் முதலியன முறைப்படுத்தப்படாத பிரிவில் அடங்கும். இந்தியாவின் மொத்த வேலைவாய்ப்பில் 92% இங்குதான் உருவாகிறது. தலித்துகள் என்று எடுத்துக்கொண்டால் 1987-88 முதல் 1993-94 வரை இப்பிரிவில் பணிசெய்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் சீர்திருத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் இறங்குமுகம் ஆரம்பித்துவிட்டது. அதுவும் கிராமப் புறங்களில் இதன் பிரதிபலிப்பு அதிகமாக இருந்தது.

சீர்திருத்த காலத்தில் அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் வருடாந்திர வேலை வாய்ப்பின்மை வளர்ச்சி 5. 75%, 6.31% என்றிருந்தது. ஆனால் பொது வேலை வாய்ப்பின்மை வளர்ச்சி விகிதம் இதைவிட குறைவாக 4.74% என்ற அளவில்தான் இருந்தது. அட்டவணைச் சாதியினர், பழங்குடியினரின் வேலை வாய்ப்பின்மை விதிதம் எப்பொழுதும் அதிகரித்தே வந்திருக்கிறது. (1992-93 8.34%, 4.32%; 1999-2000 9.60%, 5.30%)

**கல்வியை இடையில் நிறுத்துதல்:**

கல்வி விலை உயர்ந்த பொருளாக மாறிவிட்டதால், தலித்துகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். 1993-94 இல் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்தவர்களில் கல்வியை இடையில் நிறுத்தியவர்களின் விகிதாச்சாரம் 37.32%. ஆனால் 1999-2000-இல் இது 40.25 சதவீதத்தைத் தொட்டது. இதே காலகட்டத்தில் கல்வியை இடையில் நிறுத்திய பெண்களின் எண்ணிக்கை 39.05 சதவீதத்திலிருந்து 42.28 சதவீதமாக அதிகரித்துள்ளது. தலித் அல்லாத மாணவ, மாணவியர்களை தலித் மாணவ மாணவியருடன் பொருத்திப் பார்க்கையில், தலித் மாணவ மாணவிகளே அதிக அளவில் தங்கள் கல்வியைத் துறந்துள்ளனர். இதுவும் சீர்திருத்தக் காலத்திற்குப் பிந்தையது என்பது குறிப்பிடத்தக்கது.

**நிலச்சீர்திருத்தம்:**

தலித்துகளின் பொருளாதாரத்தில் நிலம் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. ஏனெனில் 81 சதவீத தலித்துகள் கிராமங்களில் வசிக்கின்றனர். இதில் 50 சதவீதத்தினர் நிலமற்ற கூலித்தொழிலாளிகள். 25 சதவீதத்தினர் பெயரளவிற்கு நிலத்தைவைத்துக்கொண்டுவிவசாயம்செய்பவர்கள்.

உலகமயமாக்கக் கொள்கைகள் நிலச்சீர் திருத்த நடவடிக்கைகளை குறிப்பாக நில உச்ச வரம்பு மற்றும் குடிநில உரிமைக் கொள்கைகளை நீர்த்துப் போகச் செய்துவிட்டன. உதாரணமாக ஆந்திரப் பிரதேசத்தில் 1657.17 ஏக்கர் அரசு நிலங்களும், 1360 ஏக்கர் உபரி நிலங்களும் தலித்துகளுக்கும் ஏழைகளுக்கும் கொடுக்கப் படுவதற்குப் பதிலாக தனியார் தொழில் முனைவோர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு, கர்நாடகா போன்ற இதர மாநிலங்களும் இதையே பின்பற்றி வருகின்றன.

**தலித்துகளின் மீதான தாக்கம்:**

தலித்துகளில் ஒரு பகுதியினர் உலக சக்திகளுடன் கூட்டுச் சேர உலகமயமாக்கம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றும், இந்த உலக சக்திகள் இந்தியாவின் சாதி வேற்றுமைக்குத் துணை போகாது என்றும் கனவு காண்கின்றனர். ஆனால் உலகமயமாக்கமோ அல்லது தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளோ தலித்துகளை அவர்களின் சமூக-பொருளாதார அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கவில்லை என்பதை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மாறாக அவர்களின் நிலை மோசமாகித்தான் உள்ளது. காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதும் மேற்கொள்ளப்பட்ட சமூக-பொருளாதார ஆற்றலளித்தல் வழிமுறைகள் தலைகீழாக மாறிவிட்டன. விளைவு - இந்தப் பிரிவினர் நிம்மதியற்றவர்களாகி தங்கள் மனக் கசப்பையும், வெறுப்பையும் உமிழ்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## V

**குஜராத் படுகொலை:**

குஜராத் படுகொலை - பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டுமொரு வன்கொடுமை. இறந்தவர் எண்ணிக்கை 1000 என அரசாங்கத் தகவல் கூறுகிறது. அரசு சாரா தகவல் 2000 இலிருந்து 5000க்குள் என்று தெரிவிக்கிறது. காயமுற்றோர், வேலையிழந்தோர், வீடிழந்தோர்களின் எண்ணிக்கை இதைப்போல் பன்மடங்கு.

1969, 1973, 1980, 1985, 1990, 1992 ஆம் ஆண்டுகளில் எல்லாம் குஜராத் வன்கொடுமையைக் கண்டிருக்கிறது. காலங்கள் வேறானவை போல் காரணங்களும் வேறானவை.

இனக்கலவரத்திற்குப் பெயர்பெற்ற உத்திரப் பிரதேசத்தின் அலிகார் மற்றும் மீரட், பீகாரின் பகல்பூர், மகாராஷ்டிரத்தின் பிவாந்தி போன்ற பிராந்தியங்களே நெடுங்காலமாக அமைதியில்



படிப்பகம்

www.padippakam.com

திளைக்கையில், சமீபத்திய குஜராத் படுகொலை வருந்தத்தக்க வெறிச்செயலாகும்.

**உலகமயமாக்கத்திற்குப் பிந்தைய குஜராத்:**

இனக்கலவரம் கொழுந்துவிட்டு எரியக் கூடிய மாநிலங்களான குஜராத்தும், மகாராஷ்டிராவும்தான் உலகமயமாக்கத்தில் முன்னணியில் இருக்கின்றன. சுதந்திரத்திற்குப்பின் மேற்கிந்தியாவில், குறிப்பாக அகமதாபாத்தில் நெசவுத் தொழில் படுவீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக 1982-இல் 6500 பேர் வேலையிழந்தனர். வேலையிழப்பு படிப்படியாக அதிகரித்து, 1992-இல் 55,000-க்கும் மேற்பட்டோர் வேலையின்றித் தவித்தனர்.

விவசாய மற்றும் உற்பத்தித் தொழில்களிலும் உலகமயமாக்கம் வேலையிழப்பை ஏற்படுத்தியது. பயிர் செய்வோர் எண்ணிக்கை குறைந்து, விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. நகர்ப்புறங்களில் தற்காலிக மற்றும் சுயவேலைத் தொழிலாளர்களிடையே ஏழ்மை அதிக அளவில் தாண்டவமாடியது.

உலகமயமாக்கம், அதிகாரம், வகுப்புவாதம் இவற்றின் குவிமையத்தின் ஒரு சிறுபகுதிதான் குஜராத் வன்முறை. ஏற்கனவே இருந்துவந்த பொருளாதாரச் சிக்கல், 1990-களின் உலகமயமாக்கத்தின் விளைவாக விசுவரூபம் எடுத்து அகமதாபாத்தில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நெசவாலைகளை மூடவைத்துள்ளது. இதன்காரணமாக ஒரு லட்சம் தொழிலாளிகள் வேலையிழந்து உயிர்வாழும் பொருட்டு தினக் கூலிகளாக மாறினர்.

## VI

**இந்துத்துவா:**

தனி இந்து ராஜ்ஜியத்தை ஏற்படுத்த வேண்டும், அதில் பழைய சமூகப் படிநிலைகளைக் கொண்ட பிராமணியத்தைத் திணிக்க வேண்டும் என்பது இந்துத்துவாவின் லட்சியம். தனது கொள்கைகளை மற்றவர் மீது வருத்தித் திணிக்கும் தன்மையுடையது இந்துத்துவா. மக்களைக் கவரும் தெய்வங்களையும், மதச் சின்னங்களையும் வெளிப்படுத்தி கவர்ந்திழுக்கும் கற்பித்தலைப் பின்பற்றுவது இந்துத்துவா.

**இந்துத்துவாவும், உலகமயமாக்கமும்:**

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்தான் இந்துத்துவாவும், உலகமயமாக்கமும். உலகமயமாக்கம் ஏழ்மையையும், தனிமையையும், பாதிப்பையும் விளைவிக்கிறது. இந்துத்துவா மக்களின் கவனத்தை இவற்றிலிருநது திசை திருப்புகிறது. நாடு இதுவரை கண்டிராத அளவு வேலையின்மை, கல்வி இடைநிறுத்தம், தலித் மற்றும் ஏழைகளின் பாதிப்பு முதலியவற்றால் தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்துத்துவா அமைப்புகளோ பழங்காலத்தில் இந்துக்களுக்கு நிகழ்த்தப் பட்ட அநீதிகள் போன்ற சம்பந்தமில்லா பிரச் சினைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றன. ஏழைகளுக்கு எதிரான உலகமயமாக்கத்தை எதிர்ப்பில்லாமல் அமைதியாகச் செயல்படுத்து வதற்கு இந்துத்துவா கையாளும் ஆயுதம்தான் இந்த திசை திருப்பல்.

> **தலித் இயக்கமும் அதன் தலைமையும் சுற்றுப்புறச்சூழல், பெண்கள் பிரச்சினை போன்ற தற்காலத்திய தேசிய இயக்கங்களிலிருந்து விலகி தனித்து நிற்கிறது. இதன் காரணமாக அரசியல், சமூக இயக்கங்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை இழந்து வருகிறது.**

உதாரணமாக 1991 முதற்கொண்டு, பட்ஜெட் போன்ற முக்கியப் பிரச்சினைகள் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வரும் வேளையில், இத்துத்துவா அமைப்புகள் அயோத்திராமர் கோவில், பசுவதை என்று மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அவர்களின் கவனத்தை திசைமாற்றம் செய்து விடுகின்றன.

**இந்துத்துவாவின் மூர்க்கப்போக்கினைத் தடுக்கும் வழிகள்:**

இந்துத்துவா மதம் என்ற போர்வையில் பாசிச, தனித்துவ, ஓரினக் குறிக்கோளுடன் இந்துக்களை அரசியல்ரீதியாக ஒன்றுசேர்த்து வருகிறது. இதை ஒட்டுமொத்தமாக எதிர்த்துச் சமாளிக்க வேண்டுமென்றால், தலித்துகளுக்கான சமூக நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். சாதிவேற்றுமை, சமூக-பொருளாதார சமனின்மை, ஏழ்மை, கல்வி-வேலை-சுகாதாரம் முதலியவற்றில் குறைந்துவரும் வாய்ப்புகள் போன்ற தலித்துகளின் முக்கியப் பிரச்சினை



படிப்பகம்

www.padippakam.com

களில் கவனம் செலுத்த வேண்டும்.

பாசிச நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக மக்களையும், கருத்துக் களையும் ஒன்று திரட்டும் வகையில் விவாத மேடைகளை வலுப்படுத்த வேண்டும். மிக முக்கியமாக தலித்துகளின் அரசியல் நிகழ்ச்சி நிரல் மறுவரையறை செய்யப்பட வேண்டும்.

தலித் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்:

- கலை, இலக்கியம், நாடகம், இசை மற்றும் இதர கலாச்சார வெளிப்பாடுகளுக்கான மாற்று நிறுவனங்களை உருவாக்கி, ஆதரித்து, வலுப்படுத்துதல்
- சமுதாயத்தின் கலாச்சார ஒருமுனைப் படுத்தலுக்கு மாறாக, பன்முக தலித் கலாச்சாரத்தை உறுதி செய்யும் தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலாச்சாரப் பின்னல்களை உருவாக்குதல்.
- தலித் இதழ்கள் மற்றும் செய்தித் தாள்களின் பொருட்செறிவை வலுப் படுத்துதல்.
- தலித்துகளின் வாழ்க்கைப் போராட்டங்களை வெளிக்காட்டும் தலித் எழுத்தாளர்களின் முக்கியப் புத்தகங்களை வெளியிடுதல்

ஆகியவற்றின் மூலம் தலித் கலாச்சாரத்தை வலுப்படுத்த வேண்டும்.

தலித்துகளுக்கான பொருளாதார ஆற்றலளித்தல்:

இறுதியாக, பொருளாதார ரீதியில் தலித்துகள் ஆற்றலளிக்கப்பட வேண்டும். இதற்கு உலகமயமாக்கத்தின் ஏகாதிபத்தியத் தன்மையையும், வகுப்புவாதத்துடன் அதற்குள்ள தொடர்பினையும் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். தலித் தொழில் முனைவோர், தலித் உற்பத்தியாளர்கள், தலித் நுகர்வோர் என்று தலித் வலைப்பின்னலை உருவாக்கி தலித்துகளின் சுயஉதவி, தொழில் முனைவு முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும்.

தரமான கல்வி வாய்ப்புகள் தலித்துகளுக்குக் கிடைப்பதில்லை. இதனால் வள ஆதாரங்களைச் சேகரித்தல், உற்பத்திப் பொருட்களை வியாபாரப்படுத்துதல், தொழில் முனைவு நிர்வாகத்திறமை முதலியவை அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. தலித்துகளின் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கும் எந்த ஒரு செய்கையிலும் இவற்றை ஒதுக்கிவிடக்கூடாது.

## சுயம்

■ விழி. பா. இதயவேந்தன்

எல்லாவற்றையும் சோத்துக்கொண்டு
என்
விலாசத்தில்
உள்ளூர ஊடுருவி
எவை எவையோவென யூகித்து
கற்பனைகளை குதிரைகளில்
பிணைத்தபடி
ஏதோ சலுகை
இன்னபிற எதிர்பார்ப்புக்காய்
நான் அலைவதாய்
நினைத்துக் கொள்கிறாய்.

ஒரு போதும்
சமரசம் ஆகாது
சங்கடங்கள் பலவற்றை
எதிர் கொள்கிறது
என் சுயமரியாதை.

தெரிந்துகொள்:
வேறொன்றின் யாசிப்பில்
உயர்வதில்லை
என் இனிய அடையாளம்.

எனக்கேயான
போர்க்கால முடிவெடுத்தலில்
மண்ணைப் பிளந்தபடி
வேர்கொண்டு எழும்
ஓர் அற்புத முடிவினை
சுமந்திருக்கும்
எனது கம்பீரமான சுயம்.!



படிப்பகம்

www.padippakam.com

முகத்தில் முகம்

# முகத்தில் முகம்

கழனியூரன் எழுதிய பக்கிரிஷா கட்டுரை படித்தேன். மகிழ்ச்சி, நன்றி.

பக்கிரிஷாக்கள் மிகவும் வறியவர்கள். நாடோடிகள். சஞ்சதாரிகள். எளிமை, தூய்மை, பற்றற்ற நிலை இவர்களின் வாழ்வியல் அடையாளங்கள். மேலப்பாளையம், கடையநல்லூர், காயல் பட்டினம், நாகூர் பகுதிகளில் இவர்கள் ஜீவித்தார்கள்.

"தரீக்கா" என்பது ஆன்மீக வழிப்பாதை. மக்களிடையே வீடுவீடாகத் தேடிப்போய் வாசலில் நின்று (திண்ணையில் அமர்ந்து) ஒழுக்க நெறிப்பாடல், சிறுகதைப் பாடல், நையாண்டிப் பாடல், உவமானப் பாடல், நேர்மை, எளிமை குறித்த பாடல்களை ஒருவித ஆன்மீக பக்தி பரவசத்துடன் பாடுவது பக்கீர்களின் அன்றாடப்பணி. இவர்கள் பிச்சைக் காரர்கள் அல்ல.

இவர்களை எந்த முஸ்லீமும், இந்துவும் எள்ளி நகையாடியதே கிடையாது. மிகுந்த வாஞ்சையுடன் அளவிட முடியா மரியாதையுடன் பக்கீர்கள் தமிழ் நாட்டில் நடத்தப்பட்டார்கள். வலம் வந்தார்கள்.

இவர்களுடைய எளிமைக் கோலம் பெரும் மதிப்பை, கலாபூர்வ ரசனையை, நெருக்கத்தை மக்களிடம் ஏற்படுத்தியது. மகளிர் தன்னந்தனியே இருக்கும் நேரத்திலும் பக்கீர்களுக்கு அன்ன ஆகாரம், காசு தந்து கண்ணியப்படுத்துவதுண்டு. கபடம் சிறிதும் இல்லை.

பக்கீர் லெப்பை பள்ளிவாசல் எனும் பெயரில் கிருஷ்ணாம்பேட்டையில் ஒரு மசூதி டாக்டர் நடேசன் சாலையில் கடந்த 50 ஆண்டுகளாக இயங்கிவருகிறது. அதன் மூத்தபள்ளி (தலைவர்) S.M. களிசிஷ்தியை அனுகினால் விபரம் கிடைக்கும்.ங

நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், அரபு நாடுகளின் பண உதவி இவற்றின் காரணங்களால் சில இஸ்லாமிய குழுக்கள் "இஸ்லாத்தை தூய வழியில் முன் வைத்து பிரச்சாரம்" (CLASSICAL ISLAM) என்ற புதிய கருத்தோட்டத்தைப் பரப்பினர். இதனால் தமிழக முஸ்லீம்களின் தொன்மைக் கலை தாயிரா (தப் மேளம்) முற்றிலுமாக அழிந்தது.

பக்கீர்களை தூய இஸ்லாத்திற்குப் புறம்பானவர்கள் என்று கூறி அவர்களின் சொல்லாடல், கதைநேர்த்தி, வாழ்வியல் ஆகியன எள்ளி நகையாடப்பட்டு பின்னுக்குத் தள்ளப்பட்டனர். புறக்கணிக்கப்பட்டனர்.

பக்கீர் விரோத பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பக்கீர்கள் சுருண்டு போனார்கள்; ஒதுங்கி போனார்கள். இது ஒரு சோக வரலாறு. எழுந்து நின்று போராட அரசியல், பொருளியல், சமூக வலிமை வாய்க்கவில்லை. தமிழகப்பாரம்பரிய கலைகளில் பக்கீர்களின் தாயிரா பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது.

ஞானபீடமுமல்ல, குழிவெட்டும் விளிம்பு நிலையுமல்ல. இந்த இரண்டு குறியீடுகளும் மிகவும் அபத்தமானவை. அவர்கள் மேன்மக்கள். உயர் கலைஞர்கள். காமராஜர் காலத்தில் பக்கீர் களை BC பட்டியலில் சேர்த்தனர். இவர்களை MBC பட்டியலில் சேர்க்கலாம். ஆனால் அரசியலில் இவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.

"புதிய கோடாங்கி" இரண்டு பக்கங்கள் ஒதுக்கி பக்கிரிஷாக்களின் வாழ்வியலை வெளிச்சம் போட்டு காட்டியதற்கு இதயப் பூர்வ நன்றி.

பக்கீர்களின் கலையை தொலைக்காட்சி மூலம் பகிரங்கப்படுத்த முன்முயற்சி எடுங்கள்.

**A.M. ரசூல் மொயுதீன்**
**வடலூர்.**

---

முனைவர் க. பஞ்சாங்கம் அவர்களின் 'நவீன கவிதை இலக்கியமும் மாற்றமும்' என்னும் கட்டுரை இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கது. புதுக்கவிதை முன்னோடி சி. மணியைக் குறிப்பிட்டது சிறப்பு. 28.12.2003 அன்றுதான் கவிஞர் சி. மணிக்கு வெளிரங்கநாதன் அவர்களால் 'விளக்கு விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டது. சி. மணி முதல் ந. முத்து வரை அனைவரையும் முனைவர் உள்வாங்கியிருப்பது பாராட்டுதலுக்கும் வியப்பிற்கும் உரியது. முனைவர் குறிப்பிட்டது போல கவிஞர் அப்துல் ரகுமான் வானம்பாடியார் அல்ல. வாணியம்பாடியார். அ. ராமசாமியின் 'பெயரிலும் இருக்கிறது முகவரியிலும் இருக்கிறது' ஒரு வித்தியாசம் ஆன கட்டுரை. இடையிடையே எள்ளல் தன்மை இழையோடியுள்ளது. ப்ரதிபா ஜெயச்சந்திரனின் இல்லா திருத்தல், ஜே. மோஹனின் 'இந்தியா இரண்டு வகைப்படும்' இந்தியாவின் மீதாக கோபத்தை வெளிப்படுத்துகிறது. கழனியூரனின் 'பக்கிரிஷாக்களின் வாழ்வியல்' முஸ்லிம் மதம் சார்ந்தது எனினும் ஓர் அவசிய பதிவு. புதிய கோடாங்கிக்கு நன்றி. பாப்லோ அறிவுக்குயிலின் 'கட்டுவிரியன்' கைவிட்ட கணவன், கையூட்டு கேட்கும் அதிகாரி ஆகியோருக்கு எச்சரிக்கை. நாவம்மாளுக்கு மட்டுமல்ல நமக்கும் 'அதுகள்' நெளிவது போல் இருந்தன.

**பொன்குமார்,**
**சேலம்-6.**

www.padippakam.com



# அணியுங்கள் ஆணுறை, அணுகாது எய்ட்ஸ்.

**பால்வினை நோய்களை இனம் கண்டு கொள்ளுங்கள்.**
**தகுந்த சிகிச்சையினால் அவற்றை வெல்லுங்கள்.**

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
போன் : 28190467. 24 மணிநேர இலவச தொலைபேசி : 1097

Published, Printed and Owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian Salai, canalpuram Road, Neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, New No. 20, ( Old No. 7) Big Street, Anakaputhur - 600 070. Editor : Audrey Jannet Joseph

படிப்பகம்

www.padippakam.com

# 9 கிரகங்களையும் நீங்கள் தரிசிக்க நவக்கிரக சுற்றுலா



வைத்தீஸ்வரன் கோயில் (அங்காரகன்)



திருவெண்காடு கோயில் (புதன்)



கஞ்சனூர் (சுக்கிரன்)



கீழ்பெரும்பள்ளம் (கேது)



ஆலங்குடி (குரு)



திருநள்ளாறு (சனி)



திருநாகேஸ்வரம் (ராகு)



திங்களூர் (சந்திரன்)



சூரியனார் கோயில் (சூரியன்)

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல்வேறு சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. அவற்றில் ஒன்றுதான் நவக்கிரக சுற்றுலா. இச் சுற்றுலா - படுக்கை, சிற்றுண்டி, சொகுசுப் பேருந்தில் சிரமமில்லாத பயணம் ஆகியவை உள்ளிட்டது. இவை எல்லாம் உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற கட்டணத்தில்.

**வாருங்கள். தெய்வீகத் தமிழகத்தின் அழகைத் தரிசித்திடுங்கள்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

வாலாஜா ரோடு, சென்னை - 600 002.

தொலைபேசி: 91- 44 -2538 8785, 2536 1640

ஃபேக்ஸ்: 91- 44 - 2538 2772

E-mail:dir-tour@tn.nic.in

Website: http/www.tamilnadutourism.org

visit us at : www.tn.gov.in

enchanting tamil nadu

experience yourself

● கோயம்புத்தூர் : 0423-2443977 ● மதுரை: 0452-2334757 ● திருச்சி : 0431-2460136
● சேலம் : 0427-2316449 ● தஞ்சாவூர் : 04362-230984

செமெதொ(இ)/105/வரைகலை/2004

Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்